விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk


கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144.
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 ஐப்பசி 08 திங்கட்கிழமை (24.10.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 310

## யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் இன்று அமைதி வழிப் போராட்டம்

### பல்கலையிலிருந்து மாவட்ட செயலகம் வரை பேரணி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் பொலிஸாரால் சுட்டு கொலை செய்யப்பட்டதை கண்டித்து இன்றையதினம் யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் அமைதி வழியிலான போராட்ட பேரணி ஒன்று இடம்பெறவுள்ளது.


இந்த பேரணி இன்றைய திமை காலை 9.00 மணிக்கு யாழ்.பல்கலைக்கழகத்திலிருந்து ஆரம்பமாகி பேரணியாக யாழ். மாவட்ட செயலகம் வரை சென்றடையவுள்ளது.

இந்த பேரணியை அனைத்து பீட மாணவர் ஒன்றியங்களும் இணைந்து ஏற்பாடு செய்துள்ளன.

கடந்த இருபதாம் திகதி கொக்குவில் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் சுன்னாகம் 24ஆம் பக்கம் பார்க்க....

## இரு பொலிஸார் மீது வாள்வெட்டு

### சுன்னாகத்தில் பதற்றம்; இராணுவம் குவிப்பு





23ஆம் பக்கம் பார்க்க....

## மாணவர்களின் படுகொலையை கண்டித்து

# வடக்கில் நாளை பூரண ஹர்த்தால்

## தமிழ் அரசியல் கட்சிகள் கூட்டாக அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் துப்பாக்கி சூட்டில் படுகொலை செய்யப்பட்டதை கண்டித்து நாளை செவ்வாய்க்கிழமை வடக்கில் பூரண ஹர்த்தாலை முன்னெடுப்பதற்கு தமிழ் அரசியல் கட்சிகள் அனைத்தும் கூட்டாக அழைப்பு விடுத்துள்ளன. இதற்கு வடக்கின் அனைத்து வர்த்தக சங்கங்களும் பூரண கடையடைப்பிற்கு ஆதரவு அளித்துள்ளதோடு; அரச, தனியார் பேருந்து சங்கங்களும் தமது சேவைகளை புறக்கணிப்பதற்கு இணங்கியுள்ளன.

(23ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் இன்று கண்டனப் பேரணி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்கள் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டமையைக் கண்டித்து இன்று திங்கட்கிழமை கிளிநொச்சியில் பணிப் புறக்கணிப்புடன் கூடிய பேரணி இடம்பெறவுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளின் பழைய மாணவர் சங்கங்களின் ஒன் 24ஆம் பக்கம் பார்க்க....

## முதலமைச்சராக முஸ்லிமை ஏற்றுக்கொள்ளத் தயார்!

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு இணைப்பு என்பது முதலமைச்சர் பதவியுடன் தொடர்புடைய விவகாரம் அல்ல என எதிர்க்கட்சி தலைவரும் தமிழ் தேசிய கூட்டமைப்பு தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு நகரில் நேற்று முன்தினம் நடைபெற்ற மாகாண தமிழ் இலக்கிய விழாவில் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய அவர், வடக்கு - கிழக்கு இணைந்த பிராந்தியத்தில் படித்த, பண்பான ஒரு முஸ்லிம் முதலமைச்சரைக் 23ஆம் பக்கம் பார்க்க....

## நிலக்கண்ணி வெடியில் சிக்கி குடும்பஸ்தர் ஒருவர் பலி

### மற்றைய குடும்பஸ்தர் படுகாயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கிளாலி பகுதியில் மாடு தேடிச் சென்ற இரு குடும்பஸ்தர்கள் நிலக்கண்ணி வெடியினுள் அகப்பட்ட சம்பவம் ஒன்று நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இதில் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்ததுடன் மற்றைய நபர் படுகாயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகை 24ஆம் பக்கம் பார்க்க....

## படுகொலைக்கு நீதிகோரி லண்டனில் போராட்டம்

(லண்டன்)

யாழ்ப்பாணம் - கொக்குவில் பகுதியில் வைத்து சுட்டுப்படுகொலை செய்யப்பட்ட யாழ்.பல்கலைக்கழக மாணவர்களது படுகொலைக்கு நீதிகோரி லண்டனில் மாபெரும் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

தமிழீழ நாடு கடந்த இளையோர் அமைப்பின் 23ஆம் பக்கம் பார்க்க....

## கொழும்பில் துப்பாக்கிச் சூடு

### 4 பேர் பலி; அச்சத்தில் மக்கள்



(கொழும்பு)

கொழும்பு மட்டக்குளி - சமித்புர பகுதியில் நேற்றையதினம் மாலை இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் பாதாள உலக தலைவர் உட்பட நான்வர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு புறநகர் பகுதியில் நேற்றையதினம் 10க்கும் மேற்பட்டவர்கள் மீது இனந்தெரியாத குழுவல் ஒன்று தாக்குதல் மேற்கொண்டுள்ளது.

இச்சம்பவத்தில் படுகாயமடைந்தவர்கள் உடனடியாக கொழும்பு தேசிய வைத், 04ஆம் பக்கம் பார்க்க...

## முல்லைத்தீவில் இன்று கவனயீர்ப்பு

(முள்ளியவளை)

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களான கஜன், சுலக்சன் ஆகிய இருவரின் படுகொலையை கண்டித்தும் இதற்கு நீதி கோரியும் இன்று திங்கட்கிழமை முல்லைத்தீவு மாவட்ட அனைத்துப் பாடசாலை மாணவர்களையும் பாடசாலை ரீதியாக 23ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

மாணவர்கள் மீதான துப்பாக்கிச் சூடு

# அனைத்து பல்கலைக்கழகங்களிலும் இன்று போராட்டம் நடத்த முடிவு




(யாழ்ப்பாணம்)

பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டின் காரணமாக உயிரிழந்த யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் இருவரின் படுகொலைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று நாட்டின் அனைத்து பல்கலைக்கழகங்களிலும் போராட்டம் நடத்தப்பட உள்ளதாக அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் அழைப்பாளர் லஹிரு வீரசேகர நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்தும் கூறுகையில், உயிரிழந்த சுலக்சன் மரணமானது பொலிஸ் துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் என பிரேதப் பரிசோதனை அறிக்கை வெளியிடப்பட முன்னதாகவே பொலிஸ் உத்தியோகத்தர்களின் பணி இடைநிறுத்தப்பட்டுள்ளது.

அத்தோடு உத்தரவினை மீறி வண்டியை நிறுத்தாது சென்றதால் துப்பாக்கிச் சூடு நடத்தியதாக பொலிஸார் கூறுகின்றனர். இவ்வாறு உத்தரவினை மீறிச் சென்ற அனைவரையும பொலிஸாரினால் துப்பாக்கிச் சூடு நடத்தி கொல்ல முடியுமா?


திடீர் விபத்து ஒன்று ஏற்பட்டது, அதனால் பொலிஸாரின் பணி இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

பொலிஸ் துப்பாக்கிச் சூட்டில் மாணவர் உயிரிழந்ததனை அனைத்து தரப்பினரும் அறிந்திருந்தார்கள். எனினும் வடக்கில் மட்டுமல்ல தெற்கிலும் இவ்வாறு மக்கள் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணிக்கின்றனர், இது ஓர் சாதாரண விடயம் என்று பாதுகாப்புச் செயலாளர் கூறுகின்றார். அவரின் இந்தக் கூற்றினை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. இது ஓர் சாதாரண நிலைமையல்ல; இது ஓர் அசாதாரண நிலைமையாகும்.

வடக்கில் இடம்பெற்ற காரணத்தினால் நாம் இந்த சம்பவத்தை கைவிட்டு விடப்போவதில்லை. மாணவர் கொலை செய்யப்பட்டமைக்கு நீதி வழங்கப்பட வேண்டும் எனக் கோரியும் சம்பவத்திற்கு கண்டனம் தெரிவித்தும் நாடு முழுவதிலும் உள்ள பல்கலைக்கழகங்களில் இன்று 24ஆம் திகதி போராட்டம் நடத்தப்படும்.

இதற்கு அனைத்து பல்கலைக்கழக மாணவர்களும் ஆதரவு அளிக்கவேண்டும் என லஹிரு வரசேகர தெரிவித்துள்ளார். (செ)

# ஜெயசங்கர்-ஜனாதிபதி சந்திப்பு



(கொழும்பு)

இலங்கைக்கு வருகை தந்துள்ள இந்தியா வெளியுறவு துறை செயலர் எஸ்.ஜெயசங்கர் நேற்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்துள்ளார். இந்த சந்திப்பு நேற்று காலை இடம்பெற்றதாக ஜனாதிபதியின் ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் இந்திய வெளியுறவு துறை செயலாளர் எஸ்.ஜெயசங்கர் பிரதமர் உள்ளிட்ட பலரை சந்திக்கவுள்ளார்.

2 நாள் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற கொண்டு அவர் உள்ளிட்ட தூதுக்குழுவினர் நேற்றுமுன்தினம் இலங்கை வந்தடைந்தமை குறிப்பிடத்தக்கது. (செ)

# கொலைகளை மறைக்க மீண்டும் கொலைகள்!

## ராஜபக்ஷவினர் மீது அஜித் பீ பெரேரா சாடல்

(பண்டாரகம)

ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவை கொலை செய்ததாக கூறி இராணுவப் புலனாய்வுப் பிரிவின் ஓய்வுபெற்ற சார்ஜன்ட் மேஜர் ஜயமான்ன தற்கொலை செய்து கொண்டதாகக் கூறப்பட்ட போதும் லசந்த கொலை செய்யப்பட்ட தினத்தில், கொலை நடந்த இடத்தில் இருந்து 100 கிலோ மீற்றர் தொலைவில் மேற்படி அதிகாரி இருந்துள்ளதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாக பிரதியமைச்சர் அஜித் பீ.பெரேரா தெரிவித்துள்ளார். பண்டாரகம பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் கூட்டம் ஒன்றில் பேசும போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்,

ராஜபக்ஷ அரசாங்கத்தில் நடந்த கொள்ளைகள் குறித்து லசந்த விக்கிரமதுங்க தொடர்ந்தும் சாட்சியங்களுடன் எழுதி வந்தார்.

யுத்த காலத்தில் ஊழல் மூலம் நாட்டை எப்படி சுத்தம் செய்தனர் என்பதை சண்டே லீடர் பத்திரிகையில் ஆவணங்களுடன் நம்பிகையான வகையில் தகவல்களை முன் வைத்தார். இதனால், கோபமடைந்து லசந்த விக்கிரமதுங்கவை கொலை செய்தனர்.

கொலை செய்தது மாத்திரமலல விசாரணைகளையும் நடத்தாது பொய்யான கதைகளை பரப்பினர்.

திறமையான எமது பொலிஸ் அதிகாரிகள திறமையாக விசாரணைகளை நடத்தி லசந்தவை கொலை செய்தவர்களை கண்டுபிடித்து கைது செய்து வழக்கை முடிக்க போகும் தறுவாயில், இராணுவ புலனாய்வுப் பிரிவில் பணியாற்றி ஓய்வுபெற்றவர் இறந்து போகிறார்.

நானே லசந்தவை கொன்றேன். சிறையில் இருப்பவரை விடுதலை செய்யுங்கள் என்று குறிப்பு ஒன்றை எழுதி வைத்து விட்டு இறந்து போகிறார்.

இது மிகவும் அதிசயமான கதை..குற்றம் ஒன்றை செய்தவர் மனவருத்தத்தில் தற்கொலை செய்து கொள்ளலாம். கைது செய்யப்படும் முன்னர் தற்கொலை செய்து கொள்ளலாம்.

ஆனால் இப்படியான சந்தர்ப்பத்தில் நானே கொலை செய்தேன் அவர் அல்ல எனக் கூறி தற்கொலை செய்து கொண்டது அனைவரது மனதிலும் சந்தேகத்தை ஏற்படுத்தியது.

இதனால், உண்மையில் தூக்கில் தொங்கி இறந்தாரா அல்லது கொலை செய்யப்பட்டாரா என்று மக்கள் கேட்டனர்.

அதை ஆராய்ந்தபோது கொழும்பு இரத்மலானையில் லசந்த கொலை செய்யப்பட்ட தினத்தில் தற்கொலை செய்து கொண்ட நபர் கொழும்பில் இருந்து 100 கிலோ மீற்றர் தூரத்தில் அவரது கிராமத்தில் இருந்துள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் உறுதியாகியுள்ளது.

அவரது தொலைபேசி அழைப்பு தகவல்கள் மூலம் அவற்றை தற்போது கண்டறிய முடியும்.

அன்று கொலை செய்தவர்கள் அந்த கொலைகளை மறைக்க மேலும் கொலைகளை செய்கின்றனரா என்ற சந்தேகம் தற்போது எமக்கு ஏற்பட்டுள்ளது. இது நியாயமான சந்தேகம்.

இதனை நாங்கள் கூறவில்லை. பொலிஸ் விசாரணைகளின் அடிப்படையில் இந்த சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

அன்று அதிகாரத்தில் இருந்து கொலை செய்தவர்கள், இன்று அதிகாரம் கையில் இல்லாத நிலையில், கொலை குற்றங்களில் இருந்து தப்பிக்கவும் மக்களை தவறாக வழி நடத்தவும் மேலும் கொலைகளை செய்கின்றனரா என்ற நியாயமான சந்தேகம் எமக்கு ஏற்பட்டுளளது என பிரதியமைச்சர் அஜித் பீ. பெரேரா குறிப்பிட்டுள்ளார். (செ)

# மட்டக்களப்பில் விடுதி முற்றுகை

## முன்னாள் மேயர் உட்பட 7 பேர் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரில் பொலிஸார் மேற்கொண்ட விசேட நடவடிக்கையின் போது வீட்டுடன் இணைந்த கட்டடத்தில் முறைகேடாக விடுதியொன்றை நடத்தியதாக சந்தேகத்தின் பேரில் மட்டக்களப்பு மாநகரசபை முன்னாள் முதல்வர் சிவகீதா பிரபாகரன் அவரது கணவர் உட்பட ஏழு பேரை மட்டக்களப்பு பொலிஸார் நேற்று கைதுசெய்துள்ளனர்.

மட்டக்களப்பு பொலிஸ் தலைமையத்தினால் மட்டக்களப்பு நகரில் மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையின் போது மட்டக்களப்பு - திருகோணமலை வீதியில் உள்ள முன்னாள் மேயரின் வீட்டுடன் இணைந்த கட்டடத்தில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை சில தினங்களுக்கு முன்னர் மட்டக்களப்பு நகரில் நடைபெறுகின்ற சட்ட விரோத விடுதி நடவடிக்கைகள் தொடர்பில் கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு மட்டக்களப்பு பிராந்திய பிரதிப்பொலிஸ்மா அதிபருக்கு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதிபதி எம்.கணேசராஜா பணிப்புரைகள் வழங்கியிருந்த நிலையில் இந்த முற்றுகை நடைபெற்றுள்ளது.

முன்னாள் முதல்வர் சிவகீதா பிரபாகரன் மட்டக்களப்பு மாநகர சபை முதல்வராக 2008 தொடக்கம் 2013வரையில் முதல்வராக பதவி வகித்தமை குறிப்பிடத்தக்கது. (செ)

# பொலித்தீன், பிளாஸ்ரிக், இலத்திரனியல் கழிவு ஒழிப்பு வாரம் இன்று ஆரம்பம்

ஜனாதிபதியின் ஆலோசனைக்கமைய மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் கீழுள்ள மத்திய சுற்றாடல் அதிகார சபை செயற்படுத்தும் பொலித்தீன், பிளாஸ்ரிக், இலத்திரனியல் கழிவு ஒழிப்பு வாரம் இன்று தொடக்கம் நாடு முழுவதும் ஆரம்பிக்கப்படுகிறது.

ஒக்டோபர் 30ஆம் திகதி வரை அமுல்படுத்தப்படும் இந்த வாரத்தில் வீடுகளிலும், அலுவலகங்களிலும் பயன்படுத்தி அகற்றப்படும் பிளாஸ்ரிக், பொலித்தீன், மின்னியல் மற்றும் இலத்திரனியல் கழிவுகளை மாவட்ட மட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள சேகரிப்பு நிலையங்களில் ஒப்படைக்கலாம்.

பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் போன்றவை மண்ணுடன் கலந்தால் அவை நீண்ட காலத்துக்கு உக்கிப் போகாதிருக்கும். அதனால் மண்வளம் குன்றுவதுடன், நிலத்தடி நீரும் மாசடையும். அதனைக்கால், டெங்கு போன்ற நுளம்பினால் பரவும் நோய்கள் பரவுவதற்கு ஆங்காங்கே காணப்படும் பிளாஸ்ரிக் காரணமாக இருக்கிறது. பொலித்தீன், பிளாஸ்ரிக் போன்றவற்றுக்கு தீ வைப்பதனால் ஏற்படும் வளிமாசடைதலினால் புற்றுநோய் மற்றும் சுவாச நோய்களுக்கும் மக்கள் ஆட்படுகின்றனர்.

பொலித்தீன், பிளாஸ்ரிக் கழிவுகளால் வடிகால் கட்டமைப்புக்கள தடைப்பட்டு திடீர் வெள்ள அனர்த்தங்களும் ஏற்படலாம்.

அத்தோடு அனைத்து இலத்திரனியல் உதிரிப்பாகங்களிலும பல்வேறு விதமான நச்சு இரசாயனங்கள் அடங்கியிருப்பதனால அவற்றையும உரிய முறையில் அகற்ற வேண்டும்என தெரிவிக்கப்பட்டுள்ளது.(செ-11)

# ஆயுத கலாசாரம் மீண்டும் உருவாக இடமளிக்கக் கூடாது

## யாழ்.அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

மறைந்து போகும் ஆயுத கலாசாரம் மீண்டும் உருவாக இடமளிக்காமல் அனைவரும் பொறுப்புடன் நடக்க வேண்டும் என யாழ்.போதனா வைத்தியசாலை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது

கடந்த 20ஆம் திகதி துப்பாக்கி சூட்டில் இரு பல்கலைக்கழக மாணவர்கள் கொல்லப்பட்டமை தொடர்பாக அவர்கள் அனுப்பியுள்ள கண்டன அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில்,

விபத்துகள், கொலைகள், தற்கொலைகள் என்பவற்றால் தமிழ் சமூகம் சமீப காலமாக பல இளம் உயிர்களை இழந்து வருகிறது.

இவ் இரு பல்கலைக்கழக மாணவரினதும் இழப்பு எம்மிடையே மிகுந்த கவலையையும் மீண்டும் ஆயுத அடக்குமுறை அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது.எமது இரு சகோதரர்களினதும் அவர்களது குடும்பங்களிற்கும் எங்கள் இரங்கல்களை தெரிவித்து கொள்வதோடு மறைந்து போகும் ஆயுத கலாசாரம் மீண்டும் உருவாக இடமளிக்காமல் அனைவரும் பொறுப்புடன் நடக்க வேண்டும் எனவும் விசாரணைகளில் நீதி நிலைநாட்டப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறோம் என அவர்களது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-9)

அறிவித்தல்

எதிர்வரும் 30-ம் திகதி நொதேன் வாரியர்ஸ் விளையாட்டுக் கழகத்தின் சார்பாக இடம்பெற இருக்கும் வலைப்பந்தாட்டப் போட்டியில் பங்குபெற விரும்பும் அணிகள் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.



T.P : 077 6872 865
076 3255 229

டிவிகன் ரெக்ஸ்ரைல்ஸ்

73, நீராவியடி, யாழ்ப்பாணம்.

இந்தியாவில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்து வாடிக்கையாளரின் நலன் கருதி (மொத்த/சில்லறை) மாபெரும் விலைத்தள்ளுபடி. 29.10.2016 அன்று வரை பெற்றுக்கொள்ள முடியும்.

சி.அருட்குமார்

0777 200 143

(6187)

# இலங்கை மீனவர்கள் இந்தியாவில் கைது!

(கொழும்பு)

இந்திய கடற்பரப்பில் சட்ட விரோதமான முறையில் மீன்பிடியில் ஈடுபட்ட இலங்கை மீனவர்கள் மூவரை தனுஷ்கோடி பகுதியில் வைத்து கடற்படை பொலிஸார் நேற்று கைது செய்துள்ளனர்.

மண்டபம் கடற்படைப் பொலிஸார் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த போதே இலங்கை பிரஜை மூவரையும் கைது செய்துள்ளனர்.

இதேவேளை, குறித்த மீனவர்கள் மண்டபம் கடற்படை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

மேலும், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# காற்றழுத்த தாழமுக்கத்தால் கனமழை பெய்யும் சாத்தியம்

(கொழும்பு)

வங்காள விரிகுடாவில் உருவாகியுள்ள காற்றழுத்த தாழமுக்கம் காரணமாக, கனமழை பெய்யக்கூடிய சாத்தியக்கூறுகள் அதிகம் இருப்பதாக வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது.

இருப்பினும் இதன் காரணமாக இலங்கைக்கு நேரடி பாதிப்பு இருக்காது என்றும் நாட்டின் தென், மேல் மாகாணம், மத்திய மாகாணம் மற்றும் வட மாகாணங்களில் கனமழை பெய்யக்கூடிய வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் வடக்கு, மேல், மத்திய, சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி, மாத்தறை ஆகிய மாவட்டங்களிலும் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் எனவும் வானிலை அவ தான நிலையம் அறிவித்து ள்ளது.

கடற்படையினர் மற்றும் மீனவர் சமுதாயங்களை அவதானத்துடன் செயற்படு மாறும் வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது. (இ-7)

# இலங்கை படையினருக்கு செக் குடியரசில் பயிற்சி

இலங்கை பாதுகாப்பு படை உறுப்பினர்களுக்கு எதிர்காலத்தில் பயிற்சிகளை வழங்கி இரண்டு நாடுகளுக்கு இடையிலான பாதுகாப்பு தொடர்புகளை அதிகரிக்க தேவையான உதவிகளை வழங்குவதாக செக் குடியரசின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜாகோப் லேண்டோவிஸ்கி தெரிவித்துள்ளார்.

செக் குடியரசின் விசேட அழைப்பின் பேரில் அந்நாட்டில் நடைபெறும் மாநாட்டில் கலந்து கொண்ட பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தனவுடனான சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

இலங்கையின் பாதுகாப்பு நிலைமைகள் குறித்து தெளிவுபடுத்திய இராஜாங்க அமைச்சர், இலங்கையின் தற்போதைய அரசாங்கத்தின் கீழ் இனங்களுக்கு இடையில் சகவாழ்வு மற்றும் நாட்டுக்குள் ஏற்படுத்த போகும் அபிவிருத் தித் திட் டங்கள் குறித்தும் விளக்கியுள்ளார். (இ-7)

# நிதி மோசடியை நிறுத்திய பிரதமர்

(கொழும்பு)

**மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் மூன்றாம் கட்ட நிர்மாணிப்பு பணியின் ஊடாக மேற்கொள்ளப்பட விருந்த பாரிய நிதி மோசடி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் தடுக்கப்பட்டுள்ளது.**

அமைச்சரவை வழங்கிய அனுமதியை மீறி மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் மூன்றாம் கட்ட நிர்மாணிப்பு ஒப்பந்தத்தை ஜப்பானின் Taisei Corporation நிறுவனத்திற்கு வழங்கி, அதன் ஊடாக மேற்கொள்ளப்படவிருந்த பாரிய நிதி மோசடி ஒன்றை தடுப்பதற்கு பிரதமர் தலையிட்டுள்ளார்.

தேசிய கொள்முதல் வழிகாட்டுதல்களுக்கமைய கட்டாயப்படுத்தப்பட்டுள்ள கேள்வி மனு பத்திரங்களை ஒப்படைக்காமல், Taisei நிறுவனம் குறித்த திட்டத்தை செயற்படுத்துவதற்காக நிதி ஆதரவு பெறுவதற்கு ஜப்பானின் Mitsubishi வங்கியை தெரிவு செய்துள்ளது.

அங்கு இலங்கை பிரதிநிதியாக முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன மஹேந்திரனின் மருமகனான அர்ஜுன் அலோசியஸ் செயற்படுகின்றார்.

நிதி உதவிக்காக குறித்த வங்கியை தெரிவு செய்வதற்கும், ஜப்பான் தூதுவர் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைவருக்கு இடையில் மேற்கொண்டு இரகசிய ஆவண கொடுக்கல் வாங்கல் பாரிய நிதி மோசடிக்கு திட்டமிட்டுள்ளதாக, கடந்த ஆறாம் திகதி ஆதாரங்களுடன் தகவல் வெளியாகியிருந்தன.

மத்திய நெடுஞ்சாலையின் மூன்றாம் கட்ட நிர்மாணிப்பு விலைமனுவில் நெருக்கடி என வெளியாகியிருந்த அந்த செய்தியினால் குறித்த தரப்பு குழப்பமடைந்துள்ள நிலையில் கடந்த ஒக்டோபர் மாதம் 10ஆம் திகதி ஜப்பான் தூதரக பிரதானிகள், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்துள்ளனர்.

இதன்போது டோக்கியோ மிட்சுபிஷி வங்கியினால் வழங்கப்படவுள்ள பில்லியன் டொலர் நிதியுதவி மற்றும் முற்பணமாக வழங்கப்பட்ட 100 மில்லியன் டொலர் தொடர்பிலேயே அங்கு கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனினும் குறித்த ஒப்பந்தம் தொடர்பில் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ள முடியாதென பிரதமர் தெரிவித்துள்ளார்.

அதன் பின்னர் பொருளாதார உபகுழு, ஜப்பான் நிதியின் கீழ் மத்திய நெடுஞ்சாலை நிர்மாணிப்பை இரத்து செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது. Mitsubishi நிறுவனத்திற்கு குறித்த நிதியை செலுத்த முடியும் என ஜப்பான் தூதரகத்தின் பிரதானியான இசும் பிரதமரிடம் தெரிவித்துள்ளார்.

அதற்கு பிரதமர் எவ்வித கருத்தையும் வெளியிடவில்லை என ஜப்பான் தூதரக தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ-7)

# ஜனாதிபதி விரைவில் ஈரானுக்கு விஜயம்

இஸ்லாமிய குடியரசுடனான உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த ஆண்டின் இறுதிப் பகுதியில் ஈரான் பயணமாகவுள்ளதாக ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி நவம்பர் அல்லது டிசெம்பர் மாதங்களில் ஈரான் பயணிக்கவுள்ளார்.

இந்த விஜயத்தின் போது, ஈரான் ஜனாதிபதி ஹசன் ரூஹானியை சந்தித்து இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில் கலந்துரையாடல்களை மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை,தாய்லாந்து பாங்கொக் நகரில் இடம்பெற்ற ஆசிய ஒத்துழைப்பு உச்சி மாநாட்டில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் ஈரான் ஜனாதிபதி ஹசன் ரூஹானி ஆகியோர் சந்தித்துள்ளனர்.

மேலும் இந்த சந்திப்பின் போது, விரைவில் ஈரானுக்கு விஜயம் செய்யுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு ஈரான் ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார்.

இதேவேளை, மசகு எண்ணெய் வழங்குவதன் மூலம் இலங்கையின் பொருளாதாரத்திற்கு ஈரான் ஒத்துழைப்பை வழங்குகிறது. உமா ஓயா திட்டத்திற்காக ஈரான் அதிக உதவிகளை இலங்கைக்கு வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அமைச்சர் மலிக் சமரவிக்கிரமவை உடனடியாக கைது செய்ய வேண்டும்

அசாத் சாலி காட்டம்



சர்வதேச வர்த்தக விவகார அமைச்சர் மலிக் சமரவிக்ரமவை கைது செய்ய வேண்டும் என தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத் சாலி தெரிவித்துள்ளார்.

கடந்த 20 மாதங்களில் மலிக் சமரவிக்ரம செய்த ஊழல், மோசடிகள் குறித்து விசாரணை நடத்துமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் அவர் இதனை தெரிவித்துள்ளார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட் சியில் மாத்திரமல்ல ஐக்கிய தேசியக் கட்சியில் உள்ள திருடர்கள் தொடர்பாகவும் விசாரணை நடத்த வேண்டும். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட் சியினருக்கு மாத்திரம் இந்த விசாரணை ஆணைக்குழு நியமிக்கப்படவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியில் உள்ள திருடர்களுக்கும் சேர்த்தே இந்த ஆணைக்குழு நியமிக் கப்பட்டுள்ளது.


நான் பிரதமராக இருந்தால், அரசாங்கத்தில் உள்ள 6 பேரை கைது செய்வேன் என பேராசிரியர் சரத் விஜேசூரிய தெரிவித்தார்.

இவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு நாங்கள் கோரினோம் ஆனால், அது நடைபெறவில்லை எனவும் அசாத் சாலி மேலும் தெரிவித்தார். (இ-7)

# சிறு அனல் மின் உற்பத்தி நிலையம் அமைப்பதற்கு அரசாங்கம் திட்டம்

நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையத்தின் பாதிப்புக்களால் ஏற்படும் அசௌகரியங்களை தவிர்ப்பதற்கு சிறு அனல் மின் உற்பத்தி நிலையமொன்றை அமைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதனை அமைப்பதற்கான நடவடிக்கை தற்பொழுது கலந்துரையாடல் மட்டத்தில் காணப்படுவதாக மின் சக்தி எரிசக்தி அமைச்சின் அபிவிருத்திப் பணிப்பாளர் சுலக்ஷன ஜயவர்தன தெரிவித்துள்ளார். (இ-7)



# எயார் பஸ் ஒப்பந்தம் தொடர்பில் சுவிஸ் அரசு விசாரணை செய்யும்

ஸ்ரீலங்கன் விமான சேவையுடன் ஏற்படுத்திக் கொண்ட, பிரான்ஸின் எயார் பஸ் நிறுவனத்துடனான எயார் பஸ் ஒப்பந்தத்தில் இடம்பெற்றதாக கூறப்படும் ஊழல் தொடர்பில் ஆராய்வதற்கு சுவிஸ் விசாரணைக் குழுவொன்று அடுத்த மாதம் இலங்கை வரவுள்ளது.

ஸ்ரீலங்கன் விமான சேவையுடனான ஏயார்பஸ் ஒப்பந்தத்தில் ஏதாவது ஊழல் இடம்பெற்றுள்ளதா என்பது தொடர்பில் இலங்கை அரசாங்கம் தனியாக ஆராய்ந்து வரு கின்றது.

எயார்பஸ் ஒப்பந்தத்தை வெற்றி கொள்வதற்கு முறைகேடாக மூன்றாம் தரப்பு முகவர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதா? என்ற சந்தேகம் தொடர்பில் இங்கிலாந்தின் தீவிர மோசடி அலுவலகம் (SFO) கடந்த ஓகஸ்ட் மாதம் முதல் விசாரணை மேற்கொண்டு வருகிறது.

எயார்பஸ் பிரச்சினை தொடர்பில் சுவிஸ் தொடர்புபடுவது குறித்து உயர்மட்ட அரசாங்க தகவல் வட்டாரங்கள் உறுதி செய்துள்ளது. எனினும் சுவிஸ் ஏன் தொடர்புபடுகின்றதென்பது தொடர்பில் இன்னமும் தெரியவரவில்லை.

கடந்த ஸ்ரீலங்கன் விமான நிர்வாகம் A350 ரக சொகுசு எயார் பேருந்துகளை அதிக விலைக்கு கொள்வனவு செய்தமை குறித்து குற்றம் சுமத்தப்பட்டிருந்தன.

கடந்த வாரம் எயார்பஸ் A350 ரகத்தைச் சேர்ந்த நான்கு விமானங்களை வாங்குவதற்கான ஒப்பந்தத்தை ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனம் இர த்துச் செய்வதால், அதற்காக அபராத தொகையொன்றை செலுத்தவுள்ளதாக ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் நிறுவன த்தின் தலைவர் அறிவித்திருந்தார்.

இந்த நிலையில் சுவிஸ் விசாரணை அதிகாரிகள் திறைசேரி, பிரதமர், பொது முயற்சி அபிவிருத்தி அமைச்சு (MPED) மற்றும் நிதிக் குற்றங்கள் விசாரணை பிரிவை சந்திக்கவுள்ளதாக தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதற்கமைய முறைகேடுகளுடன் தொடர்புடையவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு அவர்கள் நடவடிக்கை மேற்கொள்வார்கள் என தெரிய வருகின்றது. (இ-7)

# முன்னாள் தளபதிகள் 5 பேரிடம் விசாரணை; சட்டமா அதிபருக்கு விரைவில் அறிக்கை

(கொழும்பு)

இறுதி யுத்தத்தின் போது பணியாற்றிய படைத் தளபதிகள் ஐந்து பேருக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வரும் விசாரணைகள், பாதுகாப்புத் துறை நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் சிக்கல் நிலைமையொன்றை தோற்றுவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பல்வேறு குற்றச்சாட்டுக்களின் பேரில் நிதி மோசடி தொடர்பான பொலிஸ் விசாரணைப் பிரிவு மற்றும் இரகசியப் பொலிஸ் திணைக்களம் என்பன இந்த விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றன.

முன்னாள் கடற்படைத் தளபதிகளான திசர சமரசிங்க, வசந்த கரன்னாகொட, ஜயநாத் கொலம்பகே, ஜயந்த பெரேரா மற்றும் முன்னாள் இராணுவத் தளபதி தயா ரத்நாயக்க ஆகியோர் இவ்வாறு விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

அரசியல் நடவடிக்கைகளுடன் தொடர்புபடல், அவன்கார்ட் நிறுவனத்துக்கு உதவுதல், 5 மாணவர்களுடைய காணாமல் போதல், இராணுவ படையின் நலன்புரி விடயங்களுக்கு [illegible] நிறுவனத்திடம் 50 [illegible] யன் ரூபா பெற்றுக் கொண்டமை போன்ற விடயங்கள் தொடர்பில் இவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

மேற்படி குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் வாக்கு மூலம் வழங்க வந்த ஒரு பாதுகாப்புப் பிரிவு அதிகாரி, முன்னாள் பாதுகாப்பு பிரதானிக்கு 3 இலட்சம் ரூபா பெறுமதியான றொலெக்ஸ் சுவிஸ் கைக்கடிகாரம் ஒன்றை வழங்கியுள்ளமை தொடர்பிலான தகவலும் வெளியாகியுள்ளது.

குறித்த பாதுகாப்புத் துறை பிரதானிக்கு எதிராக பாதுகாப்புத் துறை அதிகாரி இரகசியப் பொலிஸாரிடம் வாக்கு மூலம் வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

முன்னாள் இராணுவத் தளபதிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களுக்குப் பின்னால் முன்னாள் பாதுகாப்பு பிரதானியொருவர் காணப்படுவதாக பாதுகாப்பு தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வாக்கு மூலம் பெறப்பட்ட முன்னாள் பாதுகாப்பு பிரதானி தொடர்பில், சட்டமா அதிபருக்கு அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

# சதம் விளாசினார் ஹோலி: இந்தியா அசத்தல் வெற்றி



நியூசிலாந்துக்கு எதிரான 3ஆவது ஒரு நாள் போட்டியில் விராட் ஹோலி சதம் விளாச, இந்திய அணி 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணி அங்கு 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் பங்கேற்கிறது.

முதலிரண்டு போட்டி முடிவில் தொடர் 1:1 என தொடர் சமநிலையில் இருந்தது.

இந்நிலையில் மூன்றாவது போட்டி நேற்று பஞ்சாப்பில் உள்ள மொஹாலியில் நடந்தது.

நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணித் தலைவர் தோனி களத்தடுப்பை தேர்வு செய்தார். இந்திய அணியில் மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை. நியூசிலாந்து அணியில் டீவ்ரிச் நீக்கப்பட்டு நீஷம் வாய்ப்பு பெற்றார்.

### லேதம் அரைச்சதம்

நியூசிலாந்து அணிக்கு கப்டில், ரொம் லேதம் ஆரம்பம் கொடுத்தனர். கப்டில் 27 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். ஜாதவ் 'சுழலில்' அணித் தலைவர் வில்லியம்ஸன் (22) சிக்கினார். சிறப்பாக செயலபட்ட லேதம் அரை சதம் கடந்தார். அமித் மிஸ்ரா 'சுழலில்' றோஸ் ரெய்லர் (44) ஆட்டமிழந்தார். கோரி அண்டர்சன் (6), ரோஞ்சி (1) ஒற்றை இலக்கில் திரும்பினர். ஜாதவ் பந்தில் லேதம் (61) சிக்கினார். சான்ட்னர் 7, சௌதி 13 ஓட்டங்கள் எடுத்தனர்.

### நீஷம் அசத்தல்

பின் இணைந்த ஜிம்மி நீஷம், ஹென்றி ஜோடி இந்திய பந்து வீச்சை பதம் பார்த்தது. உமேஷ் பந்துவீச்சில் இரண்டு பவுண்டரி அடித்த நீஷம் அரை சதம் கடந்தார். இவர் 47 பந்தில் 57 ஓட்டங்கள் விளாசினார். போல்ட் (1) விரைவில் வெளியேற, நியூசிலாந்து அணி 49.4 ஓவர்களில் 285 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. ஹென்றி (39) ஆட்டமிழக்காமல் இருந்தார். இந்திய அணி சார்பில் அதிகபட்சமாக உமேஷ், கேதர் ஜாதவ் தலா 3 விக்கெட்டுக்கள் வீழ்த்தினர்.

### ஹோனி சதம்

பின் களமிறங்கிய இந்திய அணிக்கு ரகானே (5) அதிர்ச்சி தந்தார். ரோகித் சர்மா 13 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். பின் இணைந்த ஹோலி, தோனி ஜோடி சிறப்பாக விளையாடியது. சான்ட்னர் பந்தை சிக்சருக்கு பறக்கவிட்ட தோனி ஒரு நாள் அரங்கில் 9 ஆயிரம் ஓட்டங்களை எட்டினார். இந்த இலக்கை பிடித்த 3ஆவது விக்கெட் காப்பாளர் என்ற பெருமை பெற்றார். அதிரடியாக செயல்பட்ட இருவரும் அரை சதம் கடந்தனர். தோனி 80 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். விராட் ஹோலி 26ஆவது சதம் அடித்தார். மணிஷ் பாண்டே ஒரு பவுண்டரி அடிக்க, இந்திய அணி 48.2 ஓவர்களில் 289 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. ஹோலி (154), மணிஷ் பாண்டே (28) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

போட்டியின் ஆட்டநாயகனாக அதிரடிச் சதம் விளாசிய இந்திய அணியின் ஹோலி தெரிவானார்.

இவ்வெற்றியின் மூலம் இந்திய அணி 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் 2:1 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது. (க)

## பரபரப்பான கட்டத்தில் சிட்டாஹொங் டெஸ்ட்

# வெற்றி இங்கிலாந்துக்கா? பங்களாதேஷுக்கா?

இங்கிலாந்து - பங்களாதேஷ் அணிகள் மோதிவரும் சிட்டாஹொங் டெஸ்ட் தற்போது இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது.

இங்கிலாந்து வெற்றி பெற 2 விக்கெட்டுக்களும் பங்களாதேஷ் வெற்றி பெற 33 ஓட்டங்களும் தேவையாக உள்ளதால் வெற்றி யார் பக்கமும் சாயலாம் என்பதால் நாளைய 4ஆம் நாள் ஆட்டம் சுவாரஷ்யமிக்கதாக மாற்றமடைந்துள்ளது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பாட்டம் செய்த இங்கிலாந்து அணி முதல் இன்னிங்ஸில் 293 ஓட்டங்களைக் குவித்தது.

பங்களாதேஷ் அணியின் பந்து வீச்சில் 18 வயதான அறிமுக சுழல் பந்து வீச்சாளர் மெஹெதி ஹசன் 6 விக்கெட்டுக்களை வீழ்த்தி முத்திரை படைத்தார்.

தொடர்ந்து பங்களாதேஷ் அணி முதல் இன்னிங்ஸை தொடங்கியது. தொடக்க வீரர் தமீம் இக்பால் (78), விக்கெட் காப்பாளரும் அணித் தலைவருமான முஷ்பிகுர் ரஹீம் (48), மஹமதுல்லா (38) ஆகியோரின் ஆட்டத்தால் பங்களாதேஷ் முதல் இன்னிங்ஸில் 248 ஓட்டங்கள் எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. பங்களாதேஷ் அணி தனது கடைசி 6 விக்கெட்டுக்களை 28 இழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இங்கிலாந்து அணியின் பந்து வீச்சில் பென் ஸ்ரோக்ஸ் 14 ஓவர்கள் வீசி 26 ஓட்டங்கள் மட்டுமே கொடுத்து 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

45 ஓட்டங்கள் முன்னிலையுடன் 2ஆவது இன்னிங்ஸை தொடங்கிய இங்கிலாந்து 62 ஓட்டங்கள் எடுப்பதற்குள் 5 விக்கெட்டுக்களை இழந்து தத்தளித்தது.

எனினும் 6ஆவது விக்கெட்டுக்கு பென் ஸ்டோக்ஸ் உடன் பேர்ஸ்டோவ் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி இங்கிலாந்து அணியை சரிவில் இருந்து மீட்டது. அணியின் ஓட்ட எண்ணிக்கை 189ஐ தொட்ட போது 47 ஓட்டங்கள் எடுத்த நிலையில் பேர்ஸ்டோவ் இஸ்லாம் ரஃபி பந்தில் ஆட்டம் இழந்தார். 6ஆவது விக்கெட்டுக்கு இந்த ஜோடி 127 ஓட்டங்கள் குவித்தது. பேர்ஸ்டோவ் ஆட்டமிழந்த சிறிது நேரத்தில் 85 ஓட்டங்கள் எடுத்த நிலையில் பென் ஸ்ரோக்ஸ் ஆட்டமிழந்தார்.

நேற்று முன்தினம் 3ஆவது நாள் ஆட்டநேர நிறைவில் இங்கிலாந்து அணி 8 விக்கெட் இழப்புக்கு 228 ஓட்டங்கள் எடுத்திருந்தது. கிறிஸ் வோக்ஸ் 11, பிரோட் 10 ஓட்டங்களுடன் களத்தில் உள்ளனர்.

நேற்று 4ஆவது நாள் ஆட்டம் நடந்தது. தொடர்ந்து விளையாடிய பிரோட் அதே 10 ஓட்டங்களுடன் ரன்அவுட் ஆகி வெளியேறினார். அடுத்த வந்த கரேத் பட்டி 3 ஓட்டங்களில் ஆட்டமிழக்க, இங்கிலாந்து 2ஆவது இன்னிங்ஸில் 240 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து 285 ஓட்டங்களால் முன்னிலை வகித்தது.


வோக்ஸ் 19 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார். பங்களாதேஷ் அணி சார்பில் சஹிப் அல் ஹசன் அதிகபட்சமாக 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பங்களாதேஷ் அணிக்கு வெற்றி இலக்காக 286 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டது. சுமார் 170 ஓவர்களில் 286 ஓட்ட இலக்கு என்பதால் நம்பிக்கையுடன் பங்களாதேஷ் 2ஆவது இன்னிங்ஸில் களம் இறங்கியது.

தொடக்க வீரர்களாக தமீம் இக்பால், இம்ருல் கெய்ஸ் ஆகியோர் களம் இறங்கினர். தமீம் இக்பால் 9 ஓட்டங்களில் ஆட்டம் இழந்தார். இம்ருல் கெய்ஸ் 43 ஓட்டங்கள் சேர்த்தார். அதன்பின் வந்த மொமினுல் ஹக்யூ (27), மெஹ்முதுல்லா (17), சஹிப் அல் ஹசன் (24) ஓரளவிற்கு நம்பிக்கையூட்டும் ஓட்டங்களைச் சேர்த்தனர்.

ஒரு கட்டத்தில் பங்களாதேஷ் அணி 5 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 140 ஓட்டங்கள் எடுத்திருந்தது. கைவசம் 5 விக்கெட்டுக்கள் உள்ள நிலையில் 146 ஓட்டங்கள் மட்டும்தான் தேவை என்பதால் ஆட்டத்தில் பரபரப்பு ஏற்பட்டது.

6ஆவது விக்கெட்டுக்காக அணித் தலைவர் முஷ்பிகுர் ரஹிம உடன் சபீர் ரஹ்மான் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி தன்னம்பிகையுடன் விளையாடியது. இதனால் பங்களாதேஷ் அணியின் ஓட்ட எண்ணிக்கை 200ஐத் தாண்டியது. இதனால் இங்கிலாந்து வீரர்கள் பதற்றமடைந்தனர்.



பங்களாதேஷின் ஓட்ட எண்ணிக்கை 227 ஓட்டங்களைத் தொட்டபோது இந்த ஜோடி பிரிந்தது. இதனால் இங்கிலாந்து பெருமூச்சுவிட்டது. முஷ்பிகுர் ரஹிம் 39 ஓட்டங்கள் எடுத்த நிலையில் பட்டி பந்தில் ஆட்டம் இழந்தார். இந்த ஜோடி 6ஆவது விக்கெட்டுக்கு 87 ஓட்டங்கள் சேர்த்து நம்பிக்கை அளித்தது.

முறுமுனையில் விளையாடிய சபீர் ரஹ்மான் சிறப்பாக விளையாடி அரைசதம் அடித்தார். கைவசம் 4 விக்கெட்டுக்கள் உள்ள நிலையில் 59 ஓட்டங்கள் தேவைப்பட்டன.

அடுத்த வந்த மெஹெதி ஹசன் (1), கம்ருல் இஸ்லாம் ரஃபி (0) என அடுத்தடுத்து ஆட்டம் இழந்தனர். இதனால் 238 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்டுக்களை இழந்து பங்களாதேஷ் அணி நெருக்கடி நிலைக்குத் தள்ளப்பட்டது.

அடுத்த இரண்டு விக்கெட்டுக்களை எளிதில் வீழ்த்தி விடலாம் என்று இங்கிலாந்து நினைத்தது. ஆனால் 9ஆவது விக்கெட்டுக்கு களம் இறங்கிய தைஜுல் இஸ்லாம் சபீர் ரஹ்மான் உடன் ஒட்டிக் கொண்டார். இதனால் 4ஆவது நாள் ஆட்டம் முடியும் வரை இருவரும் மேலும் விக்கெட் இழக்காமல் பார்த்துக் கொண்டனர்.

நேற்றைய 4ஆவது நாள் ஆட்டநேர நிறைவில் பங்களாதேஷ் 8 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 253 ஓட்டங்கள் எடுத்துள்ளது. சபீர் ரஹ்மான் 59, தைஜுல் இஸ்லாம் 11 ஓட்டங்களுடன் களத்தில் உள்ளனர்.

இரு அணிகளுக்கும் வெற்றி வாய்ப்பு சரிசம அளவில் உள்ளது. நாளைய ஆட்டத்தில் பங்களாதேஷ் அணிக்கு 90 ஓவர்கள் உள்ளது. இதனால் நிலைத்து நின்றாலே 33 ஓட்டங்களை எட்டி விடலாம்.

ஆனால் இங்கிலாந்து வீரர்கள் உடனடியாக பங்களாதேஷின் விக்கெட்டுக்களை வீழ்த்தி தமது வெற்றிக்கு முயற்சி செய்வார்கள். இதனால் ஆட்டத்தில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. (க)

# தீவுகளை வதைக்கும் பாகிஸ்தான்

அபு தாபியில் நடைபெற்று வரும் பாகிஸ்தானுக்கு எதிரான 2ஆவது டெஸ்டில் மேற்கிந்தியத் தீவுகள் 224 ஓட்டங்களில் சுருண்டு பொலோ-ஒன் ஆனது.

பாகிஸ்தான் - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான 2ஆவது டெஸ்ட் கிரிக்கெட் அபு தாபியில் நடைபெற்று வருகிறது.

நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 452 ஓட்டங்களைக் குவித்தது. அனுபவ வீரர் யூனிஸ் கான் அபாரமாக விளையாடி 127 ஓட்டங்கள் அடித்தார். மிஸ்பா உல் ஹக் 96, அசாத் ஷபிக் 68 ஓட்டங்கள் சேர்த்தனர்.

பந்துவீச்சில் மேற்கிந்திய தீவுகள் அணி சார்பில் வேகப்பந்து வீச்சாளர் கேப்ரியல் 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

தொடர்ந்து முதல் இன்னிங்ஸை தொடர்ந்த மேற்கிந்தியத் தீவுகள் அணி 2ஆவது நாள் ஆட்ட நேர நிறைவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 106 ஓட்டங்களை எடுத்திருந்தது. பிஷ்ஷோ, பிளாக்வுட் ஆகியோர் ஓட்டம் ஏதும் எடுக்காமல் களத்தில் இருந்தனர்.

நேற்று 3ஆவது நாள் ஆட்டம் தொடங்கியது. பிளாக்வுட் 8 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டம் இழந்தார். பிஷ்ஷோ 20 ஓட்டங்கள் எடுத்த நிலையில் பெவிலியன் திரும்பினார். அதன்பின் வந்த சேஸ் (22), ஹோப் (11), கேப்ரியல் (13) ஓரளவுக்கு எடுத்த ஓட்டங்களுடன் அணித் தலைவர் ஹோல்டர் ஆட்டமிழக்காமல் எடுத்த 31 ஓட்டங்கள் துணையுடன் மேற்கிந்தியத் தீவுகள முதல் இன்னிங்ஸில் 224 ஓட்டங்களில் சுருண்டது.

பந்துவீச்சில் பாகிஸ்தான் அணி சார்பில் யசீர் ஷா 4, வேகப்பந்து வீச்சாளர் ரஹட் அலி 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

முதல் இன்னிங்ஸில் பாகிஸ்தானை விட 228 ஓட்டங்கள் குறைவாக எடுத்ததால் மேற்கிந்தியத் தீவுகள் பொலோ-ஒன் ஆனது.

இதனால் தொடர்ந்து மேற்கிந்தியத் தீவுகள் 2ஆவது இன்னிங்ஸை தொடங்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், பாகிஸ்தான் பொலோ-ஒன் கொடுக்காமல் 228 ஓட்டங்கள் முன்னிலையுடன் 2ஆவது இன்னிங்ஸை தொடங்கியது.

ஷமி அஸ்லாம், அசார் அலி ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள். ஷமி அஸ்லாம் 50 ஓட்டங்கள் எடுத்த நிலையில் கேப்ரியல் பந்தில் ஆட்டம் இழந்தார். அதன்போது பாகிஸ்தான் ஒரு விக்கெட் இழப்புக்கு 93 ஓட்டங்கள் எடுத்திருந்தது.



அடுத்து அசார் அலியுடன் அசாத ஷபிக் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி 3ஆவது நாள் ஆட்டம் முடியும் வரை மேலும் விக்கெட் இழக்காமல் பார்த்துக் கொண்டது. 2ஆவது இன்னிங்ஸில் பாகிஸ்தான் ஒரு விக்கெட் இழப்புக்கு 114 ஓட்டங்கள் எடுத்துள்ளது. அசார் அலி அரைச்சதம் கடந்து 52, அசாத ஷபிக் 5 ஓட்டங்களுடன் களத்தில் உள்ளனர்.

9 விக்கெட்டுக்கள் கைவசமிருக்கும் நிலையில் பாகிஸ்தான் 342 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கிறது இன்னும் 160 ஓட்டங்களுக்கு மேல் எடுத்து மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு 500 ஓட்டங்களுக்கு மேல் வெற்றி இலக்காக பாகிஸ்தான் நிர்ணயிக்கலாம்.

போட்டியின் 4ஆம் நாளாட்டம் இன்றாகும். (க)

# கொழும்பில்...

தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

இதன்போது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் 4 பேர் உயிரிழந்ததுடன் மேலும் 5 பேர் படுகாயமடைந்த நிலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த தாக்குதல் என்ன காரணத்துக்காக மேற்கொள்ளப்பட்டது என்பது தொடர்பில் தகவல் நேற்றிரவு வெளிப்படவில்லை. எனினும் இது தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் பாதாள உலகக் குழு தலைவரான "குடு சூட்டி" என்றநபர் உயிரிழந்துள்ளார் என தெரிய வந்துள்ளது.

இந்நிலையில் மேற்படி துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தால் கொழும்பு புறநகர் பகுதியில் நேற்றிரவு வரை பதற்றநிலை காணப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-9)





யாழ்ப்பாணம் பல்கலைக்கழக அரசறிவியல் துறை மூன்றாம் வருட மாணவன் நடராசா கஜனின் இறுதி நிகழ்வு நேற்று நடைபெற்றது. முற்பகல் 10 மணியளவில் கிளி நொச்சி பாரதிபுரத்தில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் இறுதி நிகழ்வுகள் நடைபெ ற்று பூதவுடல் மலர் தாங்கிய பேழையில் எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு இரணைமடு பொது மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டது. ஊர்வலத்தில் பல்கலைக்கழக மாணவர் கள், பொதுமக்கள், அரசியல் பிரமுகர்கள் எனப் பெரும் திரளானவர் கள் கலந்து கொண்டனர். (படங்கள்:-பரந்தன் செய்தியாளர்)



## மாணவர்கள் படுகொலைச் சம்பவத்திற்கு யாழ்.முஸ்லிம் சிவில் சமூகம் கண்டனம்

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் படுகொலைகள் சட்டம் ஒழுங்கை வன்முறையாக அமுல்படுத்த முயற்சித்தமையின் விளைவே என யாழ்.முஸ்லிம் சிவில் சமூகம் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

படுகொலைகள் யாழ்ப்பாணத்திற்கு புதியதல்ல, ஆனால் ஒரு மாற்றத்தை நோக்கிய நகர்வில் மக்கள் அமைதியின் மீது நம்பிக்கை கொண்டிருக்கின்ற சந்தர்ப்பத்தில், பொலிஸாரினால் இவ்வாறான ஒரு வன்முறைச் சம்பவம் ஏற்பட்டிருப்பதை அங்கீகரிக்க முடியாதுள்ளது.

அப்பாவியான இரண்டு மாணவர்கள் பலியாகியிருப்பதும் ஈடுசெய்யப்பட முடியாத இழப்பாகும். குறித்த இரண்டு மாணவர்களின் குடும்பத்தாருக்கும் உறவுகளுக்கும் நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை வெளியிடுவதோடு, அவர்களுடைய துயரில் யாழ்.முஸ்லிம் மக்களாகிய நாமும் பங்கேற்கின்றோம்.

குறிப்பாக யாழ். மாவட்டத்திலும் பொதுவாக வடக்கு மாகாணத்திலும் சட்டம் ஒழுங்கு சார்ந்து பல்வேறு குளறுபடிகள் இருக்கவே செய்கின்றன, வாள்வெட்டுக் கலாசாரம், கஞ்சா மற்றும் போதைப் பொருள் விற்பனை மற்றும் பாவனைகள், கொள்ளைச் சம்பவங்கள் என பல்வேறு சமூகப் பிறழ்வு நடவடிக்கைகள் இடம்பெற்ற வண்ணமேயிருக்கின்றன. இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு நீதிமன்றமும் பொலிஸாரும் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டிய கடப்பாட்டோடு இருக்கின்றார்கள். ஆனாலும் இவற்றை நடைமுறைப்படுத்துகின்ற போது வன்முறைசார் வழிமுறைகள் பின்பற்றப்படுவதை எவ்விதத்திலும் அங்கீகரிக்க முடியாது. அதனை வன்மையாகக் கண்டிப்பதோடு வன்முறைகளில் ஈடுபடுகின்ற பொலிஸாரையும் சட்டரீதியாக தண்டிப்பதற்கு பின்னிற்கக் கூடாது என்பது எமது நிலைப்பாடாகும்.

மேற்படி அசாதாரண நிலைமைகளை கட்டுப்படுத்த வேண்டுமாயின் மக்களுக்கு விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவதும், குறிப்பாக இளைஞர்களின் பிரச்சினைகளுக்கான தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்பதும் அத்தியாவசியமாகின்றது என யாழ். முஸ்லிம் சிவில் சமூகத்தின் தலைவர் மற்றும் செயலாளர் ஆகியோர் இணைந்து விடுத்துள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## யாழ்.மருத்துவபீட ஆசிரியர் சங்கம் மாணவர் படுகொலைக்கு கண்டனம்

கடந்த 20.10.2016 வியாழக்கிழமை அன்று நள்ளிரவு வேளையில் யாழ் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்கள் இருவர் நடுவீதியில் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்திற்கு யாழ். மருத்துவ பீட ஆசிரியர் சங்கம் தனது கடுமையான கண்டனத்தை தெரிவிக்கின்றது. கடந்த கால போர்ச்சூழல் காரணமாக சொல்லொணாத் துயரங்களையும் இழப்புக்களையும் சந்தித்த எமது சமூகம் அப்பாரிய இழப்புக்களிலிருந்து படிப்படியாக மீண்டுவரும் தற்போதைய சூழ்நிலையில் அப்பாவி தமிழ் மாணவர்களின் மீது நடத்தப்பட்ட இவ்வாறானதொரு படுகொலைச்சம்பவமானது தமிழ் மக்களிடையே பெரும் அதிர்ச்சியையும் சந்தேகங்களையும் ஏற்படுத்தியுள்ளது. இச் சம்பவமானது நாட்டின் தற்போதைய சூழலைக் குழப்பும் உள்நோக்குடன் திட்டமிட்டு நடத்தப்பட்ட ஒரு செயலாகவே கருதப்படவேண்டியுள்ளது.

படுகொலை செய்யப்பட்ட எமது பல்கலைக்கழக மாணவர்களிற்காக வருந்தும் அதே வேளை இச்சம்பவத்திற்கு பொறுப்பான சகல தரப்பினரையும் நீதியின் முன்நிறுத்தி பாதிக்கப்பட்ட மாணவர்களிற்கும் அவர்களை இழந்து தவிக்கும் குடும்பத்தினர்க்கும் உரிய நீதி கிடைக்க வழிவகை செய்யவேண்டுமென யாழ் மருத்துவ பீட ஆசிரியர் சங்கம் கேட்டுக் கொள்கின்றது.

மேலும் இவ்வாறான துரதிர்ஷ்டவசமான சம்பவங்கள் எதிர்காலத்தில் இடம்பெறாமல் தடுத்து நாட்டின் சமாதானச் சூழலையும் மக்கள் மனங்களில் நம்பிக்கையையும் ஏற்படுத்த வேண்டியது சகலதரப்பினரினதும் தலையாய கடமை என்பதனையும் யாழ் மருத்துவ பீட ஆசிரியர் சங்கம் வலியுறுத்தி நிற்கின்றது.

மேற்படி சம்பவத்தில் உயிரிழந்த எமது மாணவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் அவர்களின் பெற்றோர் மற்றும் குடும்பத்தினர்க்கு யாழ். மருத்துவ பீட ஆசிரியர் சங்கம் சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம் என அந்தச் சங்கத்தின் செயலாளர் அ.முருகானந்தன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## இராசி பலன்

24.10.2016

(ஐப்பசி 08,திங்கட்கிழமை)

சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு

நவமி பிற்பகல் 5.41 மணிவரை

ஆயிலியம் பின்னிரவு 2.33 மணிவரை

சுபநேரம் 12.02-1.32 மணிவரை

இராகுகாலம் 7.32-9.02 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>உத்தராடம்<br>இரவு 2.33 மணிக்கு<br>சிங்-சந் | | சந் |
| | | | ராகு |
| செவ் | சனி<br>சுக் | சூரி<br>புத | குரு |

**மீனம்** அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், பணத்தேவைகள் பூர்த்தியாகும், புதிய பொருட்கள் வாங்கும் எண்ணம் உருவாகும்.

**மேடம்** தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும், பெற்றோர் நலனில் அக்கறை காட்டுவீர்கள், மற்றவர்கள் வாங்கிய பொருளை பார்த்து நீங்களும் வாங்க நினைப்பீர்கள்.

**இடபம்** நாடி வந்தவர்களுக்கு நன்மை செய்து மகிழ்வீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், அரசு வழியில் அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.

**மிதுனம்** தனவரவு திருப்திகரமாக அமையும், உறவினர்கள் வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், புதிய நட்புகள் வந்து சேரலாம், இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம்.

**கும்பம்** உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், ஆரோக்கியத்தில் இருந்த அச்சுறுத்தல்கள் அகலும், புதிய பொருட்சேர்க்கையுண்டு.

**கடகம்** நீங்கள் தேடிச்சென்று பார்க்க நினைத்த நபர் உங்களைத் தேடி வரலாம், கற்பனை மிகுதியான நாள், தொழில் நலன் கருதி அனுபவம் மிக்கவர்களின் ஆலோசனை கேட்பீர்கள்.

**மகரம்** மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், பேச்சில் கனிவு பிறக்கும், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், போசன சுகமுண்டு.

**சிம்மம்** செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், திடீரென கேட்கும் செய்திகளால் திகைப்படையலாம், தொழிலில் ஆக்கபூர்வமான மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள்.

**தனுசு** காரிய வெற்றிக்கு கணபதியை வழிபட வேண்டிய நாள், பயணத்தால் மன உளைச்சல்கள் ஏற்படலாம், ஒருவகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் விரயம் கூடும்.

**விருச்சிகம்** எதிர்பார்த்த காரியமொன்று இன்று காலையிலேயே நடைபெறும் வாய்ப்புண்டு, வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு.

**துலாம்** செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் ஏற்படலாம், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**கன்னி** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்,திடீர் பணவரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், போசன சுகமுண்டு.

# பல்கலை.மாணவர்கள் படுகொலை குறித்து சுயாதீன விசாரணை நடத்தப்பட வேண்டும்

## யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கடந்த வெள்ளிக்கிழமை இரவு கொக்குவிலில் இரண்டு யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் பொலிஸாரின் துப்பாக்கி சூட்டு சம்பவத்தின் மூலம் கொல்லப்பட்டமையானது எமக்கும் யாழ். சமூகத்திற்கும் பெரும் அதிர்ச்சியையும் அச்சத்தினையும் வேதனையையும் தருகின்றது.

நல்லாட்சி அரசு என்கின்ற பெயரில் ஆட்சி நடத்தி வருகினற அரசும் அரச நிர்வாகமும் தமிழ்மக்கள் மற்றும் அவர்கள் உயிர்கள் மீது கொண்டுள்ள அக்கறையின்மையையும் அலட்சியத்தன்மையையும் இச்சம்பவம் சுட்டிக்காட்டுகின்றது.

இச்சம்பத்தில் உயிரிழந்த மாணவர்களிற்கு எமது அஞ்சலியினை செலுத்துவதோடு மாணவர்களின் இழப்பால் துயருற்றிருக்கும் அவர்களது குடும்பத்தினரதும் நண் பர்களினதும் துயரங்களை பல்கலைக்கழக ஊழியர் சங்கமும் பகிர்ந்து கொள்கிறது.

சட்டத்தின் காவலர்கள் என கூறிக் கொள்பவர்களே இக்கொடூர கொலைகளை புரிந்தது மட்டுமல்லாது. சம்பவம் வெளிப்படையாக தெரிந்திருந்த போதிலும். அதனை மூடிமறைத்து விபத்தினால் ஏற்பட்ட மரணம் என சம்பவங்களை சோடிக்க முற்பட்டமை மிகப்பாரதூரமான குற்றச்செயல். வெளிப்படையான ஒரு சம்பவத்தையே மூடிமறைக்க முற்பட்ட பொலிஸாரின் இச்செயற்பாடு. அவர்களால் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட விருக்கும் விசாரணை மீதான நம்பிக்கையை கேள்விக்குள்ளாக்கியிருக்கிறது.

எனவே இச்சம்பவம் தொடர்பில் பல்கலைக்கழக சமூகம் என்கின்ற வகையில் ஊழியர் சங்கத்தினராகிய நாங்கள் பல்கலைக்கழக மாணவர் மற்றும் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் என்பவர்களோடு இணைந்து துரிதமான. சுயாதீனமான. பக்கச்சார்பற்ற. நியாயமான விசாரணைகளின் மூலம் உண்மைகள் வெளிக்கொணரப்பட்டு குற்றவாளிகள் தண்டனைக்குட்படுத்தப்படல் வேண்டும் என்பதையும் இந்நிகழ்வின் தொடர்ச்சியாக. இனிவரும் காலங்களில் பல்கலைக்கழக மாணவர்களது பாதுகாப்பு. எதிர்காலம் என்பன உறுதிப்படுத்தப்படல் வேண்டும் என்பதையும் மேலும் இது போன்ற சம்பவங்கள் இனி வரும் காலங்களில் இடம் பெறாதிருப்பதற்கு விரைந்து நடவடிக்கைகள் தேவை என்பதையும் வலியுறுத்துகின்றோம் என அச்சங்கத்தின் தலைவர் சி.தங்கராஜா விடுத்துள்ள கண்டன அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார். (இ)

## தவறவிடப்பட்ட பணம் மீளக்கையளிக்கப்பட்டது



இலங்கை போக்குவரத்து சபையின் வென்னப்புவ சாலைப் பேருந்து சாரதி , நடத்துநரால் தவறவிடப்பட்ட 36 ஆயிரத்து 30 ரூபா பணம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள ஆட்டோ தரிப்பிடத்திற்கு அருகில் புத்தூரைச் சேர்ந்த ஆர்.திவ்வியராஜ் என்பவரால் கண்டெடுக்கப்பட்டது.

இப் பணம் யாழ். மாவட்ட ஆட்டோ உரிமையாளர் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டு அவர்களால் பேருந்து சாரதி, நடத்துநரிடம் நேற்று முன்தினம் ஒப்படைக்கப்பட்டது. (இ)

## வாழ்வாதார உதவி வழங்கல்



(கரணவாய்)

வடக்கு மாகாண சபை உறுப்பினர் எஸ். அகிலதாஸின் 2016 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டிலிருந்து அண்மையில் அரியாலையைச் சேர்ந்த ஜீவானந்தம் சிவாஜினிக்குவாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு 35 ஆயிரம் ரூபா பெறுமதியான கோழிக்கூடு, கோழிக்குஞ்சுகள் வழங்கப்பட்டன. (இ-60)

## அரச முகாமைத்துவ உதவியாளர் சங்கத்தின் 14வது பொதுக்கூட்டம்

(கொழும்பு)

மத்திய-மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சங்கத்தின் 14ஆவது பொதுக் கூட்டம் எதிர்வரும் 27 ஆம் திகதி வியாக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் வீதியிலுள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. சி.ஜெயசங்கர். தலைமையில் இடம் பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நா. வேதநாயகன் , சிறப்பு விருந்தினராக யாழ். மாநகர சபை ஆணையாளர் பொ. வாகீசன், கௌரவ விருந்தினர்களாக நல்லூர் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் ஆ.சத்தியமூர்த்தி , முன்னாள் சங்கத் தலைவரும் யாழ். மாநகரசபையின் ஓய்வு நிலைச் செயலாளருமாகிய இ.இரத்தினசிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

## வடக்கின் பாரம்பரிய உணவுகள் பண்பாட்டு சுற்றுலாவை ஊக்குவிக்கும்

### வடக்கு அமைச்சர் ஐங்கரநேசன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கை நோக்கி சுற்றுலாப் பயணிகளை வசீகரிப்பதில் எமது இயற்கைச் சூழலும் தொல்லியற் சின்னங்களும் வணக்கத்தலங்களும் பெரும் பங்காற்றுகின்றன.

அந்தப் பங்களிப்புக்கு நிகராக எமது பாரம்பரிய உணவுகளும் பங்களிக்க முடியும். வடக்கின் பாரம்பரிய உணவுகள் பண்பாட்டுச் சுற்றுலாவை ஊக்குவிக்கும் என்று வடக்கு விவசாய அமைச்சர் பொ.ஜங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

வடக்கு முதலமைச்சர் அமைச்சின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நல்லூர் சங்கிலியன் பூங்காவில் வடக்கின் பாரம்பரிய உணவுத் திருவிழா இடம் பெற்றது.

உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் அனுசரணையுடன் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நவீன மருத்துவத்தால் எங்கள் ஆயுளை நீடிக்க முடிந்திருக்கிறதே தவிர. ஆரோக்கியமாக வாழவைக்க முடியவில்லை. எங்கள் முன்னோர்களுக்கு உணவு தான் மருந்து. இதனால் நோய்நொடியில்லாமல் அவர்களால் ஆரோக்கியத்துடன் வாழ முடிந்திருக்கிறது. ஆனால், இப்போது மருந்துதான்உணவு. மூன்று வேளையும் சாப்பிடுகிறோமோ இல்லையோ. தவறாமல் மருந்துகளை உட்கொண்டு வருகிறோம்.


அடுக்களைகளில் சுவைச் சரக்குகளை வைப்பதற்கென முன்னர் அஞ்சறைப் பெட்டிகளை வைத்திருந்தோம். இப்போது. ஐந்து அறைகள் அல்ல. ஏராளமான அறைகளைக்கொண்ட மாத்திரைப் பெட்டிகளைத்தான் வைத்திருக்கிறோம். அதில் விதம் விதமான மாத்திரைகளை நிரப்பி வைத்திருக்கிறோம்.

தமிழர்களுக்கெனத் தனித்துவமான உணவுப் பண்பாடு உள்ளது. அந்த உணவுப் பண்பாட்டைக் கைவிட்டு. பாரம்பரிய உணவுகளில் இருந்து துரித உணவுகளுக்கு நாம் பெருமளவுக்கு மாறிவிட்டோம். இதுதான். மருந்து மாத்திரைகளுடன் நாங்கள் வாழவேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியிருக்கிறது. பாரம்பரிய உணவுகளுக்கு நாங்கள் மீளவும் திரும்ப வேண்டும் எமது அன்றாட உணவில் ஒரு வேளைஉணவாவதுபாரம்பரிய உணவாக இருக்க வேண்டும்.

பாரம்பரிய உணவுகளை மக்களிடையே பிரபலப்படுத்த இதுபோன்ற உணவுத் திருவிழாக்கள் உதவும். அதே சமயம். பாரம்பரிய உணவுகளின் நிரந்தர விற்பனைக் கூடங்களை அமைக்கவும் நாங்கள் முன்வரவேண்டும். வெளிநாடுகளில் இருந்து வந்து செல்லும் தமிழ் உறவுகளிடையேயும். வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளிடையேயும் இவை கண்டிப்பாகப் பெரும் வரவேற்பை பெறும் என்றும் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் அமைச்சின் செயலாளர் கே.விஜயலட்சுமி தலைமையில் நடைபெற்ற பாரம்பரிய உணவுத் திருவிழாவில் வடமாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா. மாகாணசபை உறுப்பினர்கள் பா.கஜதீபன். அ.பரஞ்சோதி. திட்டமிடல் பணிப்பாளர் த.சர்வானந்தா. யாழ்ப்பாண பிரதேச செயலர் பொ.தயானந்தன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தார்கள். இதன்போது பாரம்பரிய உணவுத்தயாரிப்பு போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ்களும் பணப்பரிசுகளும் வழங்கி வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (இ)



வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியின் 25 ஆம் ஆண்டு நிறைவு விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றன. இதில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். இந்தியத் தூதுவர் அ.நடராஜன் மங்கல விளக்கேற்றுவதையும் கலை நிகழ்வையும் படங்களில் காணலாம். (படங்கள்: கரணவாய் செய்தியாளர்)

# நல்லிணக்கச் செயற்பாடுகளில் தமிழர்களுக்கு அவநம்பிக்கை

## மைத்திரி மீது உலக தமிழர் பேரவை விசனம்

(கொழும்பு)

**ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நல்லிணக்க செயற்பாடுகளில் தமிழர்கள் அவநம்பிக்கை கொண்டுள்ளனர் என்று உலக தமிழர் பேரவை சுட்டிக் காட்டியுள்ளது. சிறுபான்மை தமிழர்களுக்கு உறுதியளித்தபடி இல்லாமல், நல்லிணக்க நடவடிக்கைகளில் குறைபாடுகள் காரணமாகவே இந்த அவநம்பிக்கை உணர்வு தமிழர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது என அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.**

இராணுவ சூன்யமாக்கல் நடவடிக்கை மற்றும் இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்தல் என்ற விடயங்கள் வடக்கு கிழக்கில் உரிய வகையில் மேற்கொள்ளப்படவில்லை.

இதனைத்தவிர, அனைத்து சமூகங்களின் நல்லிணக்க நடவடிக்கைகள், உயர் அரசியல் தலைவர்களிடம் இருந்து வரும் முரண்பட்ட தகவல்கள் என்பன தமிழ் மக்கள் மத்தியில் அவநம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளன.

எனவே இந்த விடயத்துக்கு தாமதமின்றி தீர்வுகள் காணப்படவேண்டும்.

இந் நிலையில் இலங்கைக்கு அண்மையில் விஜயம் மேற்கொண்டிருந்த ஐக்கிய நாடுகளின் சிறுபான்மையினர் தொடர்பான அறிக்கையாளர் ரீட்டா இசாக் நாடியாவின் கருத்துக்களை இலங்கை அரசாங்கம் உரிய முறையில் நடைமுறைப்படுத்த வேண்டும்.




ரீட்டாவின் பயண இறுதியில் அவர் இலங்கையின் சிறப்பான திட்டமிடப்பட்ட வகையில், உண்மையை கண்டறிதல், நல்லிணக்கம் மற்றும் போரின் வடுக்களை ஆற்றல் போன்ற முன்னெடுப்புக்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று கோரியிருந்தார்.

அத்துடன், இலங்கை அரசாங்கம், பொறுப்புக்கூறல், அரசியல் தீர்வு மற்றும் நல்லிணக்கம் என்ற விடயங்களில் நவீன நடைமுறைகளை பின்பற்ற வேண்டும்.

இந்த நிலையில் ஜனநாயக பன்முகத்தன்மை மற்றும் நாட்டின் எதிர்காலம் என்பன வீணடிக்கப்பட்டு விடக்கூடாது என்றும் உலக தமிழர் பேரவை விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளது. (இ-7)

## ஐரோப்பாவிற்குள் ஊடுருவ முயன்ற 2400பேர் காவற்படையினரால் மீட்பு




(மிலன்)

ஆபிரிக்க நாடுகளில் இருந்து படகுகள் மூலம் மத்திய தரைக்கடல் வழியாக ஐரோப்பாவுக்குள் ஊடுருவ முயன்ற 2,400 பேரை இத்தாலிய கடலோரக் காவல் படையினர் மீட்டுள்ளனர்.

உள்நாட்டுப் போரால் நிலைகுலைந்துள்ள ஈராக், சிரியா, லிபியா, ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் இருந்தும், வறுமையால் பாதிக்கப்பட்டுள்ள ஆபிரிக்க நாடுகளில் இருந்தும் தினந்தோறும் ஆயிரக்கணக்கான மக்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகளாக செல்கின்றனர்.

பல்வேறு நாடுகளுக்கு கடல் கடந்து செல்லும் இந்த அகதிகள், சிறிய படகுகள் போன்றவற்றில் பாதுகாப்பற்ற முறையில் பயணம் செய்கின்றனர்.

மத்திய தரைக்கடல் வழியாக இவ்வாறு அகதிகளை அளவுக்கு அதிகமாக ஏற்றிச் செல்லும் படகுகள், நடுக்கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகி பலத்த உயிர்ச்சேதத்தை ஏற்படுத்தி வருவது தொடர்கதை ஆகி வருகிறது.

அண்மைக் காலமாக ஐரோப்பிய நாடுகளில் அகதிகளாக தஞ்சம் அடைந்துள்ள மக்களின் எண்ணிக்கை மட்டும் சுமார் 10 இலட்சத்தை எட்டியுள்ளது.

இதுதவிர, கடந்த ஆண்டில் மட்டும் இத்தாலி நாட்டுக்கு புகலிடம் தேடி வரும் வழியில் சுமார் ஐயாயிரம் பேர் காணாமல் போனதாகவும் கடலில் மூழ்கி இறந்துவிட்டதாகவும் தெரிகின்றது. இருப்பினும், உள்நாட்டில் பசி, பஞ்சத்தால் பாதிக்கப்பட்டுள்ள லிபியா உள்ளிட்ட ஆபிரிக்க நாடுகளை சேர்ந்த மக்கள் அடைக்கலம் தேடி ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகளாக படையெடுத்தபடியாகவே உள்ளனர்.

அங்காரா நாட்டு கடல் எல்லை வழியாக கிரீஸ் நாட்டுக்குள் நுழைந்து விடாமல் அங்கிருந்து பிரான்ஸ், ஜேர்மனி உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளுக்கு சென்று அங்கே அகதிகளாக குடியேறி விடலாம் என்பது இவர்களின் விருப்பமாகவுள்ளது.

எனவே, இரத்தத்தை உறையவைக்கும் குளிர் காற்று, பசியால் அலையும் சுறா, திமிங்கலம் உள்ளிட்ட இராட்சத மீன்களின் தாக்குதல் மற்றும் பேரலைகளுக்கு மத்தியில் தங்களது உயிரைப் பணயம் வைத்து இவர்கள் ஆபத்தான கடல் பயணத்தை மேற்கொள்கின்றனர்.

இந்த ஆண்டில் மட்டும் இதுவரை சுமார் இரண்டு இலட்சம் குடியேறிகள் ஐரோப்பிய நாடுகளுக்குள் சட்டத்துக்கு புறம்பாக நுழைந்துள்ளனர்.

இவர்களில் சுமார் ஒன்றரை இலட்சம் மக்கள் துருக்கி வழியாக வந்துள்ளனர். கடல் பயணத்தின்போது நிகழ்ந்த எதிர்பாராத விபத்துகளில் சிக்கி மூன்றாயிரத்துக்கும் அதிகமானோர் கடந்த ஒன்பது மாதங்களில் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், நேற்று முன்தினம் மட்டும் மத்திய தரைக்கடல் வழியாக இத்தாலி நாட்டு கடல் எல்லையை கடக்க முயன்ற 20 படகுகளை இத்தாலி மற்றும் அயர்லாந்து நாடுகளை சேர்ந்த கடலோரக் காவற்படையினர் தடுத்து நிறுத்தி, அகதிகளை மீட்டுள்ளனர்.

உயிருடன் மீட்கப்பட்டவர்களை தவிர 4 குழந்தைகள் உட்பட 12 சடலங்களை மீட்டதாக இப்பணியில் ஈடுபட்டுள்ள 'Doctors Without Borders' என்ற தொண்டு நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதுதவிர, கடந்த 48 மணி நேரத்தில் இத்தாலி கடல் எல்லையில் 14 சடலங்கள் கண்டெடுக்கப்பட்டதாக இத்தாலி கடலோரக் காவற்படையினர் தெரிவித்தனர். (இ-7)

இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 13 சூரி,செவ் 5 இல்
உயரம்: 5'10"
தகைமை/தொழில்:A/L சுவிஸ் PR
தொ.இ: B/6350

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: உத்தராடம் 4
கி.பா: 51 சூரி, செவ் 9இல்
உயரம்: 5' 8"
தகைமை/தொழில்:O/L சொந்தக் கடை பிளாஸ்ரிக் ஒட்டுவேலை
தொ.இ: B/6351

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: அனுசம் 4
கி.பா: செவ் 7 இல்
உயரம்: 5'9"
தகைமை/தொழில்:UK Citizen (Eng) தனியார் தொழில்
தொ.இ: B/6352

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: கேட்டை 4
கி.பா: செவ். 12 இல்
உயரம்: 5'11"
தகைமை/தொழில்:B.Sc Coordinator
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: B/6353

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 2
கி.பா: 32.25 செவ் 1 இல்
உயரம்: 155cm
தகைமை/தொழில்:BSc Special (அரசதொழில்)
தொ.இ: G/6373

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: திருவோணம் 2
கி.பா: 33 செவ்.1 இல்
உயரம்: 170 cm
தகைமை/தொழில்: A/L, Media (Assi) தனியார்
தொ.இ: G/6375

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: உத்தரம் 3
கி.பா:-- செவ் 8 இல்
தகைமை/தொழில்: A/L Banking (Course) வங்கி தனியார்
தொ.இ: G/6377

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை 3
கி.பா: 39.25 செவ் 4 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: B.Sc Development officer
தொ.இ: G/6378

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434 [?]
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 [?] - 5.00 மணிவரை திறக்கப்படும். [?]

# கீரிசுட்டான் காட்டுப்பகுதியில்

# பல இலட்சம் ரூபாய் பெறுமதியான முதிரை மரக்குற்றிகளுடன் இருவர் கைது



மடு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிராட்டிக்குளம் கீரிசுட்டான் காட்டுப்பகுதியில் முதிரை மரங்களை வெட்டி வவுனியாவிற்கு கொண்டு செல்ல முற்பட்ட போது மடு பொலிஸாரின் திடீர் தேடுதல்களின் போது வெட்டப்பட்ட முதிரை மரக்குற்றிகள் மீட்கப்பட்டுள்ளதோடு இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக மடு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.இச் சம்பவம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

குறித்த பகுதியில் சட்ட விரோதமான முறையில் பல இலட்சம் ரூபாய் பெறுமதியான முதிரை மரங்கள் வெட்டப்படுவதாக மடு பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சோமவன்ச மற்றும் உதவி பொலிஸ் அத்தியட்சகர் சமன் ஜெயசேகர ஆகியோரின் வழிநடத்தலின் கீழ் மடு பொலிஸ் நிலைய பொலிஸார் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடவடிக்கையொன்றை மாலை மடு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கீரிசுட்டான் காட்டுப்பகுதியில் திடீர் தேடுதல் நடவடிக்கை ஒன்றை மேற் கொண்டனர்.

இதன்போது வெட்டப்பட்ட முதிரை மரக்குற்றிகளை லொறியில் ஏற்றிக்கொண்டிருந்த போது இரண்டு சந்தேக நபர்கள் மடு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டதோடு பல இலட்சம் ரூபாய் பெறுமதியான 33 முதிரை மரக்குற்றிகளையும் மீட்டுள்ளனர்.

குறித்த முதிரை மரக் குற்றிகள் வவுனியாவிற்கு கொண்டு செல்வதற்காகவே லொறியில் ஏற்றப்பட்டதாக விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது.

தற்போது மீட்கப்பட்ட 23 முதிரை மரக்குற்றிகள் மற்றும் கைப்பற்றப்பட்ட லொறி ஆகியவை மடு பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதோடு கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேக நபர்களும் மடு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருவதாகவும், விசாரணைகளின் பின் மன்னார் நீதவான் முன்னிலையில் குறித்த இரு சந்தேக நபர்களும் ஆஜர்படுத்தவுள்ளதாக மடு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.(2-9-4)

# பெருந்திரளான மக்கள் பங்கேற்புடன் கஜனின் இறுதி ஊர்வலம் நடைபெற்றது

(பரந்தன்)

யாழ்.பல்கலைக்கழக அரசறிவியல் துறை மூன்றாம் வருட மாணவன் நடராசா கஜனின் இறுதி நிகழ்வு நேற்று ஞாயிற்றுகிழமை கிளிநொச்சி பாரதிபுரத்தில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு இரணைமடு பொது மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

முற்பகல் 10 மணிக்கு இல்லத்தில் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்று திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பல்கலைக்கழக மாணவர்கள், பொது மக்கள் மற்றும் அரசியல் பிரமுகர்கள் எனப் பெருந்திரளானவர்கள் கலந்து கொண்டு ஊர்வலமாக பூதவுடல் நல்லடக்கத்திற்காக கொண்டு செல்லப்பட்டது. அஞ்சலி நிகழ்வின் போது வடக்கு மாகாண கல்வி அமைச்சரும் பதில் முதலமைச்சருமான த.குருகுலராஜா இரங்கல் உரையாற்றிக் கொண்டிருந்த போது தங்களது கடும் எதிர்ப்பினை தெரிவித்த பல்கலைக்கழக மாணவர்கள் அங்கு வைக்கப்பட்டிருந்த ஒலி வாங்கிகளையும் கழற்றி எறிந்து விட்டனர். அத்தோடு ஊடகவியலாளர்களையும் வெளியேறுமாறும் அவர்கள் கூச்சலிட்டனர்.

இதனால் இங்கு சிறிது நேரம் அமைதியின்மை ஏற்பட்டது. மேலும் எந்த அரசியல் வாதிகளும் இங்கு உரையாற்ற வேண்டாமென பல்கலைக்கழக மாணவர்கள் கண்டிப்பாக தெரிவித்த நிலையில் அங்கு வருகை தந்திருந்த பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் எவரையும் ஏற்பாட்டாளர்கள் பேசுவதற்கு அனுமதியளிக்கப்படவில்லை. பின்னர் கிராமமட்ட அமைப்புகள், ஒரு சில மாணவர்களின் உரையுடன் அஞ்சலி நிகழ்வு இடம்பெற்று பூதவுடல் நல்லடக்கத்திற் காக கொண்டு செல்லப்பட்டது. (2-312)




# கொக்கிளாய் களப்பில் அதிகரித்த சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கை

## முல்லை.மீனவர்கள் விசனம்

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்கிளாய் களப்பில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகள் பொலிஸாரின் கூட்டம் நிறைவடைந்து சில மணி நேரத்தில் அதிகரித்துள்ளதாக முல்லை.மீனவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இதுதொடர்பாக மேலும் தெரியவருவதாவது.

கடந்த 17 ஆம் திகதி காலை 8 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல்வள திணைக்களமும் பொலிஸாரும் இணைந்து சட்டவிரோத தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த புல்மோட்டை மீனவர்களை [illegible] செய்வதற்காக சென்ற வேளையில் அவர்களுக்கு துணையாக அழைத்துச்சென்ற கருநாட்டுக்கேணி குடாத்தறை மீனவர்களான இருவர் ஆகியோர் பொலிஸார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வள திணைக்கள அதிகாரிகள் முன்னிலையில் கடுமையாக தாக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் இந்த மீனவரை தாக்கியவர்களை இதுவரை பொலிஸார் கைதுசெய்து எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லையென பாதிக்கப்பட்ட மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதைவிட இந்த சம்பவம் தொடர்பாக கொக்கிளாய் களப்பு பகுதியில் தொழிலில் ஈடுபடும் சிங்கள, தமிழ் முஸ்லிம் ஆகிய மீனவர்களை முல்லைத்தீவு மற்றும் புல்மோட்டையை சேர்ந்தவர்களை அழைத்து முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் கலந்துரையாடலொன்றை மேற்கொண்டனர்.

இந்தவேளையில் பொலிஸார் யாராக இருப்பினும் சட்டவிரோத தொழிலில் ஈடுபட முடியாது. கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள சட்ட விதிகளுக்கு முரணாக செயற்படுபவர்களை கைது செய்து நடவடிக்கை எடுப்போம் எனவே சட்டவிரோத செயற்பாடுகளில் எவரும் ஈடுபட வேண்டாமென தெரிவித்திருந்தனர்.

எனினும் கூட்டம் நிறைவடைந்து சென்ற நிலையில் வழமையை விட அதிகளவான படகுகளில் தமது பகுதிக்குள் வந்து மீன்பிடியிலீடுபட்டுக்கொண்டிருக்கின்றனர். இது வன்முறையாக முன்னர் உரிய நடவடிக்கை எடுக்குமாறு பாதிக்கப்பட்ட மீனவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்

இது தொடர்பில் கொக்கிளாய் களப்பு முகாமைத்துவ குழுவின் தலைவர் தெரிவிக்கையில்,

இந்த களப்பானது எமக்கு ஒரு பாரிய சொத்து.ஏழு கிலோமீற்றருக்கு அப்பாலிருந்து இயந்திர படகுகளில் எமது பகுதிக்குள் வந்து மீன்பிடியிலீடுபடுகின்றனர்.

இதனால் மண்ணெண்ணெய் களப்பில் கலப்பதாலும் இயந்திர படகுகளை பாவிப்பதால் அரியவகை கடற் தாவரங்கள் அழிவடைவதாகவும் மீன், இறால், நண்டு உற்பத்தி குறைவடைவதாகவும் இதனால் எதிர்காலம் கேள்விக்குறியாக வந்துள்ளது.

இதனால் சிறிய குளங்களில் சென்று தொழிலில் ஈடுபடும் எமது மீனவர்களின் நிலை என்ன இதனை யாரிடம் முறையிட்டு நூக்காக தீர்வை பெற்றுக்கொள்வது என தெரியாது திண்டாடுவதாக தெரிவித்தார்.(2-23)

# நீதிமன்ற அபராதங்கள்

கிளிநொச்சி பூநகரி பகுதியில் சாரதியனுமதிப்பத்திரம் காப்புறுதிப்பத்திரமின்றி மதுபோதையில் மோட்டார்சைக்கிள் செலுத்தியவருக்கு 13 ஆயிரத்து 500 ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி பூநகரி பகுதியில் சாரதியனுமதிப்பத்திரமின்றியும் காப்புறுதிப்பத்திரமின்றியும் மதுபோதையில் மோட்டார்சைக்கிள் செலுத்திய ஒருவரை கைது செய்து குறித்த நபரை கடந்த 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து 13 ஆயிரத்து ஐநூறு ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

➤➤➤➤➤➤➤➤➤➤➤

கிளிநொச்சி தருமபுரம் பகுதியில் கசிப்பு உற்பத்தி உபகரணம் மற்றும் கோடா என்பனவற்றை வைத்திருந்த சந்தேக நபரை கடும் நிபந்தனையுடன் கூடிய பிணையில் செல்லுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கிளிநொச்சி தருமபுரம் பகுதியில் சுமார் ஒரு இலட்சத்து அறுபதாயிரம் மில்லிலீற்றர் கோடா மற்றும் கசிப்பு உற்பத்தி உபகரணம் என்பவற்றை உடமையில் வைத்திருந்த ஒருவரை கைது செய்த தருமபுரம் பொலிஸார் குறித்த நபரை கடந்த 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதி மன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்திய நிலையில் குறித்த நபர் சுற்றவாளி எனக் கூறியதையடுத்து குறித்த குற்றச்சாட்டுத்தொடர்பான விசாரணைக்கு எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி தவணையிடப்பட்டதுடன் மேற்படி சந்தேக நபரை ஒரு இலட்சம் ரூபா காசுப்பிணையிலும் கிராம அலுவலரின் உறுதிப்படுத்தலுடன் கூடிய ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான ஆட்பிணையிலும் செல்லுமாறும் பிரதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்னதாக நீதிமன்றில் கையொப்பமிடவேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

➤➤➤➤➤➤➤➤➤➤➤

கிளிநொச்சி பூநகரி பகுதியில் அனுமதிப்பத்திர நிபந்தனைகளை மீறி டிப்பர் வாகனத்தில் மணல் ஏற்றிய இரண்டு பேருக்கு 45 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி பூநகரி பகுதியில் அனுமதிப்பத்திர நிபந்தனைகளை மீறி டிப்பர் வாகனத்தில் மணல் ஏற்றிய இரண்டு பேரையும் டிப்பர் வாகனத்தையும் கைது செய்த பூநகரி பொலிஸார் குறித்த டிப்பர் வாகனத்தையும் அதன் சாரதிகளையும் கடந்த 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதி மன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து ஒருவருக்கு இருபதாயிரம் ரூபா தண்டப்பணமும் மற்றைய நபருக்கு 25 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் என 45 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

➤➤➤➤➤➤➤➤➤➤➤

கிளிநொச்சி பூநகரி பகுதியில் மோட்டார் சைக்கிளில் ஆமை இறைச்சி கொண்டுசென்ற இரண்டு பேருக்கு தலா பத்தாயிரம்ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி பூநகரிப்பகுதியில் மோட்டார் சைக்கிளில் ஆமை இறைச்சியைக் கொண்டு சென்ற இரண்டு பேரை கைது செய்த பூநகரி பொலிஸார் குறித்த இருவரையும் கடந்த 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதி மன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து குறித்த இருவருக்கும் தலா பத்தாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

➤➤➤➤➤➤➤➤➤➤➤

கிளிநொச்சி பூநகரி பகுதியில் சாரதியனுமதிப்பத்திரமில்லாத ஒருவருக்கு மோட்டார் சைக்கிள் செலுத்த கொடுத்தவருக்கு ஆறாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி பூநகரிப்பகுதியில் சாரதியனுமதிப்பத்திரமில்லாத ஒருவருக்கு மோட்டார்சைக்கிள் செலுத்துவதற்கு கொடுத்த ஒருவருக்கு எதிராக வழக்குப்பதிவு செய்த பூநகரி பொலிஸார் குறித்த நபரை கடந்த 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதி மன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து ஆறாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

➤➤➤➤➤➤➤➤➤➤➤

கிளிநொச்சி பளைப்பகுதியில் மதுபோதையில் பொது இடத்தில் ஒழுங்கீனமாக நடந்துகொண்ட மூவருக்கு தலா ஆறாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளதுடன் ஏழு நாட்கள் சமூக சேவையில் ஈடுபடுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. கிளிநொச்சி பளைப்பகுதியில் மதுபோதையில் பொது இடத்தில் ஒழுங்கீனமாக நடந்துகொண்ட மூவரைக் கைது செய்து வழக்குப்பதிவு செய்த பளைப்பொலிஸார் குறித்த மூவரையும் கடந்த 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதி மன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து குறித்த மூவருக்கும் தலா ஆறாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளதுடன் சமுதாயம் சார் சீர்திருத்த கட்டளைச்சட்டத்தின் கீழ் ஏழு நாட்கள் சமூக சேவையில் ஈடுபடுமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

➤➤➤➤➤➤➤➤➤➤➤

கிளிநொச்சி பளைப்பகுதியில் இருபது போத்தல் கசிப்புடன் கைது செய்யப்பட்டவருக்கு ஒரு இலட்சம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் இருபது நாட்கள் சமூக சேவையில் ஈடுபடுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பளைப்பகுதியில் இருபது போத்தல் கசிப்பு வைத்திருந்த ஒருவரைக் கைது செய்த பளைப் பொலிஸார் குறித்த நபரை கடந்த 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதி மன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து குறித்த குற்றச்சாட்டுடன் தொடர்புபட்டவருக்கு ஒரு இலட்சம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் சமுதாயம் சார் சீர் திருத்த கட்டளைச்சட்டத்தின் கீழ் இருபது நாட்கள் சமூக சேவையில் ஈடுபடுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

➤➤➤➤➤➤➤➤➤➤➤

கிளிநொச்சி பகுதியில் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டவருக்கு 5 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் ஏழு நாட்கள் சமூக சேவையில் ஈடுபடுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது. கிளிநொச்சி பகுதியில் 1100 மில்லி கிராம் கஞ்சா வைத்திருந்த ஒருவரைக் கைது செய்த கிளிநொச்சி பொலிஸார் குறித்த நபரை கடந்த 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதி மன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து குறித்த குற்ற[illegible]ஐயாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் சமுதாயம் [illegible] சீர்திருத்த கட்டளைச்சட்டத்[illegible] கீழ் ஏழு நாட்கள் சமூக சேவையில் [illegible]டுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது. (2-15)

தீபாவளி தினத்தை முன்னிட்டு

## 3 இலட்சத்து 84 ஆயிரம் ரூபா பெறுமதியில் 120முதியவர்களுக்கு உலருணவுப் பொதிகள்



(மல்லாவி)

புலம்பெயர் நாட்டில் வாழ்ந்து வரும் சுப்பிரமணியம் கதிர்காமநாதனின் தாயகத்திலான அறப்பணிகளில் ஒரு அங்கமாக கிளிநொச்சி சாந்தபுரம் கிராமத்தில் வாழும் 120 முதியவர்களுக்கு தலா 3 ஆயிரத்து 200 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் மற்றும் புத்தாடைகள் அடங்கிய பொதிகள் 3 இலட்சத்து 84 ஆயிரம் ரூபா பெறுமதியில் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இந் நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் சாந்தபுரம் பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது, சுப்பிரமணியம் கதிர்காமநாதன் தனது தந்தையின் நினைவாக கிளிநொச்சி மலையாளபுரத்தில் ஆதரவற்ற 80 முதியவர்களை பராமரிக்கும் எஸ்.கே.முதியோர் இல்லம் மற்றும் ஆதரவற்ற சிறுவர்களைப் பராமரிக்கும் எஸ்.கே. அறிவுச்சோலை சிறுவர் இல்லத்தையும் இலவசமாக நடத்தி வருகின்றார்.

இந்நிலையில்கடந்தமூன்று வருடங்களாக கிளிநொச்சி சாந்தபுரம் கிராமத்தில் வாழும் 120 வயோதிபர்களுக்கு மாதாந்தம் தலா 2 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகளை வழங்கி வரும் நிலையில் இம்முறை தீபாவளியை முதியவர்கள் கொண்டாடும் வகையில் புத்தாடைகள் உள்ளடங்கலாக உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன. (2-15)

# 28 இலட்சத்து 32 ஆயிரம் ரூபா நிதி

# 4 ஆயிரத்து 369 வயோதிபர்களுக்கு மாதாந்த உதவிக்கொடுப்பனவாக பகிர்ந்தளிக்கப்படுகின்றது

## புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் தெரிவிப்பு

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்டத்திற்குட்பட்ட புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவில் இடப்பெயர்வின் பின்னரான மக்கள் மீள் குடியேற்றத்தின் போது 19 கிராம அலுவலர் பிரிவுகளிலும் 12 ஆயிரத்து 820 குடும்பங்களைச் சேர்ந்த 39 ஆயிரத்து 838 அங்கத்தவர்கள் மீள் குடியேற்றப்பட்டுள்ளனர்.

இதேவேளை வயோதிபர்களுக்கு வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் ஊடாக 3 ஆயிரத்து 397 முதியவர்களுக்கு 9 இலட்சத்து 85 ஆயிரத்து 550 ரூபாவும் மத்திய அரசின் சமூகசேவைகள் அமைச்சின் ஊடாக 70 வயதிற்கு மேற்பட்ட 972 முதியவர்களுக்கு 18 இலட்சத்து 46 ஆயிரத்து 800 ரூபாவுமாக மொத்தம் 28 இலட்சத்து 32 ஆயிரத்து 350 ரூபா பணம் 4 ஆயிரத்து 369 வயோதிபர்களுக்கு மாதாந்தம் உதவிக் கொடுப்பனவாக பகிர்ந்தளிக்கப்பட்டு வருவதாக புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் மருதலிங்கம் பகீர்தரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவில் சுமார் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட முதியவர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களில் அநேகமானவர்கள் இறுதி யுத்தத்தை அடுத்து உறவினர்களை இழந்த நிலையில் வேறொருவரின் உதவியில் தங்கி வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களுக்கான பல்வேறு அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்படவேண்டியுள்ளது.

இந்நிலையில் வடக்கு மாகாண சபையின் சமூக சேவைகள் திணைக்களத்தின் ஊடாக 60 வயதிற்கும் 70 வயதிற்கும் இடைப்பட்ட முதியவர்களில் ஆயிரத்து 950 பேருக்கு தலா 250 ரூபா வீதம் மொத்தம் 4 இலட்சத்து 87 ஆயிரத்து 500 ரூபாவும் 756 முதியவர்களுக்கு தலா 300 ரூபா வீதம் 2 இலட்சத்து 26 ஆயிரத்து 800 ரூபாவும் 312 முதியவர்களுக்கு தலா 350 ரூபா வீதம் ஒரு இலட்சத்து 9 ஆயிரத்து 200 ரூபாவும் 226 முதியவர்களுக்கு தலா 400 ரூபா வீதம் 90 ஆயிரத்து 400 ரூபாவும் 97 முதியவர்களுக்கு தலா 450 ரூபா வீதம் 43 ஆயிரத்து 650 ரூபாவும் 56 முதியவர்களுக்கு தலா 500 ரூபா வீதம் 28 ஆயிரம் ரூபாவுமாக மொத்தம் 9 இலட்சத்து 85 ஆயிரத்து 550 ரூபா நிதி மாதாந்தம் பகிர்ந்தளிக்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை மத்திய அரசின் சமூக சேவைகள் அமைச்சின் ஊடாக 70 வயதிற்கு மேற்பட்ட 972 முதியவர்களுக்கு தலா ஆயிரத்து 900 வீதம் 18 இலட்சத்து 46 ஆயிரத்து 800 ரூபா பணம் மாதாந்தம் பகிர்ந்தளிக் கப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)




# தொடரும் சிங்கள அடக்குமுறை ஈழமண்ணில் அழிந்துபோகட்டும்

## வடக்கு மாகாண சபை உறுப்பினர் கண்டனம்



(பனிக்கன்குளம்)

தொடரும் சிங்களத்துவ அடக்குமுறை ஈழத்தமிழ் மண்ணில் அழிந்துபோக வேண்டும் எனவும் கண்ணீருற்றிருக்கும் இரு மாணவர்களது குடும்பத்தாரின் துயரோடு இணைந்து கொள்வதாகவும் வடக்கு மாகாண சபை உறுப்பினர் ரவிகரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்ததாவது.

பொலிஸாரால் தனித்தே கூறப்படும் அம்மாணவர் மீதான குற்றச்சாட்டுகளும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை.

வடக்கிலே அமைதியின்மையை தமிழர்கள் ஏற்படுத்தவில்லை.

வடக்கிலே சிங்களாதிக்கம் எப்போது வந்ததோ அப்போதிருந்து தான் குழப்பங்களும் அமைதியின்மையும் வந்துள்ளன; தொடர்கின்றன.

ஈழத்தமிழர்மீது அனைத்து வழிகளிலும் கட்டமைக்கப்பட்ட இனவழிப்பு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்ற நிலையிலும் அவற்றையும் தாண்டி பல்கலைக் கழகத்திற்கும் தெரிவுற்ற மாணவர்கள் இவர்கள்.

அதிலும் ஒருவர் ஊடகத்துறை. மற்றொருவர் அரசறிவியல் துறை மாணவரும் என்றறிகின்றபோது இவ்விரு மாணவர்களும் வீழ்ந்திருக்கும் எம்மண்ணை மீளநிமிர்த்தவல்ல துறைகளிலேயே கல்வி கற்றிருக்கிறார்கள்.

இன்று நாம் எம்மண்ணை மீட்டெடுக்கவல்ல இரண்டு மாணவர்களை இழந்திருக்கிறோம்.

பொலிஸ் அதிகாரத்தை தமிழர்களிடம் வழங்காமல் இருப்பது எஞ்சிய தமிழர் வளங்களையும் அழிப்பதற்கா? தமிழர் மீது தொடரப்படும் கட்டமைக்கப்பட்ட இனவழிப்பின் ஒரு கட்டமாகவே இம்மாணவர்கள் - மண்ணின் இளைஞர்கள் கொல்லப்பட்டமையையும் நோக்க முடிகிறது.

சிங்களப் பேரினவாதியரின் இத்தகைய அடக்குமுறையும் அடக்குமுறை மனப்பான்மையும் ஈழமண்ணில் அழிந்துபோகட்டும். (2-281)

# பெண்களுக்கான அரசியல் குறித்த விழிப்புணர்வு கலந்துரையாடல்



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் பெண்களுக்கான அரசியல்தொடர்பான விழிப்புணர்வு கலந்துரையாடல் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் இடம் பெற்றுள்ளது.

அரசியலில் 25 வீதமான பெண்கள் அங்கத்துவம் வகிக்க வேண்டும் எனும் தலைப்பில் கலந்துரையாடல் முல்லை. மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் கடந்த 21 ஆம் திகதி இடம்பெற்றது.

இதில் முல்லை.மாவட்டத்தைச் சேர்ந்த பெண்கள் அமைப்புக்களுக்கு இது தொடர்பான விளக்க கருத்தரங்கு இடம் பெற்றது.

இதனை மாற்றுக்கொள்கைகளுக்கான சிரேஷ்ட அலுவலகர் சிவராணி விஜய சுந்தராவின் தலைமையிலான குழுவினர் இவர்களுக்கான விளக்கப் பயிற்சியை மாவட்ட செயலகத்தில் மேற்கொண்டனர்.

இதில் 200 மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (2-15-281)

# சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக நடைபெற்று முடிந்த கலந்துரையாடல்

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் பெண்கள் சிறுவர் தொடர்பான கலந்துரையாடல் இடம் பெற்றுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் கடந்த 21 ஆம் திகதி இடம் பெற்ற கலந்துரையாடலில் முல்லை. மாவட்டத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற சிறுவர் துஷ்பிரயோகம்தொடர்பாகவும்ஆண். பெண் பால் நிலை சமத்துவத்திற்கிடையில் ஏற்படும் வன்முறைகளை தடுத்தல், அதற்கு தீர்வுகாணும் முகமாக இக் கலந்துரையாடல் இடம் பெற்றுள்ளது. இதில் இலங்கை பொலிஸ் சிறுவர் பெண்கள் விவகார உத்தியோகத்தர். மாவட்ட செயலக பெண்கள் சிறுவர் உத்தியோகத்தர்கள். சட்ட உதவி ஆணையாளர்கள். அரசசார்பற்ற நிறுவனத்தின் பிரதிநிதிகள்.முல்லைத்தீவு மாவட்ட வைத்திய அதிகாரி. சீர்திருத்த உத்தியோகத்தர்கள் ஆகியோர் இதற்கான விளக்கப் பயிற்சியையும் வழங்கியுள்ளனர்.

இதற்கு மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் உதவி செயலாளர் அசோக அளவத்தையும் பொலிஸ் பொறுப்பதிகாரியும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-15-281)

# முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பேருந்து உரிமையாளர்களுக்கான கலந்துரையாடல்

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பேருந்து உரிமையாளர்களுக்கான கலந்துரையாடல் மாவட்ட செயலகத்தில் வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சரினால் முன்னெடுக்கப்பட்டது.

போக்குவரத்து.மீன்பிடி. கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரனால் இக் கலந்துரையாடல் முல்லைத்தீவு மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதில் தற்போது வடக்கு மாகாணத்திலும் மாவட்டத்திலும் அரச பேருந்துகளுக்கும் தனியார் பேருந்துகளுக்குமிடையில் மோதல்கள் இடம்பெற்று வருவதனாலும் இதிலிருந்து பிரயாணிகள் பாதிக் கப்படுவதாகவும் இதனைசீர் செய்யும் முகமாகவும் வடக்கு மாகாண வீதிபோக்குவரத்து திணைக்களமாக கடந்த 19 ஆம் திகதி அங்குரார்ப்பணம் செய்யப்பட்டு இதன் முதல் கலந்துரையாடல் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

போக்குவரத்து அமைச்சரினால் வடக்கு மாகாணத்தில் பேருந்துகளுக்கிடையில் எந்தவித இடையூறுமின்றி இனிவரும் காலங்களில் சேவைகள் இடம் பெறும் என உறுதியளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-15-281)

# கழிவுப் பொருட்களை ஒப்படைக்குக

(சிவநகர்)

மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் பொலித்தீன், பிளாஸ்ரிக் இலத்திரனியல் மின்சாதனக் கழிவுகள் அகற்றும் முகாமைத்துவ வாரம் தேசிய ரீதியில் ஒக்டோபர் 23 தொடக்கம் 30 ஆம் திகதி வரை கொண்டாடப்படுகின்றது.

இதற்கமைய கிளிநொச்சி மாவட்ட சுற்றாடல் அதிகாரசபையின் ஏற்பாட்டில் இதற்கான ஆரம்ப நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் சி.சத்தியசீலன் தலைமையில் கரைச்சி பிரதேச செயலக வளாகத்தில் நடைபெறவுள்ளது.

எனவே கிளிநொச்சி மாவட்ட பொதுமக்கள், அரச அலுவலர்கள், மாணவர்கள் அனைவரும் மேற்படி கழிவுப் பொருட்களை கொண்டு வந்து ஒப்படைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட சுற்றாடல் அதிகாரசபை மாவட்ட அலுவலர் திருமதி அ.செல்வி வேண்டுகோள் விடுத்துள்ளார். (2-254)




யாழ்.நவாலி ஸ்தான அ.மி.த.க.பாடசாலையில் இடம் பெற்ற வாணிவிழா நிகழ்வில் கலந்து கொண்ட பாடசாலை அதிபர் ஜெ.ஞானசீலன், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்களைப் படத்தில் காணலாம்.



தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சில் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் சிறுபான்மையினருக்கான விசேட அறிக்கையாளர் ரீட்டா ஐசாக் மற்றும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதிநிதிகளுடனான விசேட சந்திப்பில் கலந்து கொண்ட தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசனையும் உப தலைவர் வீ.இராதா கிருஷ்ணன், செயலாளர் ஏ.லோரன்ஸையும், மேல் மாகாண சபை உறுப்பினர்களான சண். குகவரதன், கே.டி.குருசாமி உட்பட பிரதிநிதிகளையும் படத்தில் காணலாம்.






யாழ். மாவட்டத்துக்கான நீர் வழங்கும் வேலைத்திட்டங்கள், தற்போதைய வறட்சி காலநிலையில் உள்ள நீர்த்தேவை மற்றும் எதிர்கால நீர்த் தேவைகளை எவ்வாறு சீர்செய்வது என்பது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று அண்மையில் தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபையின் யாழ்.காரியாலயத்தில் நடைபெற்றது. இக்கலந்துரையாடலில் தேசிய நீர் வழங்கல் பொறியியலாளர்கள், உயர் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டு தமது கருத்துக்களை முன் வைத்தனர். இக் கலந்துரையாடலில் தேசிய நீர் வழங்கல் வடிகால் சபையின் பிரதி தவிசாளர் சபீர் ரஜாப்தீன், திட்டப்பணிப்பாளர் பாரதிதாசன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் யாழ். மாவட்ட அமைப்பாளர் ரொசான் தமீம் ஆகியோர் கலந்து கொண்டதுடன் தாளையடி, கிளிநொச்சி இரணைமடு குளம் ஆகியவையின் புனர்நிர்மாணங்கள் தொடர்பாகவும் ஆராய்ந்தனர். (படங்கள்: பொ.சோபிகா)








நவாலி மகா வித்தியாலயத்தின் நிறுவுநர் தினவிழாவும் பரிசளிப்பு விழாவும் அண்மையில் பாடசாலையில் அதிபர் எஸ். மாதவன் தலைமையில் இடம்பெற்றன. இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக வட மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்து கொண்டதுடன் பாடசாலை முன் வளாகத்தில் அமைந்துள்ள நவாலியூர் சோமசுந்தரப்புலவரின் சிலைக்கும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.(படங்கள்:-கிஷோர்)





தீவகத்துக்கான கிராமிய கடற்றொழில் அமைப்பின் சமாசத்துக்கான செயலாளர் ரவியால் காரைநகர் மாலை நேர வகுப்பில் கல்வி கற்கும் கல்வன்தாழ்வு மற்றும் கிழவன் - காடு கிராம மாணவர்கள் 80 பேருக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.







தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் 2016 ஆம் ஆண்டிற்கான மாணவர் பாராளுமன்றத் தேர்தல் கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலை அதிபர் ரி.வரதன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது.



அகில இலங்கை திருமுறை மன்றம் அண்மையில் யாழ். கந்தர்மடம் இந்து சமய பேரவை ஸ்ரீநடராஜப் பெருமான் திருக்கோயிலில் நடத்திய திருமுறைப் பெருவிழாவில் தேவாரப் பண்ணிசைக் கச்சேரி வழங்கிய நுண்கலைமாணி செல்வி சித்திரா கந்தசாமி மன்றத்தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகத்தால் திருமுறை இசை வல்லார் விருது வழங்கி பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

# நிறைவேற்று அதிகாரத்தை பிரயோகிக்க ஆயத்தமாகும் ஜனாதிபதி மைத்திரிபால

இலங்கையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட இறுதி ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன திகழ்கிறார்.

அவர் தனது முழு அதிகாரங்களையும் வெளிப்படுத்தாமையால், அவர் அரசியல் பின்னடைவை சந்தித்துள்ளதாக அவரது அரசியல் ஆலோசகர்கள் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி தனது அதிகாரத்தை பயன்படுத்தி செயற்பட வேண்டும் எனவும் முக்கியமாக மீண்டுமொரு முறை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட வேண்டும் என அவருக்கு நெருக்கமானவர்களினால் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அதற்கான சூழலை தற்போது தெரிவு செய்துள்ளதனை காண முடிகின்றது.

கொழும்பில் பொலித்தீன், பிளாஸ்டிக் மற்றும் மின்னணு கழிவு தடுப்பு வாரம் ஒன்றை பிரகடனப்படுத்தும் நிகழ்வில் ஜனாதிபதி பங்கேற்றிருந்தார்.

இதன்போது பாரிய திட்டமொன்றிற்காக மண் மற்றும் காடுகளை அழிப்பது தொடர்பிலான நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கும் அதிகாரிகளை கடுமையாக கண்டிக்கும் வகையில் உரையாற்றியிருந்தார்.

அனுமதியுடன் மேற்கொள்ளப்படும் அழிப்பு தொடர்பில் அந்த நிறுவனங்களின் அதிகாரிகளை கண்டுபிடித்து ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்வதற்கு பின்வாங்கப்போவதில்லை என ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்மூலம் ஜனாதிபதி தன்னகத்தே உள்ள நிறைவேற்று அதிகாரங்களை தற்போது பகிரங்கமாக பயன்படுத்த ஆரம்பித்துள்ளதாக அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். (இ-7)

# பெண்கள் அமைப்பை உருவாக்க திட்டமிடுகிறது கூட்டு எதிர்க்கட்சி

(கொழும்பு)

கூட்டு எதிர்க்கட்சி புதிதாக பெண்கள் அமைப்பு ஒன்றை உருவாக்கத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கூட்டு எதிர்க்கட்சியின் புதிய அரசியல் கட்சிக்கு சமாந்தரமாக மகளிர் அமைப்பு ஒன்றை உருவாக்க அதன் தலைவர்கள் தீர்மானித்துள்ளனர்.

இதன்படி குறித்த மகளிர் அமைப்பு வலையமைப்பு எதிர்வரும் வாரங்களில் நாடு முழுவதிலும் உருவாக்கப்படவுள்ளது.

இது தொடர்பிலான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் ஏற்கனவே முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கூட்டு எதிர்க்கட்சியினர் மத அமைப்புக்கள், தொழிற்சங்கங்கள் மற்றும் இளைஞர் அமைப்புக்களையும் அமைக்கத் திட்டமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதன் ஓர் அங்கமாக தற்போது மகளிர் அமைப்பு ஒன்றையும் உருவாக்க திட்டமிட்டுள்ளனர்.

இதேவேளை, இந்த ஆண்டின் இறுதி வரையில் கூட்டு எதிர்க்கட்சியின் புதிய அரசியல் கட்சி பற்றி அறிவிக்கப்படாது என அதன் தலைவர்கள் முன்னதாக அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# தவறுகளைத் தொடர்கிறது பொலிஸ் முன்னிலை சோசலிசக் கட்சி விசனம்

பொலிஸார் வழமையான தவறுகளைத் தொடர்ந்தும் செய்து வருவதாக முன்னிலை சோசலிச கட்சியின் பிரசார செயலாளர் புபுது ஜகொட குற்றம் சுமத்தியுள்ளார். யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவம் குறித்து செய்தியாளர்களுக்கு கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், சில ஆண்டுகளுக்கு முன்னதாக பசியாலை பிரதேசத்தில் இவ்வாறான ஓர் சம்பவம் இடம்பெற்றிருந்தது. இளைஞர் ஒருவரை பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தி கொலை செய்திருந்தனர். உத்தரவினை மீறி வண்டியை நிறுத்தாது சென்ற காரணத்தினால் துப்பாக்கிச் சூடு நடத்தியதாக அப்போது பொலிஸார் கூறியிருந்தனர். எனினும் பிரேதப் பரிசோதனையின் போது இளைஞரின் முன் பகுதியில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டது.

அண்மையில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார் "கடந்த அரசாங்க ஆட்சிக் காலத்திலேயே அவ்வாறான பொலிஸ் சேவை காணப்பட்டது. தற்போது தொழில்சார் பொலிஸ் திணைக்களமொன்று சிறந்த சேவையை வழங்கி வருகின்றது" தொழில்சார் பொலிஸார் கடமையில் ஈடுபட்டுள்ளமை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற சம்பவத்தின் மூலம் தெரிகின்றது. ஜனாதிபதியும், பிரதமரும், ஊடக அமைச்சரும் போட்டிக்கு ஊடக அறிக்கைகளை வெளியிட்டு வருகின்றனர்.

கலாசாரத்தை மாற்றியமைப்பதாகவே அவர்கள் அறிக்கை வெளியிடுகின்றனர். எனினும் இந்தக் கலாசாரத்தை அவர்கள் மாற்றியமைக்கப் போவதில்லை. பொலிஸ் ஆணைக்குழு உருவாக்கியதன் பின்னர் சிறந்த பொலிஸ் சேவை உருவாகும் என்றார்கள். எனினும் நாம் பார்த்தோம் அல்லவா பொலிஸாரின் நடவடிக்கைகளை என புபுது ஜாகொட தெரிவித்துள்ளார். (இ-7)

# புத்திஜீவிகள் நாடாளுமன்றம் ஒன்றை உருவாக்கத் திட்டம்

(கொழும்பு)

புத்திஜீவிகளின் நாடாளு மன்றமொன்றை உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

மக்களின் நலனை உறுதி செய்யக்கூடிய கொள்கைகளை உருவாக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்தும் நோக்கில் மக்கள் அரசவை என்ற பெயரில் ஓர் மாற்று நாடாளுமன்றமொன்றை உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

நாட்டின் முக்கியமான புத்திஜீவிகளினால் இந்த மாற்று நாடாளுமன்றம் அமைக்கும் முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது.

தற்போது நாட்டில் காணப்படும் அரசியல் கட்டமைப்பிற்கு மாறுபட்ட அடிப்படையில் இந்த மக்கள் அரசவை அமையும் என இந்த திட்டத்தை முன்னெடுக்கும் முக்கிய பங்குதாரர்களில் ஒருவரான சட்டத்தரணி பிரசன்ன லால் அல்விஸ் தெரிவித்துள்ளார்.

செயற்பாட்டு அரசியலில் தொடர்புபடாத சிங்கள, தமிழ், முஸ்லிம் புத்திஜீவிகள் மாற்று நாடாளுமன்றின் உறுப்பினர்களாக மாவட்ட மட்டத்தில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

குறுகிய இனவாத அடிப்படைகளில் அன்றி தேசிய நோக்கங்களின் அடிப்படையில் இந்த நாடாளுமன்றம் இயங்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

இனவாத அடிப்படையில் அரசாங்கம் மற்றும் ஏனைய தரப்புக்கள் எடுக்கும் தீர்மானங்களுக்கு மாற்று தீர்மானங்களை முன்வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் மக்களின் பங்களிப்பு மற்றும் ஒத்துழைப்புடன் இந்த மக்கள் அரசவை இயங்கும் என சிங்கள வார இறுதி பத்திரிகையொன்றுக்கு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# செய்தித்துளிகள்

## இலங்கை கிரிக்கெட் நிறுவன முன்னாள் தலைவர் கைதானார்



இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் முன்னாள் தலைவர் ஒருவர் டுபாய் நாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

டுபாயிலுள்ள விமான நிலையத்தில் வைத்து அந்நாட்டு பாதுகாப்புப் பிரிவினால் இவர் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் முன்னாள் தலைவர் உபாலி தர்மதாச என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். (இ)

## கடன் கொடுக்கல் - வாங்கல் நண்பனின் கழுத்தையறுத்த நபர்

நண்பன் ஒருவரினால் இன்னுமொரு நண்பன் கழுத்து வெட்டி கொலை செய்யப்பட்ட சம்பவமொன்று கேகாலைப் பொலிஸ் பிரிவில் இடம்பெற்றுள்ளது.

கேகாலை, ஹெட்டிமுல்லைப் பிரதேசத்திலுள்ள 29 வயது நபர் ஒருவரே இவ்வாறு நேற்றுக் காலை கொலை செய்யப்பட்டுள்ளார். கடன் கொடுக்கல் வாங்கல் இக்கொலைக்குக் காரணம் என ஆரம்ப கட்ட விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது.

கொலையுடன் சம்பந்தப்பட்டவர்களை பிடிப்பதற்கு பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இரண்டு இலட்சம் ரூபாவை நண்பனிடமிருந்து கடனாக பெற்ற மற்றுமொரு நண்பனே கடனைத் திருப்பிக் கேட்ட போது கடன் கொடுத்த நண்பனைக் கொலை செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## புகையிரதம் முன் பாய்ந்து நபர் ஒருவர் தற்கொலை

அம்பலாங்கொடை, கல்துவ பகுதியில் நபர் ஒருவர் புகையிரதம் முன் பாய்ந்து நேற்று நண்பகல் தற்கொலை செய்துள்ளார்.

கண்டியில் இருந்து மாத்தறை நோக்கிச் சென்று கொண்டிருந்த பயணிகள் புகையிரதத்தில் மோதியே குறித்த நபர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்த நபர் அக்குரஸ்ஸ, வில்பிட பகுதியைச் சேர்ந்தவர் (34 வயது) என பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

மேலும், இந்த நபரின் சடலம் பலபிடிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பான மேலதிக விசாரணைகள் பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கூறப்படுகின்றது. (இ-7)

## போக்குவரத்து ஒத்திகை

கொழும்பில் நாளை 25 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை வாகன போக்குவரத்து ஒத்திகை இடம்பெறவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

குறித்த நாட்களில் நுகேகொடை மற்றும் தெஹிவளை மேம்பாலத்தில் காலை 7 மணி முதல் காலை 8 மணி வரை கொழும்பு நோக்கி செல்லும் வாகனங்கள் மாத்திரம் அனுமதிக்கப்படவுள்ளன.

இதேவேளை, மாலை 5.30 மணிமுதல் 6.30 மணி வரையான காலத்தில் கொழும்பில் இருந்து வெளிச் செல்லும் வாகனங்கள் மாத்திரம் மேம்பாலத்தினூடாக செல்வதற்கு அனுமதிக்கப்படும் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

## கடற்றொழிலாளர்கள் 56 பேர் கைது


(கொழும்பு)

தடை செய்யப்பட்ட வலையினைப் பயன்படுத்தி கடற்றொழிலில் ஈடுபட்ட 56 கடல் தொழிலாளர்களை கடற்படையினர் கைதுசெய்துள்ளனர்.


கடந்த 3 நாட்களில் மன்னார், சிலாவத்துறை போன்ற கடற்பிரதேசங்களிலேயே கடற்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்புக்களின் போது குறித்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.


இதன்போது கடற்றொழில் நடவடிக்கைக்காக பயன்படுத்தப்பட்ட 18 படகுகள் மற்றும் தடை செய்யப்பட்ட வலைகள் உள்ளிட்ட மீன்பிடி உபகரணங்களையும் கடற்படையினர் கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# புகையிரதம் தடம் புரண்டு விபத்து; 100 பேர் பலி ! 500 பேர் படுகாயம்









***மேற்கு ஆபிரிக்காவின் கேமரூன் நாட்டில் புகையிரதம் தடம் புரண்டு விபத்துக்குள்ளானதில் 100 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். 500 பேர் படுகாய மடைந்தனர்.***

மேற்கு ஆபிரிக்காவின் கேமரூன் நாட்டில் பயணிகள் புகையிரதம் தடம் புரண்டு விபத்து ஏற்பட்டது. புகையிரதத்தில் அதிக அளவில் மக்கள் பயணம் செய்திருந்தனர்.

புகையிரதம் எசெகா நகரினை அடைவதற்கு சற்று முன்பு தடம் புரண்டது. ஏராளமான புகையிரதப் பெட்டிகள் தண்டவாளத்தை விட்டு வெகுதூரம் துண்டிக்கப்பட்டு விழுந்தது.

இந்த கோர விபத்தில் சுமார் 100 பேர் உயிரிழந்தனர். 500இற்கும் அதிகமானோர் படுகாயம் அடைந்தனர். காயமடைந்தவர்கள் ில் பலரது நிலைமை கவலைக் கிடமாக உள்ளது.

கேமரூன் தலைநகர் யாவுண்டே மற்றும் மற்றொரு வர்ந்தக நகரமான டவுலாலா இடையே இந்த பயணிகள் புகையிரதம் நேற்று முன் தினம் மாலை சென்றது.

கடுமையான போக்குவரத்து இடையூறு காரணமாக இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக கேமரூன் போக்குவரத்து துறை அமைச்சர் எட்கர் அலென் தெரிவித்தார். (இ-7)

# சைபீரியாவில் ஹெலிகொப்டர் விபத்தில் 19 பேர் பரிதாபமாகப் பலி; 3பேர் மீட்பு



(மொஸ்கோ)

ரஷ்யாவில் ஏற்பட்ட ஹெலிகொப்டர் விபத்தில் 19 பேர் பலியாகினர். ரஷ்யாவின் சைபீரியா பிராந்தியத்தில் உள்ள கிராஸ்னோயார்ஸ்க் பகுதியில் இருந்து யமலோ - நீநெட்ஸ்கையில் உள்ள நோவி உரேன்ஜாய் பகுதிக்கு ஹெலிகொப்டர் ஒன்று சென்றது.

இதில் மொத்தம் 22 பேர் பயணம் செய்தனர். இந்த ஹெலிகொப்டர் திடீரென கீழே விழுந்து நொறுங்கியது.

நேற்றுக் காலை இடம்பெற்ற இந்த விபத்தில் படுகாயமடைந்த 19 பேர் பரிதாபமாக பலியானார்கள். இடிபாடுகளில் சிக்கிய 3 பேர் மீட்பு குழுவினரால் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

நோவி உரேன்ஜாய் பகுதியில் இருந்து சுமார் 80 கிமீ தொலைவில் தரையிறங்கும் போது ஹெலிகொப்டரில் ஏற்பட்ட கோளாறு காரணமாக விபத்திற்குள்ளாகி இருக்கலாம் என்று கூறப்படுகிறது.

மோசமான வானிலையால் இந்த விபத்து ஏற்பட்டதா அல்லது இயந்திரக் கோளாறு காரணமாக ஏற்பட்டதா என விசாரணை நடக்கிறது. (இ-7)

# காஷ்மீரில் 107வது நாளாக இயல்பு வாழ்க்கை முடக்கம்


## கடைகள், அலுவலகங்கள் அடைப்பு



ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் 107 ஆவது நாளாக நேற்றும் பல்வேறு இடங்களில் கடைகள் அடைக்கப்பட்டிருந்தன. ஸ்ரீநகரில் ஊரடங்கு உத்தரவு அமுலில் உள்ளதால், மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது. ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் பாகிஸ்தான் இராணுவத்தினர் தொடர்ந்து நேற்றும் அத்துமீறி துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர். (இ-7)

# எகிப்து முன்னாள் ஜனாதிபதிக்கு 20 ஆண்டுகள் சிறைத்தண்டனை

## குற்றவியல் நீதிமன்று அதிரடி



(கெய்ரோ)

**எகிப்து நாட்டின் முன்னாள் ஜனாதிபதி முகமது மோர்சிக்கு, 20 ஆண்டுகள் சிறைத் தண்டனையை குற்றவியல் நீதிமன்றம் உறுதி செய்துள்ளது.**

மேலும், அவரின் குற்றத்துக்கு துணைபோன 8 பேருக்கும் 20 ஆண்டுகள் வரை தண்டனை உறுதி செய்யப்பட்டதோடு, அவர்களின் மேல்முறையீடும் நிராகரிக்கப்பட்டது.

மக்களின் எதிர்ப்பால், கடந்த 2013 ஆம் ஆண்டு பதவியில் இருந்து அகற்றப்பட்ட மோர்சி, அவருக்கு எதிராக நடந்த போராட்டங்களை ஒடுக்கும் விதத்தில் போராட்டக்காரர்களை சித்திரவதை செய்து, கொல்ல உத்தரவிட்டதாக அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டது.

இதையடுத்து, கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். இதன்பின் அவர் மீது பல வேறுவழக்குகள் தொடரப்பட்டன.

இதில், 2012ஆம் ஆண்டு, ஜனாதிபதி மாளிகைக்கு எதிரே நடந்த போராட்டத்தின் போது, போராட்டக்காரர்கள் மீது வன்முறையை ஏவியது தொடர்பான வழக்கை கெய்ரோ நீதிமன்றம் விசாரணை நடத்தியது.

இந்த வழக்கில், மோர்சிக்கு 20 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. தடை செய்யப்பட்ட அவரது சகோதரத்துவ கட்சியினருக்கும் 20 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

இந்த தீர்ப்பை எதிர்த்து குற்றவியல் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. இந்த வழக்கின் விசாரணை முடிவடைந்த நிலையில, கடந்த வெள்ளிக்கிழமை அவருக்கு குறித்த தீர்ப்பு வழங்கப்பட்டது. (இ-7)

# சிறைக்காவலரை படுகொலை செய்து விட்டு ஆயுதங்களுடன் 174 கைதிகள் தப்பியோட்டம்



கரீபியன் கடல்பகுதியில் அமைந்துள்ள தீவுநாடான ஹைதியின் வடக்கு பகுதியில் உள்ள சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்த கைதிகள் சிறைக் காவலரை கொன்றுவிட்டு ஆயுதங்களுடன் தப்பியோடிய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஹைதி நாட்டின் வடபகுதியான அர்காயே மாநிலத்தில் உள்ள மத்திய சிறையில் கொடும் குற்றவாளிகள் உட்பட சுமார் 300 கைதிகள் அடைத்து வைக்கப்பட்டிருந்தனர்.

நேற்று முன்தினம் காலை குளியலுக்காக கைதிகளை திறந்துவிட்டபோது சிறைக் காவலர்களின் ஓய்வு அறைக்குள் நுழைந்த கைதிகள் ஒரு காவலரை கொன்றுவிட்டு அங்கிருந்த துப்பாக்கிகளை அள்ளிச் சென்றனர்.

துப்பாக்கிகளால் சுட்டபடி சிறையின் வாயிற்பகுதியை நோக்கி ஓடிய அவர்கள் அங்கிருந்த வாயிற்காவலரை தூக்கிவிட்டு வெளியே தப்பியோடினர். இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி பலர் மதில் சுவரை தாண்டி குதித்தும் தப்பியோடினர். இப்படி தப்பியோட முயன்றவர்களில் ஒரு கைதி கீழே விழுந்து மண்டை உடைந்து சம்பவ இடத்திலேயே பலியானார்.

மொத்தம் 174 கைதிகள் தப்பியோடி விட்டதாக சிறை நிர்வாகம் தெரிவித்துள்ள நிலையில், மாநிலம் முழுவதும் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு அவர்களை மீண்டும் கைது செய்வதற்கான நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (இ-7)




# 550 குடும்பத்தினரை மனிதக் கேடயமாக்கிய ஐ.எஸ்.தீவிரவாதிகள்



(பக்தாத்)

ஈராக்கில் மொசூல் நகரில் நடைபெறும் போரில், 550 குடும்பத்தினரை ஐ.எஸ. தீவிரவாதிகள் மனித கேடயமாக பிடித்து வைத்துள்ளனர்.

ஈராக்கில் 2ஆவது பெரிய நகரமான மொசூல் ஐ.எஸ். தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டிலுள்ளது. அதை ஈராக் இராணுவம் அமெரிக்க கூட்டுப் படை மற்றும் குர்தீஸ் படையுடன் இணைந்து படிப்படியாக மீட்டு வருகிறது.

எனவே ஐ.எஸ். தீவிரவாதிகளுடன் அதிரடியாக சண்டை நடைபெற்று வருகிறது.

கடந்த 5 நாட்களாக மொசூல பகுதியை ஈராக் இராணுவம் முற்றுகையிட்டு ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு கடும் நெருக்கடி கொடுத்துள்ளது.

இதனால் செய்வது அறியாமல் திகைத்து நிற்கும் தீவிரவாதிகள் இராணுவத்தின் கவனத்தை திசை திருப்ப அதன் அருகேயுள்ள கிர்குக் நகரில் தாக்குதல் நடத்தினார்கள்.

அங்கு நடந்த தாக்குதலில் 24 பேர் பலியாகினர். இருந்தும் ஈராக் படைகளை ஐ.எஸ். தீவிரவாதிகளால் வெற்றி பெற முடியவில்லை.

இதற்கிடையே மொசூல், கிர்குக் பகுதிகளை சுற்றியுள்ள கிராமங்களை சேர்ந்த 550 குடும்பத்தினரை பிடித்து மனித கேடயமாக்கி வைத்துள்ளனர்.

மேலும் கிர்குக் நகரில் 5 தற்கொலை படை தீவிரவாதிகள் அரசு அலுவலகங்களை குறிவைத்து தாக்குதல் நடத்தினார்கள். குறிப்பாக பொலிஸ் தலைமை அலுவலகம் மீது மிகப்பெரிய தாக்குதல் நடத்தப்பட்டது. (இ-7)

# அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் ஹிலாரி தொடர்ந்து முன்னிலை

(நியூயோர்க்)

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் கருத்துக்கணிப்புகளில் தொடர்ந்து ஜனநாயக கட்சி வேட்பாளர் ஹிலாரி கிளின்டன் முன்னிலை வகித்தாலும், மக்களிடையே ட்ரம்பின் செல்வாக்கும் சற்று அதிகரித்து இருப்பது தெரியவந்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் களம், நாளுக்கு நாள் சூடு பிடித்து வருகிறது. தொடர்ந்து தேர்தல் கருத்துக் கணிப்புகள் நடத்தி முடிவுகள் வெளியிடப்பட்டு வருகின்றன.


குடியரசு கட்சி வேட்பாளர் டொனால்டுட்ரம்ப் மீது தொடர்ந்து பல பெண்கள் பாலியல் புகார்களை கூறியதை தொடர்ந்து அவருக்கு, கட்சியில் செல்வாக்கு குறைந்துள்ளது. பல தலைவர்கள் அவருக்கு எதிராக திரும்பியுள்ளனர்.

கருத்துக்கணிப்புகளில் தொடர்ந்து ஜனநாயக கட்சி வேட்பாளர் ஹிலாரி கிளின்டன் முன்னிலை வகித்தாலும், மக்களிடையே ட்ரம்பின செல்வாக்கும் சற்று அதிகரித்து இருப்பது அண்மையில் நடத்தப்பட்ட ஒரு கருத்துக்கணிப்பில் தெரிய வந்துள்ளது.

கடந்த 14 ஆம் திகதி தொடங்கி 20 ஆம் திகதி வரை 'ராயிட்டர்ஸ்-இப் சோஸ்' நடத்திய கருத்துக்கணிப்பில் ஜனநாயக கட்சி வேட்பாளர் ஹிலாரி கிளின்டனுக்கு 44 சதவீதம் பேரின் ஆதரவு இருப்பது தெரிய வந்தது.

ஆனால் ட்ரம்பை 40 சதவீதம் பேர் ஆதரிக்கின்றனர். இருவரிடையேயான வித்தியாசம் 4 சதவீதம்தான்.

கடந்த 7 ஆம் திகதி முதல 13 ஆம் திகதி வரை நடத்தப்பட்ட கருத்துக்கணிப்பில் ஹிலாரியை 44 சதவீதம் பேரும், ட்ரம்பை 37 சதவீதம் பேரும் ஆதரித்தனர். இருவருக்கு இடையே 7 சதவதம் வித்தியாசம் நிலவியது.



இப்போது அந்த 7 சதவீத ஆதரவு வித்தியாசம், 4 சதவீதமாக குறைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)






நீர்வைச் சிவப்பிரகாச பண்டிதர் உரைவகுத்த திருச்செந்தூர்ப்புராணம் மூலமும் உரைநூலதும் வெளியீட்டு விழா அண்மையில் நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோவில் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் ஆசியுரைகளை வாய்க்காற்றரவைப் பிள்ளையார் கோவில் பிரதமகுரு சிவஸ்ரீ ஆ.சந்திரசேகரக்குருக்கள், இணுவில் தர்மசாஸ்தா குருகுல அதிபர் சிவஸ்ரீ தா.மகாதேவக்குருக்கள், நீர்வைமணி சிவஸ்ரீ கு.தியாகராஜக் குருக்கள் ஆகியோரும் அருளுரைகளை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், யாழ். சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் பிரம்மசாரி ஜாக்கிரத சைதன்யாவும் நிகழ்த்தினர்.

நூலின் வெளியீட்டுரையை தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் ஆற்றினார். நூலின் முதற்பிரதியை நூலை மீள வெளியீடு செய்த நீர்வை அரசகேசரிப் பிள்ளையார் கோவில் பிரதமகுரு சிவஸ்ரீ சாம்பசதாசிவ சோமதேவக்குருக்கள் வெளியிட்டு வைக்க மயிலணி கந்தசுவாமி கோவில் பிரதமகுரு சிவஸ்ரீ வ.உமாசுதக் குருக்கள் பெற்றுக்கொண்டார்.





மரநடுகை வாரத்தை முன்னிட்டு சாவகச்சேரி நகர சபை மண்டபத்தில் கடந்த 18 ஆம் திகதி நகரசபைச் செயலாளர் தலைமையில் இலவச தென்னங்கன்றுகள் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்வில் யாழ். மாவட்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெ.சத்தியேந்திரன் பயனாளி ஒருவருக்கு தென்னங்கன்றுகளை வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.





வடக்கு முதலமைச்சர் அமைச்சின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் நல்லூர் சங்கிலியன் பூங்காவில் வடக்கின் பாரம்பரிய உணவுத் திருவிழா இடம்பெற்றது. உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் அனுசரணையுடன் முதலமைச்சர் அமைச்சின் செயலாளர் கே.விஜயலட்சுமி தலைமையில் நடைபெற்ற பாரம்பரிய உணவுத் திருவிழாவில் வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், வடமாகாணசபை எதிர்க்கட்சி தலைவர் சி.தவராசா , மாகாணசபை உறுப்பினர்கள் பா.கஜதீபன், அ.பரஞ்சோதி, திட்டமிடல் பணிப்பாளர் த.சர்வானந்தா, யாழ்ப்பாண பிரதேச செயலர் பொ.தயானந்தன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். இதன்போது பாரம்பரிய உணவுத்தயாரிப்பு போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ்களும் பணப்பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன. (படங்கள்:-கிஷோர்)



வடமாகாணசபை உறுப்பினர் கே.என். விந்தன் கனகரத்தினத்தின் 2016 ஆம் ஆண்டுக்கான பிரமான அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதி ஒதுக்கீட்டின் மூலம் ஊர்காவற்றுறை மற்றும் சாவகச்சேரி பகுதியில் வசிக்கும் வறுமை நிலையிலுள்ள இரண்டு விவசாய குடும்பங்களுக்கு சுயதொழில் முயற்சிக்காக நீர் இறைக்கும் இயந்திரங்கள் இரண்டு வழங்கப்பட்டன. உறுப்பினர் கே.என். விந்தன் கனகரத்தினத்தோடு இணைந்து பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் அ.செல்வராசா, பாட விதான உத்தியோகத்தர் திருமதி க.ஜெயசீலன், விவசாய கண்காணிப்பு உத்தியோகத்தர் வி.இளங்குமார், அபிவிருத்தி உத்தியோகத்தர் அ.தரன் ஆகியோரும் இணைந்து வழங்குவதைப் படத்தில் காணலாம்




யாழ்.புற்றளை மகா வித்தியாலயத்தில் அண்மையில் சிறுவர் தின விழா இடம்பெற்றது.

# பௌத்தத்திற்கான முக்கியத்துவத்தை நீக்குமாறு யாரும் கோரவில்லை -ரணில்

(கொழும்பு)

**பௌத்த மதத்திற்கான முக்கியத்துவத்தை நீக்குமாறு யாரும் கோரவில்லை என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**



கங்கொடவில விஹாரையல் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற நிகழ்வில் பங்கேற்ற போது பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

பௌத்த மதத்திற்கு தற்போது வழங்கப்பட்டு வரும் முக்கியத்துவத்தை இரத்து செய்யுமாறு எந்தவொரு அரசியல் கட்சியும் கோரவில்லை.

ஜனாதிபதிக்கோ, எனக்கோ அல்லது அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள் எவருக்குமோ மதமொன்றின் மீது கை வைக்க எவ்வித அவசியமும் கிடையாது. காணப்படும் உரிமைகளை மாற்றியமைக்க வேண்டிய அவசியமும் இல்லை.

அனைத்து மக்களுக்கும் தங்களது மதங்களை சுதந்திரமாக பிரச்சினையின்றி வழிபாடு செய்ய சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுப்பதுடன், பௌத்த மதத்திற்கான முன்னுரிமையை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் எந்தவொரு அரசியல் கட்சியும் பௌத்த மதத்திற்கான முன்னுரிமையை இல்லாமல் செய்யுமாறு கோரவில்லை.

அரசியல் அமைப்பினை தனியாக உருவாக்கிவிட முடியாது. அரசியல் அமைப்பினை உருவாக்குவது குறித்த ஆரம்ப கட்ட பணிகளே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மக்களின் கருத்துக்களை பெற்றுக் கொண்டதன் பின்னரே அரசியல் அமைப்பு அமைப்பது குறித்து இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)



# மத்திய வங்கி ஆளுநரை நீக்க நான்தான் காரணம்

## மகிந்த அமரவீர ஒப்புதல்



(கொழும்பு)

முன்னாள் மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் தொடர்பில் முதலாவது குற்றச்சாட்டினை கோப் ஆணைக்குழுவிடம் கொண்டு சென்றது நானே.

அவரை பதவியில் இருந்து நீக்கும் வரை நாம் ஓயவில்லை என கடற்றொழில் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

நேற்று முன்தினம் மாத்தறையில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போதே அவர் இதனைக் கூறி னார்.

அர்ஜுன் மகேந்திரன் மத்திய வங்கி ஆளுநர் பதவிக்கு பொறுத்தமற்றவர் என ஆரம்பம் முதலாகவே நாம் தெரிவித்து கொண்டே வந்தோம் இறுதியில் அவர் பதவி நீக்கப்பட்டார்.

தற்போது அவர் தொடர்பில் உள்ள குற்றச்சாட்டுகளை மாற்ற சிலர் முயற்சி செய்து வருகின்றனர். ஆனாலும் கூடிய விரைவில் நல்ல தீர்ப்பு கிடைக்கும்.

இந்த ஆட்சியில் பதவி பெரியதா அல்லது சிறியதா என்பது அவசியம் இல்லை. தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் தண்டிக்கப்பட வேண்டும் என்பதே நோக்கம். சுதந்திரக்கட்சியின கொள்கையும் அவ்வாறானதே எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிற்கு அடுத்த பணிப்பாளர் யார் என்பது தொடர்பில் என்னால் கருத்து கூற முடியாது.

அந்தப்பதவிக்கு பொருத்தமான, திறமையான, நம்பிக்கை மிக்க அனைவராலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய நேர்மையான ஒருவர் அமர்த்தப் படுவார் எனவும் மகிந்த அமரவீர தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சொத்து விபரங்களை வெளிப்படுத்தாத அரசியல்வாதிகளுக்கு எதிராக வழக்கு?

சொத்து விபரங்களை வெளிப்படுத்தாத அரசியல்வாதிகளுக்கு எதிராக வழக்குத் தொடரப்படவுள்ளது.

எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னதாக சொத்து விபரங்களை வெளியிடத் தவறும் அரசியல் கட்சிகளின் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், ராஜாங்க அமைச்சர்களுக்கு எதிராக இவ்வாறு வழக்குத் தொடரப்படவுள்ளது. இந்த மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னதாக சொத்து விபரங்களை வழங்குமாறு தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இவ்வாறு சொத்து விபரங்களை வெளியிடத் தவறும் அனைத்து அரசியல்வாதிகளுக்கு எதிராகவும் இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு விசாரணை ஆணைக்குழுவினால் வழக்குத் தொடரப்பட உள்ளதாக தேர்தல் ஆணைக்குழுவின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றை பிரதிநிதித்துவம் செய்யும் அரசியல்வாதிகள் கட்சித் தலைவர்கள் சபாநாயகரிடமும், நாடாளுமன்றை பிரதிநிதித்துவம் செய்யாத அரசியல் கட்சிகளின் தலைவர்கள் தேர்தல் ஆணைக்குழுவிடமும் சொதது விபரங்களை ஒப்படைக்க வேண்டும்.

அமைச்சரவை அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் ராஜாங்க அமைச்சர்கள் தங்களது சொத்து விபரங்களை ஜனாதிபதியிடம் ஒப்படைக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சறிசேனவும் ஓர் அரசியல் கட்சியின் தலைவர் என்பதனால அவரது சொத்து விபரங்களையும் தேர்தல் ஆணையாளரிடம் ஒப்படைக்க வேணடுமென தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

# முடங்கப்போகும் 620 விமானப் பயணங்கள்

கட்டுநாயக்க விமானநிலைய ஓடுபாதை விரிவாக்கப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளதால், ஸ்ரீலங்கன் விமான சேவையின் 620 விமானப் பயணங்கள் இரத்துச் செய்யப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம், கட்டுநாயக்க விமான நிலைய ஓடுபாதை விரிவாக்கப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதால், மூன்று மாதங்களுக்கு பகல் நேர விமான சேவைகள் இரத்துச் செய்யப்படவுள்ளன.

இதனால், மொத்தமாக 200 விமானப் பயணங்களை இரத்துச் செய்ய வேண்டிய நிலை ஏற்படும் என்றும் ஸ்ரீலங்கன் விமான சேவை முன்னர் கூறியிருந்தது.

ஆனால், மாதம் ஒன்றுக்கே 200 விமான சேவைகள் இரத்துச் செய்யப்படும் நிலை ஏற்படும் என்றும் நாளொன்றுக்கு, 7 விமானப் பயணங்கள் இரத்துச் செய்யப்படுவதால் மூன்று மாதங்களிலும் மொத்தமாக 620 விமான சேவைகளை இரத்துச் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அந்த நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரி சுரேன் ரத்வத்த தெரிவித்துள்ளார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## தவறுகளை உணர்த்தும் வழி!

எவருமே அவ்வளவு சுலபத்தில் தங்கள் தவறுகளையும் குறைகளையும் ஒப்புக் கொள்வா செய்கிறார்கள்? பெரும்பாலும் இல்லை. தங்கள் தவறை ஒப்புக் கொள்வது என்றால் அதற்கு அவர்களுக்கு மாபெரும் பெருந்தன்மையும் மனப் பக்குவமும் வேண்டியிருக்கின்றன. இவற்றை நாம் எல்லோரிடத்திலும் எதிர்பார்க்க இயலாது தான்.

இரண்டாவது வகையினர் இருக்கிறார்கள். இவர்கள் தங்கள் தவறின் ஒரு பகுதியை மட்டும் ஒப்புக் கொள்வர். மற்றவற்றை மூடி மறைத்துவிடுவார்கள். ஒரு தவறு நடந்துவிட்டால், அதற்கு நான் மட்டும் காரணமல்ல. நானும் ஒரு காரணம் என்று பங்கு பிரித்துத் தம் தவறை ஒப்புக் கொள்வார்கள்.

தப்பிக்கும் மனப்பான்மை என்பது மனிதனோடு இரத்தத்தில் கலந்துவிட்ட ஒன்று. அதை மாற்றுவது மகா கடினமே. ஒருவர் சென்னைக்குத் திருச்சியில் இருந்து இராமேஸ்வரம் எக்ஸ்பிரஸ் ரயிலில் டிக்கெட் எடுத்துத் தரச் சொல்லிவிட்டு வெளியே போய்விட்டார்.

இராமேஸ்வரம் ரயிலில் இடமில்லை. டிக்கெட் எடுக்கப் போனவர் இடமில்லை என்றதும் திரும்பிவிட்டார். டிக்கெட் எடுக்கச் சொன்னவருக்கோ மகாகோபம். இராமேஸ்வரத்திற்குக் கிடைக்காவிட்டால் என்ன? சேதுவில் எடுக்க வேண்டியது தானே? பாண்டியனில் எடுக்க வேண்டியது தானே? ராக்போர்ட்டில் எடுக்க வேண்டியது தானே என்று அடுக்கித் தள்ளினார். கோபம், சண்டை, வீண் மனத் தாங்கல்!

இராமேஸ்வரத்தில் கிடைக்காவிட்டால் என்ற கேள்வியை அவரே எழுப்பி, அப்படிக் கிடைக்காவிட்டால் இதில் எடு அதில் எடு என்று அவரே பதிலையும் சொல்லியிருக்க வேண்டும்.

இந்தக் கேள்வியை டிக்கெட் வாங்கப் போனவரே கூடக் கேட்டிருக்கலாம். பாவம்! அவருக்கு டிக்கெட் எடு என்றதுமே ரயில் நிலையம் , வரிசை , பிடிக்க வேண்டிய பஸ் , ரயில்வே விண்ணப்பப் பாரம் பேனா உரிய டிக்கெட் தொகை என்று நினைப்புக்கள் நிலை மாறிவிட்டன. ஆக இவருடைய தவறு என்பது குறைவுதான்.

ஆனால் டிக்கெட் எடுக்கச் சொன்னவரிடம் இதை எடுத்துச் சொன்னால் எடுபடாது. அவருடைய கோபம் தான் அதிகமாகும். எனவே இப்படிப்பட்ட நிலையில் ஒரு புதிய அணுகுமுறையைக் கையாள வேண்டும். எப்படித் தெரியுமா?

டிக்கெட் எடுக்கப் போனேன். இராமேஸ்வரத்தில் இடமில்லை. அதில் கிடைக்காவிட்டால் வேறு எந்த ரயிலில் டிக்கெட் எடுப்பது என்று கேட்டுக் கொள்ளாமல் விட்டுவிட்டது என் தவறு தான்... என்கிற பாணியில் ஆரம்பித்தால் போதும். சம்பந்தப்பட்டவருக்கு உறைக்க ஆரம்பித்துவிடும். அடடே என்ன மடத்தனம் நாம் செய்தது! மாற்று யோசனையைச் சொல்லாமல் வீணாக இந்த மனிதரை அலைய வைத்துவிட்டோமே....என்கிற பாணியில் அவர் எண்ணைத் தொடங்குவார். முழுத் தவறும் தன் மீது தான் என்பார். தலையில் அடித்துக் கொண்டாலும் வியப்படைவதற்கில்லை. ஆக, பிளேட்டைத் திருப்பிப் போடுவது தவறை உரியவர்கள் உணரச் செய்யச் சிறந்த வழி.

தவறைப் பலர் முன்னிலையில் உணர்த்த முயற்சி செய்வதும், உங்கள் தவறை உணர்த்துவது உங்கள் நன்மைக்காகவே என்பதைத் தெளிவடையச் செய்வதும் தவறைச் சுட்டிக் காட்டுபவர்கள் கருத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள்.

பெரும்பாலான தவறுகளை ,மிக அவசரம் என்று கருதினாலொழிய உடனே சுட்டிக்காட்டாமல் நம்முடைய மற்றும் அவர்களுடைய உணர்ச்சி வேகம் தணிந்த பிறகே சுட்டிக் காட்ட வேண்டும்.

எரிச்சலூட்டும் வகையில் தவறைச் சுட்டிக் காட்டுபவர்களுக்குத் தோல்வி மட்டுமே மிஞ்சும். அதனால் பகைதான் வளரும் என்பதையும் உணர வேண்டியது அவசியம்.

**லேனா தமிழ்வாணன்**




# மூக்குத்தி!

சுகந்தபுரி என்ற ஊரில் வட்டிக்கடை வைத்து நடத்தினான் வேணு. அவரது மனைவி வச்சலா சிறந்த குணவதி. வேணு பேராசை பிடித்தவன். அநியாய வட்டி வாங்கினான். தர்மவானான தந்தை முன்பு செய்து வந்த அன்னதானத்துக்கு முற்றுப்புள்ளி வைத்தான்.

"பூ, கற்பூரம், ஊதுபத்தி, சாம்பிராணி, இதெல்லாம் தண்டச் செலவு என்று கூறி தெய்வ வழிபாட்டை நிறுத்தினான். கணவனை எதிர்க்க முடியாத வச்சலா மவுனமாக கண்ணீர் உகுப்பாள்.

ஒருநாள் "வட்டிக்கடைக்காரர் வேணு வீடு எது?" என்று விசாரித்தப்படியே வந்தார் ஒரு பெரியவர்.

அவரிடம் "யாசகமா?" என்று இகழ்ச்சியாகக் கேட்டார் வேணு.

"ஆயிரம் வராகன் வேண்டும். என் பிள்ளைக்குக் கல்யாணம் வைத்திருக்கிறேன்," என்று பணிவோடு கேட்டார் பெரியவர்.

"ஏனய்யா, சொத்து பத்து இல்லாத நீர் எதற்காகப் பிள்ளைக்கு விவாகம் பண்ண வேண்டும்? கோவிலுக்கு சென்றீர்களானால் சுவாமிக்குப் போட்ட மாலையைத் தருவார்கள். அதையே உன் மகனிடம் கொடுத்து சன்னதியிலேயே மாலை மாற்றி, ஒரு மஞ்சள் கயிற்றில் மஞ்சள் கொம்பை முடிந்து கட்டும்படி கூறும். இதற்கு எதற்கு தண்டமாய் ஆயிரம் வராகன் கடன்படுகிறீர்?" என்று கடுகடுத்த வேணு கதவை சாத்திவிட்டு கடைக்குச் சென்றான்.

அவன் தலை மறைந்ததும் பெரியவர் வீட்டுக் கதவைத் தட்டி,



"அம்மணி' என்று குரல் கொடுத்தார்.

வச்சலா வெளியே வந்து "பெரியவரை நமஸ்கரித்து, "சுவாமி! என் பிறந்த வீட்டில் போட்ட வைர மூக்குத்தி ஒன்று திருகு தொலைந்து விட்டதால், பெட்டியில் போட்டு வைத்திருக்கிறேன். விற்றால் 2000 வராகன் கிடைக்கும். இதை பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் மகனின் திருமணத்தை சிறப்பாக நடத்துங்கள். ஆனால், இதை இந்த ஊரில் விற்க முயற்சிக்க வேண்டாம்," என்று எச்சரித்து விட்டு மூக்குத்தியை தேடி எடுத்து வந்து கொடுத்தாள்.

பெரியவர் வடிவில் வந்து மூக்குத்தியைப் பெற்றுச் சென்ற பகவான், நவரத்ன வியாபாரி ரூபத்தில் ஆடம்பரமாக உடை அணிந்து, வேணு கடைக்குச் சென்று மூக்குத்தியைக் காட்டி, "என்ன விலை கொடுப்பீர்?" என்று கேட்டார்.

"ஆயிரம் வராகன் கொடுக்கலாம்," என்றான் வேணு.

வச்சலாவிடம் இதே மாதிரி ஒரு மூக்குத்தி உண்டு. அவளுக்கு இரக்க சுபாவம். நாம் கடைக்கு வந்ததும் கிழவர் உள்ளே நுழைந்து யாசகம் கேட்டிருப்பாரோ? அவள் கிழவரிடம் கொடுத்திருப்பாளோ? எதற்கு சந்தேகம்? ஒரு நடை வீட்டிற்குப் போய் பார்த்து விடலாமே என்று சிந்தித்தான்.

"ஐயா! இங்கே அதிகப் பணம் வைத்திருப்பதில்லை! ஒரு நொடியில் வீட்டிற்குப் போய் எடுத்து வருகிறேன்," கூறிவிட்டு வீட்டிற்கு அவரசமாகச் சென்றான்.

நேரங்கெட்ட நேரத்தில் கணவன் வந்ததைக் கண்டு திகைப்படைந்தாள் வச்சலா.

அதிலும் அவன் அவரசமாக, "வச்சலா! திருகு தொலைந்ததென்று ஒரு வைர மூக்குத்தியை உள்ளே வைத்திருந்தாயே! அந்த மூக்குத்தியை எடுத்துவா," என்றதும் அவளுக்கு, "பகீரென்றது".

பயந்து கொண்டே உள்ளே சென்றாள். வேணுவின் கூரிய பார்வையை சமாளிக்க, தேடுவது போல் பாவனை செய்தாள். உள்ளம் இறைவனின் திருவடிகளைக் கண்ணீரால் நனைத்தது. என்ன ஆச்சரியம்! அவளுடையதைப் போலவே ஒரு அழகான மூக்குத்தி அவளது விரல்களில் தட்டுப்பட்டது.

மூக்குத்தியை ஆராய்ந்த வேணு நிதானமாக, "வச்சலா! இது உன்னுடையதல்ல! உண்மையைச் சொன்னால் கோபப்பட மாட்டேன். இவ்வளவு உயர்ந்த வைரத்தை நான் இதுவரை பார்த்ததே இல்லை," என்று கேட்க, வச்சலா நடந்தது நடந்தபடி கூறினாள்.

"வச்சலா! பரந்தாமனே தருமச் செயலுக்கான பலனை எனக்கு விளக்க லீலை புரிந்திருக்கிறார். வா! வியாபாரி வடிவிலிருக்கும் பகவானை வணங்குவோம்!" என்று வச்சலாவுடன் கடைக்கு விரைந்தான். பக்தன் உணர்நததும் பகவான் இருப்பாரா?

வேணு மானசீகமாக இறைவனிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டதோடு, இரப்போர்க்கும் இல்லையெனாது வாரி வழங்கி சத்திரம், நந்தனம், வேத பாட சாலைகள் என்று ஏராளமான அறப்பணிகளைச் செய்தான். கர்நாடக சங்கீதத்தின் பிதாமகரான புரந்தரதாசர்தான் அந்த வேணு.

## 10.2016 24 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1801 - மருது பாண்டிய சகோதரர்களும் அவர்கள் குடும்பத்தைச் சேரந்த 500க்கும் மேற்பட்ட மன்னர் குடும்பத்தாரும் வெள்ளையர்களால் தூக்கிலிடப்பட்டனர்.
- 1851 - யுரேனஸ் கோளின் சந்திரன்கள் ஏரியல், உம்பிரியல் ஆகியன வில்லியம் லாசெல் என்பவாரால் கண்டறியப்பட்டது.
- 1857 - உலகின் முதலாவது காற்பந்தாட்ட அணியான ஷெஃபீல்ட் காற்பந்தாட்ட அணி இங்கிலாந்தில் ஆரம்பிக்கப்பட்டது.
- 1917 - ரஷ்யாவில் ஒக்டோபர் புரட்சி இடம்பெற்றது.
- 1929 - கறுப்பு வியாழன்: நியூயோர்க் பங்குச் சந்தையில் பங்குகள் சரிவு.
- 1930 - பிரேசிலில் இராணுவப் புரட்சி இடம் பெற்றது. அதிபர் "லூயிஸ் பெரெய்ரா டெ சயூசா" பதவியில் இருந்து அகற்றப்பட்டார்.
- 1931 - ஜோர்ஜ் வாஷிங்டன் பாலம் திறக்கப்பட்டது.
- 1935 - இத்தாலி எதியோப்பியாவைக் கைப்பற்றியது.
- 1943 - நாடு கடந்த இந்திய அரசு முறைப்படி பிரித்தானியா மீதும் அமெரிக்கா மீதும் போரை அறிவித்தது.
- 1964 - வடக்கு றொடீசியா ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து விடுதலை பெற்று சாம்பியா என்னும் பெயரைப் பெற்றது.
- 2003 - கான்கோர்டு விமானம் தனது கடைசிப் பயணத்தை மேற்கொண்டது.
- 2007 - சந்திரனின் சுற்றுப்பாதையில் நிலவைச சுற்றிவரும் முதல் சீன ஆளற்ற விண்கலம் "சாங்-ஒன்று" தென்மேற்கு சீனாவின் ஏவுதளத்திலிருந்து வெற்றிகரமாக ஏவப்பட்டது.

### பிறப்புகள்

- 1632 - ஆன்டன் வான் லீவன்ஹூக், டச்சு உயிரியலாளர். (இ. 1723)
- 1921 - ஆர். கே. லட்சுமண், இந்திய ஓவியர். (இ. 2015)
- 1932 - இசுடீபன் கோவே, அமெரிக்க எழுத்தாளர். (இ. 2012)
- 1934 - அர்விந்த் ஆப்டே, இந்தியத் துடுப்பாட்டக்காரர்.
- 1957 - இ. ஜெயராஜ், இலங்கை கம்பன் கழக அமைப்பாளர்.
- 1971 - மல்லிகா செராவத், இந்திய நடிகை.
- 1983 - தீபச்செல்வன், ஈழத்து எழுத்தாளர், ஊடகவியலாளர்.
- 1985 - வேனே ரூனி, இங்கிலாந்து கால்பந்து ஆட்டக்காரர்.
- 1985 - வேனே ரூனி, ஆங்கிலேயக் கால்பந்தாட்டக்காரர்.

### இறப்புகள்

- 1601 - டைக்கோ பிரா, டேனிய வானியலாளர். (பி. 1546)
- 1801 - மருது பாண்டியர், இந்திய சுதந்திர போராட்ட வீரர்கள்.
- 1870 - அந்தோனி மரிய கிளாரட், ஸ்பானிய, ரோமன கத்தோலிக்க மறைப்போதகர் . (பி. 1807)
- 1972 - ஜாக்கி ராபின்சன், அமெரிக்க பேஸ் பால் விளையாட்டு வீரர் . (பி. 1919)
- 1994 - காமினி திசாநாயக்கா, இலங்கை அரசியல்வாதி. (பி. 1942)
- 2005 - றோசா பாக்ஸ், ஆபிரிக்க அமெரிக்க குடியுரிமைகள் செயற்பாட்டாளர் .(பி. 1913)
- 2011 - ஜோன் மெக்கார்த்தி, அமெரிக்கக் கணினி அறிவியலாளர், உணரறிவியலாளர் . (பி. 11927)
- 2013 - மன்னா டே, ஹிந்தித் திரைப்படப் பாடகர். (பி. 1919)
- 2014 - எஸ். எஸ். ராஜேந்திரன், தமிழ்த் திரைப்பட நடிகர், அரசியல்வாதி. (பி. 1928)
- 2014 - தேனுகா, கலை, இலக்கிய விமர்சகர்.

### சிறப்பு நாள்

- சாம்பியா - விடுதலை நாள். (1964)
- ஐக்கிய நாடுகள் நாள். (1945)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 50 | 70 | 80 | 50 |
| உருளைக்கிழங்கு | 100 | 95 | 110 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 80 | 50 | 80 | 100 | 80 |
| தக்காளி | 60 | 40 | 40 | 80 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 60 | 80 | 50 |
| கோவா | 70 | 60 | 120 | 80 | 80 |
| கரட் | 80 | 60 | 120 | 120 | 80 |
| பூசணி | 30 | 20 | 30 | 50 | 60 |
| புடோல் | 40 | 30 | 80 | 80 | 50 |
| வாழைக்காய் | 50 | 40 | 40 | 80 | 50 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 100 | 120 | 100 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 80 | 100 | 100 |
| பாகற்காய் | 140 | 100 | 160 | 160 | 100 |
| வெண்டிக்காய் | 120 | 80 | 120 | 120 | 80 |
| கருணைக் கிழங்கு | 80 | 70 | 100 | 120 | 80 |
| பயற்றங்காய் | 80 | 60 | 100 | 100 | 80 |
| லீக்ஸ் | 120 | 100 | 160 | 120 | 120 |
| பீற்றூட் | 80 | 50 | 40 | 100 | 60 |
| கறிமிளகாய் | 120 | 90 | 120 | 160 | 80 |
| முருங்கைக்காய் | 60 | 30 | 60 | 80 | 100 |
| போஞ்சி | 160 | 150 | 180 | 200 | 180 |
| கத்தரிதம்பள்ள | 50 | 30 | 60 | 60 | 50 |
| கீரை - 1பிடி | 20 | 25 | 30 | 30 | 20 |
| தேசிக்காய் | 500 | 500 | 500 | 600 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 20-35 | 45 | 35-45 | 50 |
| இராசவள்ளி | — | — | — | — | 160 |
| வெங்காயப்பூ | 180 | — | 240 | — | 180 |
| முள்ளங்கி | 60 | 30 | 40 | 80 | 50 |
| பொன்னாங்காணி | 30 | 10 | 30 | 40 | 20 |
| வல்லாரை | 10 | 10 | 10 | 20 | 15 |
| ஈரப்பலா | 50 | — | — | 100 | — |

# பிரித்தானியாவில் தமிழ் முதலீட்டாளர்களுடன் வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் சந்திப்பு







லண்டன்-கிங்ஸ்டன் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய நகரங்கள் இடையே "இரட்டை நகர்" உடன்படிக்கையில் பிரித்தானியாவுக்கு விஜயம் மேற்கொண்ட வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் மற்றும் அவரது குழுவினர் கடந்த வெள்ளிக்கிழமை பிரித்தானியா வாழ் தமிழ் முதலீட்டாளர்கள். தொழிலதிபர்கள் மற்றும் வர்த்தக பிரமுகர்களை சந்தித்து விரிவான கலந்துரையாடல் ஒன்றை நடத்தினர்.

பிரித்தானிய தமிழ் வர்த்தக சம்மேளனம் ஏற்பாடு செய்த இந்த முதலீட்டாளர்கள் சந்திப்பில் முதலமைச்சருடன் அவரின் மூலோபாய ஆலோசகர் நிமலன் கார்த்திகேயன் மற்றும் பிரத்தியேக செயலாளர் ராஜதுரை ஆகியோரும் கலந்துகொண்டுள்ளனர்.

சுமார் 100 இற்கும் அதிகமான முதலீட்டாளர்கள் மற்றும் தொழிலதிபர்கள் இந்த சந்திப்பில் கலந்துகொண்டிருந்தனர்.

இந்தச் சந்திப்பில் உரையாற்றிய முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன். கிங்ஸ்டன் நகரத்துடன் செய்துகொண்டுள்ள "இரட்டை நகர்" உடன்படிக்கை பற்றி விபரித்ததுடன் இந்த உடன்படிக்கையின் ஊடாக பல பொருளாதார. சமூக மற்றும் கலாசார செயற்றிட்டங்களை முன்னெடுக்க முடியும் என்றும் புலம்பெயர் தமிழ் மக்கள் இந்த விடயத்தில் காத்திரமான பங்களிப்பை மேற்கொள்ள முடியும் என்றும் கூறியுள்ளார்.

முதலமைச்சரின் மூலோபாய ஆலோசகர் நிமலன் கார்த்திகேயன் தனதுரையில். இரட்டை நகர் உடன்படிக்கை பற்றி விரிவாக எடுத்துக் கூறியதுடன் எவ்வாறான செயற்றிட்டங்களை புலம்பெயர் தமிழ் மக்கள் முன்னெடுக்கலாம் என்று விளக்கியுள்ளார்.

வட. மாகாணத்தில் முன்னெடுக்கப்படவேண்டிய அபிவிருத்தி செயற்றிட்டங்கள் பற்றி குறிப்பிட்ட முதலமைச்சரின் பிரத்தியேக செயலாளர் ராஜதுரை, பல்வேறுபட்ட சிறிய மற்றும் நடுத்தர அளவிலான திட்ட முன்மொழிவுகளை கொண்டுவந்திருப்பதாகவும் அவற்றை செயற்படுத்துவதற்கு புலம்பெயர் தமிழ் முதலீட்டாளர்கள் முன்வர வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன் தங்களால் தயாரிக்கப்பட்ட திட்ட முன்மொழிவுகளை பிரித்தானிய தமிழ் வர்த்தக சம்மேளனத்திடம் கையளித்ததுடன் ஆர்வம் உள்ளவர்கள் இந்த முன்மொழிவுகளை பிரித்தானிய தமிழ் வர்த்தக சம்மேளனத்திடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம் எனவும் தெரிவித்தார்.

இந்த சந்திப்பில் கலந்துகொண்ட பல முதலீட்டாளர்கள். பொருளாதார மற்றும் சமூகம் சார்ந்த பல செயற்றிட்டங்களை முன்னெடுப்பதற்கு ஆர்வம் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை. பிரித்தானிய தமிழ் வர்த்தக சம்மேளனம் ஒழுங்கு செய்த இந்த சந்திப்பு மிகவும் அவசியமானதும் பயன்மிக்கதும் என்று கருத்து தெரிவித்த முதலமைச்சரும் அவரது குழுவினரும். இதே போன்று புலம்பெயர் தமிழ் மக்கள் வாழும் ஏனைய நாடுகளிலும் இத்தகைய முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளனர். (இ-7)

## (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 878


அபிவர்மன்





துஷாந்தன்




அன்ரனி





பகிஜா




றொபின்சன்




ராதி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# ஐப்பசி மாத இராசிபலன்கள்

## 17.10.2016-15.11.2016



*சினம் இருக்குமிடத்தில் தான் குணமிருக்கும் என்ற வைர வரிகளுக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் சிம்ம ராசி நேயர்களே!*

ஐப்பசி மாதக் கிரக நிலைகளின்படி உங்கள் ராசிநாதன் சூரியன் நீச்சம் பெற்றிருக்கிறார். எனவே கூடுதல் கவனத்துடன் செயற்பட வேண்டும். ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். அருகில் இருப்பவர்களால் அமைதி குறையும். இருப்பினும் மாதத் தொடக்கத்திலேயே தனாதிபதி புதன் உங்கள் ராசிநாதனோடு இணைகிறார்.

புதன் தனாதிபதியாக மட்டும் அல்லாமல் லாபாதிபதியாகவும் இருப்பதால் அவர் ராசிநாதனோடு சேரும் பொழுது வருமானம் இருமடங்காக உயரும். வளர்ச்சி கூடும். மங்கள் காரியங்களில் இருந்த தடை அகலும். மதிப்பும், மரியாதையும் உயரும்.

இடம், பூமியால் லாபமும், எதிர்பாராத புதிய ஒப்பந்தங்களும் கிடைக்கும். கடன் சுமை குறைய வழியும், கட்டடப்பணி தொடர வாய்ப்பும் உருவாகும். நிர்வாகத் திறமை பளிச்சிடும். நீங்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த காரியமொன்று நிறைவேறி மகிழ்வீர்கள். சனி 4இல் சஞ்சரித்தாலும் அவரோடு சுக்ரன் இணைந்திருக்கிறார். சகாய ஸ்தானாதிபதி சுக்ரன் தொழில் ஸ்தானத்தைப் பார்ப்பதால் தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். வங்கிகளின் ஒத்துழைப்பை எதிர்பார்த்துத் தொழிலை விரிவு செய்ய வேண்டுமென்று விரும்பியவர்களுக்கு போதுமான ஒத்துழைப்பு கிடைக்கும்.

இம்மாதம் சிவாலய வழிபாட்டில் கவனம் செலுத்துவதோடு சூரியனுக்குரிய சிறப்பு ஸ்தலங்களுக்குச் சென்று வழிபட்டு வருவது நல்லது. நவக்கிரக தலங்களுக்குச் சென்று வழிபடும் பொழுது சூரிய பிரீதி செய்ய வேண்டும். சிவசக்தி வழிபாடும் சிறப்பு தரும். கோதுமை தானம் செய்வதன் மூலம் கொடுக்கல், வாங்கல்கள் ஒழுங்காகும். தீபாவளித் திருநாளன்று, உங்கள் எண்ணங்களை பூர்த்தி செய்யும் கிரகம் எதுவோ, அதற்குரிய வண்ணத்தில் ஆடை அணிந்து கொண்டு செயற்படுவது வளர்ச்சியைக் கூட்டும்.

**துலாம் ராசி புதனும், விருச்சிக ராசி புதனும்!**


மாதத்தின் தொடக்க நாளிலேயே புதன் துலாம் ராசிக்கு வந்துவிடுகின்றார். இதனால் புத ஆதித்ய யோகம் செயற்படுகின்றது. எனவே கல்விக்காக எடுத்த முயற்சி கை

## ஆரோக்கியத்தில் கவனம் தேவை!

கூடும். கலைத்துறை சம்பந்தப்பட்டவர்களால் ஆதாயம் உண்டு. அரசியலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு புதிய பதவிகள் கிடைக்கும். நவம்பர் 4ஆம் திகதி விருச்சிகத்தில் புதன் சஞ்சரிக்கும் பொழுது தாயால் யோகம் உண்டு. புகழ் மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து பிரபலஸ்தர்களாக மாற உதவிக்கரம் நீட்டுவர்.

**உச்ச செவ்வாயின் சஞ்சாரம்!**

செவ்வாய், ஒக்டோபர் 5ஆம் திகதி மகரத்தில் உச்சம் பெறப் போகின்றார். யோகாதிபதி உச்சம் பெறும் இந்த நேரம் ஒரு உன்னதமான நேரமாகும். வாங்கல், கொடுக்கல் ஒழுங்காகும். வளர்ச்சி கூடும். தேங்கிய காரியங்கள் சுறுசுறுப்பாக நடை




பெறும். தேடிவரும் பதவியால் யோகம் உண்டு. எதிரிகளின் பலம் குறையும். ஏதேனும் ஒரு தொழிலைத் தொடங்க வேண்டுமென்ற எண்ணம் வந்துகொண்டே இருக்கும்.

**தனுசு சுக்ரனின் சஞ்சாரம்!**

உங்கள் ராசிக்கு 3, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்ரன், நவம்பர் 8ஆம் திகதி தனுசு ராசிக்கு செல்லப் போகின்றார். சகோதரர்களால் சகாயம் கிடைக்கும். கூட்டாக இருந்த இடங்களை பிரித்துக் கொள்வீர்கள். பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும். தேகநலன் சீராகும். குழந்தைகளின் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். தொழிலில் கூடுதல் ஆதாயம் உண்டு. விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். இம்மாதம் ராகு.கேதுக்களின் ஆதிக்கம் மேலோங்கியிருப்பதால் சர்ப்ப சாந்தி செய்வது நல்லது. துர்க்கை வழிபாடு துயரம் போக்கும்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!**

ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டிய மாதமாகும். பணத் தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். கணவன், மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. செவ்வாய் உச்சம் பெறும் இந்த மாதத்தில் யோகம் உங்களுக்கு கூடுதலாக வரும். புதிய மருத்துவம் பார்ப்பதன் மூலம் ஆரோக்கியத்தைச் சீராக்கிக் கொள்ளலாம். இடம், பூமியால் லாபம் உண்டு. பிள்ளைகளின் கல்யாணக் கனவுகளை நிறைவேற்றுவீர்கள். வாகன யோகம் உண்டு. சொந்தங்களை அனுசரித்துச் செல்ல வேண்டிய நேரமிது. உங்களுக்குரிய அதிர்ஷ்ட வண்ணத்தில் ஆடைகளை அணிந்து தீபாவளித் திருநாளை கொண்டாடுவதோடு சிவனையும் வழிபடுவது நல்லது.

**பணத் தேவையைப் பூர்த்தி செய்யும் நாட்கள்:**

ஒக்டோபர்: 18, 21, 22, 27, 28
நவம்பர்: 1, 2, 13, 14

**ஜோதிடக் கலாமணி சிவஸ்ரீ சிங்காரம்**



*பிரதிபலனை எதிர்பார்க்காமல் மற்றவர்களுக்கு உதவி செய்ய முன்வரும் கன்னி ராசி நேயர்களே!*

ஐப்பசி மாதக் கிரக நிலைகளின்படி உங்கள் ராசிநாதன் புதன், உங்கள் ராசியிலேயே உச்சம் பெற்றிருக்கிறார். எனவே இதுவரை இருந்த ஆரோக்கிய தொல்லை அகலும். எதைச் செய்ய நினைத்தீர்களோ அதை உடனுக்குடன் செய்து முடிப்பீர்கள். நீட்டிய திட்டங்கள் வெற்றி பெறும். திறமை பளிச்சிடும்.

திருமண வாய்ப்புகள் கைகூடவில்லை. சுபகாரியம் நடைபெறுமா? என்றெல்லாம் குழப்பத்தின் உச்சியில் இருந்த உங்களுக்கு, இப்பொழுது நல்ல வரன்கள் வந்து உள்ளத்தில் மகிழ்ச்சியை வழங்கப் போகின்றது. குரு உங்கள் ராசியிலேயே இருப்பது யோகம்தான். ஜென்ம குருவாக இருந்தாலும் சுகாதிபதியாகவும், சப்தமாதிபதியாகவும் இருப்பதால் சந்தோசம் பிறக்கும்.

ஒருபக்கக் கதவு அடைபட்டால் மறொரு பக்க கதவு திறக்கும். குரு பார்த்தாலும், சேர்ந்திருந்தாலும் கோடி நன்மை என்பார்கள். அந்த அடிப்படையில் கேட்டது கிடைக்கவும், நினைத்தது நடக்கவும் குரு பகவான் வழிவகுத்துக் கொடுக்கப் போகிறார். இது போன்ற காலங்களில் நீங்கள் செய்யும் புதுமுயற்சிகளில் பலன் கிடைக்கும்.

விரயாதிபதி சூரியன் தனஸ்தானத்தில் நீச்சம் பெறுவதால், விரயத்திற்கு ஏற்ற தனலாபம் வந்து கொண்டே இருக்கும். வீட்டிற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களையும், ஆடம்பரப் பொருட்களையும் வாங்குவதற்கான வாய்ப்புகள் கைகூடிவரும். பழைய வாகனங்களைக் கொடுத்து விட்டுப் புதிய வாகனங்கள் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். அவ்வாறு வாகனங்கள் வாங்குவோர் அதிர்ஷ்ட எண் ஆதிக்கத்தில் வாங்குவது நல்லது.


6இல் கேது இருப்பதால் எதிர்ப்புகளை சமாளிக்கவும், வெற்றிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைக்கவும் பிரதோஷ வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். மேலும் உங்களுக்குரிய யோக வண்ணத்

## கல்யாண வாய்ப்புகள் கைகூடும் நேரம்!

தில் ஆடைகளை வாங்கி தீபாவளி அன்று அணிந்து கொண்டு தெய்வ தரிசனங்களை மேற்கொள்வது நல்லது.

**துலாம் புதனும், விருச்சிக புதனும்!**

மாதத் தொடக்க நாளில் கன்னியில் சஞ்சரிக்கும் புதன் அன்றைய தினமே துலாம் ராசிக்குச் சென்று சூரியனுடன் சேருகின்றார். இந்த புத ஆதித்ய யோகத்தால் பொருளாதார நிலை உயரும். புகழ், கீர்த்தி மேலோங்கும். வீடு, சொத்துக்கள் வாங்குவதில் இருந்த தடை அகலும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு மேலதிகாரிகளின் அனுகூலம் கிடைத்து மிகுந்த நற்பலன்களை காண்பீர்கள். விருச்சிகத்தில் புதன் சஞ்சரித்த பிறகு உடன்பிறப்புகளால் நன்மை ஏற்படும். அவர்களின் இல்லங்களில் நடைபெறும் மங்கள நிகழ்ச்சிகளை நடத்தி வைப்பீர்கள். அஞ்சல் வழியில் அனுகூலத்




தகவல் உண்டு.

**உச்ச செவ்வாயின் ஆதிக்கம்!**

ஒக்டோபர் 25ஆம் திகதி செவ்வாய் மகரத்தில் உச்சம் பெறப்போகின்றார். அஷ்டமாதிபதி உச்சம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. எதைச் செய்தாலும் இந்த நேரத்தில் ஒரு முறைக்கு பலமுறை யோசித்துச் செய்வது நல்லது. வழக்குகளில் திசைதிருப்பம் ஏற்படும். வருமானப் பற்றாக்குறை அதிகரிக்கும். அங்காரக வழிபாடு இக்காலத்தில் அவசியம் தேவை.

**தனுசு சுக்ரனின் சஞ்சாரம்!**

நவம்பர் 8ஆம் திகதி தனுசு ராசிக்குச் சுக்ரன் செல்கின்றார். 2, 9இற்கு அதிபதியான சுக்ரன் 4இல் செல்வது யோகம்தான். இதன் விளைவாகப் பெற்றோர் வழியில் பிரியம் கூடும். சொத்துக்களாலும், சொந்தங்களாலும் நன்மை ஏற்படும். கல்வித்தடை விலகச் செய்த முயற்சி கைகூடும். கடல் தாண்டி வரும் தகவல் உங்களுக்கு முன்னேற்றத்திற்கு வழிவகுத்துக் கொடுக்கும். இடம், பூமியால் லாபம் கிடைக்கும். இம்மாதம் வியாழன் தோறும் தென்முகக் கடவுளை வழிபடுவது நல்லது.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!**

இம்மாதம் பொருளாதார நிலை திருப்திகரமாக இருக்கும். தேவைப்பட்ட நேரத்திற்கு தேவைப்பட்ட பொருள் வந்து சேரும். கணவன்.மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். வீண் விவகாரங்களில் இருந்து விடுபடுவீர்கள். வீடு மாற்றங்களால் நன்மை உண்டு. பிள்ளைகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். அவர்களின் உத்தியோக நலனுக்காக செய்த முயற்சி அனுகூலம் தரும். உங்கள் பெயரிலேயே தொழில் தொடங்க குடும்ப உறுப்பினர்கள் உத்தரவாதம் கொடுப்பர். தாய்வழி ஆதரவு உண்டு. உடன்பிறப்புகள் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரிவர். விஷ்ணு வழிபாடு வேதனை தீர்க்கும். தீபாவளித் திருநாளன்று உங்களுக்குரிய அதிர்ஷ்ட வண்ணத்தில் ஆடைகளை அணிந்து கொள்வது நல்லது.

**பணத் தேவையைப் பூர்த்தி செய்யும் நாட்கள்:**

ஒக்டோபர்: 19, 20, 23, 24, 31
நவம்பர்: 1, 4, 5, 14

(தொடரும்)

# CIMAவுடன் EP Academy (ExamPoint) யாழில் இணைவு

CIMA தனதுமிகப்பெரிய நிகழ்வை கடந்த 14-ம் திகதி வெள்ளிக்கிழமை Jaffna Jetwings hotel இல் நிகழ்த்தியது.

அந்நிகழ்வில் கொழும்பில் இருந்து CIMAவின் Country Head- Sri Lanka of CIMA Radley Stephen, Marketing Manager Sivasubramaniam Vithushan, அதுமட்டுமன்றி London CIMA Head of Learning Clancy Peiris, CIMA head of Syllabus Shane Balzan eld ExamPoint இன் CEO Guna Karunaவும் கலந்து கொண்டார்கள்.

CIMAவின் பிரதிநிதிகள் EP Academyயில் உள்ள விரிவுரையாளர்களையும் மாணவர்களையும் சந்தித்தனர். அவர்கள் EP Academyயின் வகுப்பறை மற்றும் Exam வசதிகளை பார்வையிட்டதோடு மிகவும் பாராட்டினார்கள். CIMA London Shane Balzan கூறும்போது " EP Academyஇன் வகுப்பறை, Computer Labs வசதிகளை பார்க்கும் போது ஐரோப்பாவில் உள்ள வசதிகளை ஒத்ததாக காணப்படுவது மட்டுமன்றி யாழ்ப்பாண மாணவர்களுக்கு ஒரு நல்ல சந்தர்ப்பம் என்றும் இனிமேல் அவர்கள் கொழும்புக்கு பிரயாணம் செய்யவேண்டிய தேவை இல்லை என்றும் கூறினார்."

Country Head- Sri Lanka of CIMA தெரிவிக்கையில், இலங்கையில் யாழ்ப்பாணமானது கல்வியில் முக்கியத்துவமான இடமாகும். இதில் எந்தவித சந்தேகமின்றி நாங்கள் (CIMA) யாழில் EP Academy (Exam Point) உடன் கைகோர்த்து மாணவர்களுக்கும், பொறுப்பதிகாரிகளுக்கும் பூரண ஆதரவை வழங்குவது மட்டுமன்றி அவர்களுக்கான சிறந்த அடித்தளத்தை வழங்குவோம் என கூறினார்.

EP Academy (ExamPoint) Jaffna ஆனது யாழில் CIMA ஆல் அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு CIMA exam Centre. இப்போது இங்கு CIMA கற்பித்தலும் (CIMA learning partner) ஒரே கூரையின் கீழ் இயங்குகின்றன.

யாழ்ப்பாண மாணவர்களுக்கும், கணக்காளர்களும் தங்களுடைய எதிர்காலத்தை CIMA உடன் விருத்தி செய்ய நல்லதொரு சந்தர்ப்பமாக EPAcademy (ExamPoint–Jaffna) CIMA உடன் கைகோர்த்துள்ளது.

ExamPoint CEO Guna Karuna தெரிவிக்கையில், "CIMA உடன் நமது EP Academy (ExamPoint) ஆனது பலமான உறவைவைத்துக் கொண்டுள்ளது. எந்தவித சந்தேகமின்றி நாங்கள் கொழும்பில் கற்பிக்கும் விரிவுரையாளர்களின் தரத்திற்கு இணையான சிறந்த கல்வியை வழங்க முடியும்." எனக் கூறினார்.



இந்நிகழ்வின் போது கல்வித் திணைக்கள அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், யாழ்ப்பாண பல்கலைக் கழக விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்கள் பங்குபற்



றினார்கள். அதுமட்டுமன்றி CIMA இன் ஆர்வத்தை பாராட்டியதோடு EP Academy யாழில் மாணவர்களுக்கான தனது கல்விச் சேவையை அர்பணித்துள்ளது எனவும் கூறினார்கள்.

யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்களும் இந் நிகழ்வில் பங்குபற்றினர்.

CIMAவானது யாழ். வணிகல்வி பீடத்துடன் மிகவும் நெருங்கிய உறவை வைத்துள்ளது மட்டுமன்றி அவர்களின் கல்வி மற்றும் தகுதிகளை உயர்த்தகூடிய நிலையிலும் உள்ளது.

அதுமட்டுமன்றி CIMAஇன் ஆர்வத்தை பாராட்டியதோடு EP Academy இன் யாழில் மாணவருக்காக தனது கல்விச்சேவையை அர்பணித்துள்ளது எனவும் கூறினர்.

EP Acadamy (Exam point, Jaffna) இங்கு கற்கும் மாணவர்களின் நலன் கருதி இலவசமாக ஆங்கில கற்கை நெறிகள், Typing course, இலவசமான பரீட்சைகளையும் வழங்குகின்றது.

தொடர்புகளுக்கு: EP Academy (ExamPoint)
No.120/6, Palaly Road, Kantharmadam, Jaffna,
Phone: +94 (0)21 2216400
Hotline: +94(0)776284845
E-Mail: info@exampoint.lk

# நேர்த்தியான வேலைச் சூழலை உருவாக்கியது சிலோன் டுபாக்கோ



நாட்டின் முதல்தர தொழில் வழங்குநர்களில் ஒன்றாக திகழும் சிலோன் டுபாக்கோ கம்பனி, அதன் ஊழியர்களுக்கு நேர்த்தியான மற்றும் ஈடுபாடுடன் கூடிய தொழில் சூழலை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் கொழும்பு மற்றும் கண்டியில் அமைந்துள்ள தனது அலுவலகங்களை மேம்படுத்தியிருந்தது.

கடந்த காலங்களில், சிலோன் டுபாக்கோ கம்பனியினால் முன்னெடுக்கப்பட்டிருந்த செயற்பாடுகளில் ஊழியர்களின் நலனை மேம்படுத்துவது தொடர்பான கணிசமான விடயங்கள் உள்ளடங்கியிருந்தன. இப் புதிய மற்றும் மேம்படுத்தப்பட்ட தொழில் சூழல்கள் காரணமாக ஊழியர்களின் மனநிலை மேம்படுத்தப்படுவதுடன், அவர்களின் உற்பத்தித்திறனை அதிகரித்துக் கொள்ளவும் உதவியாக அமைந்திருக்கும். அலுவலகங்களின் வடிவமைப்புகள் பெருமளவில், பிரிட்டிஷ் அமெரிக்கன் டுபாக்கோவின் சர்வதேச ஊழியர் வர்த்தக நாம வடிவமைப்பு வழிகாட்டல்களுக்கமைய அமைந்துள்ளன. இந்தப் புனருத்தாரண மற்றும் மேம்படுத்தல் வடிவமைப்பு செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக ஏஆர் அசோசியேட் இன் அமோதா ரத்நாயக்கவின் சேவைகளை நிறுவனம் நாடியிருந்தது.

இச் செயற்றிட்டம் தொடர்பில் சிலோன் டுபாக்கோ கம்பனியின் பிரதம நிறைவேற்று அதிகாரியும், முகாமைத்துவப் பணிப்பாளருமான மைக்கல் கொயெஸ்ட் கருத்துத் தெரிவிக்கையில்,

"எமது ஊழியர்களுக்கு சிறந்த பணியிடத்தை ஏற்படுத்திக் கொடுப்பதன் முக்கியத்துவத்தை நாம் நன்கு உணர்ந்துள்ளோம். நேர்த் தியான பணியிடத்தையும், எமது ஊழியர்களின் நலனில் கவனம் செலுத்துவதன் மூலமாக, வெற்றிகரமான நிறுவனமாக இயங்கக்கூடிய நிலையை எம்மால் மேம்படுததிக் கொள்ளக்கூடியதாக இருக்கும்" என்றார்.

புனருத்தாரண மேம்படுத்தல் செயற்பாடுகள் இரு கட்டங்களில் முன்னெடுக்கப்பட்டிருந்தன. புதிய பழரச நிலையம் ஒன்று அமைக்கப்பட்டிருந்ததுடன், உள்ளக பகுதிகளின் தோற்றங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன. புத்தாக்கமான சிந்தனை வெளிப்பாடுகளை வழங்கக்கூடிய பகுதியொன்றும் உருவாக்கப்பட்டுள்ளது. உணவகங்கள் மற்றும் ஓய்வு பகுதிகளும் மெருகேற்றம் செய்யப்பட்டுள்ளன.

திறன் விருத்தியில் முன்னோடி எனும் தனது நிலையைத் தொடர்ந்து மேம்படுத்திச் செல்வதற்கு கம்பனி தன்னை அர்ப்பணித்துள்ளது. உயர் வினைத்திறனை முன்னெடுப்பதற்கான தன்னை மேலும் ஈடுபடுத்தியுள்ளது. தனிநபர்கள் மற்றும் குழுக்கள் போன்றன வெற்றிகரமாக இயங்கக்கூடிய ஈடுபாட்டுடனான கலாசாரத்தையும் ஏற்படுத்தி வருகிறது.

# வங்குரோத்தான 4 நிதி நிறுவனங்கள் மத்திய வங்கி தீர்மானம்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

நிதி அமைப்பில் உள்ள மக்களது நம்பிக்கையை பாதுகாக்கும் நோக்கில் வங்குரோத்தான 4 நிதி நிறுவனங்களை இலங்கை மத்திய வங்கி இனங்கண் டுள்ளது.

த ஸ்டென்டர்ட் பினான்ஸ் சிட்டி, சிட்டி பினான்ஸ் கோப்பரேஸன், சென்றல் இன்வஸ்மன்ட் என்ட் பினான்ஸ் மற்றும் என்ட்ரஸ்ட் செக்கியுரிட்டிஸ் ஆகிய நிறுவனங்களே இவை என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இதன்படி அந்த நிறுவனங்களுக்கு அரசாங்க பாதுகாப்பு பத்திரம் மற்றும் அதனுடன் தொடர்புடைய சட்டரீதியான முதலீட்டாளாகளின் நிதியினை திரும்பப் பெற்று கொடுத்தல் தொடர்பான சிக்கல் தீர்க்கும் முறையொன்றுக்கும் கடந்த 14 ஆம் திகதி இடம்பெற்ற நிதி சபையின் அமர்வில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த சிக்கல் தீர்க்கும் முறை சட்டரீதியாக உறுதி செய்யப்பட்ட பின்னர் குறித்த நிறுவனங்களை கலைக்கவுள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இதனுடன் நிர்வாக செயற்பாடுகள் நிறைவடைந்த பின்னர் அந்த தகவல் வைப்பாளர்கள் மற்றும் முதலீட்டளர்களுக்கும் எதிர்வரும் காலத்தில் அறிவிக்கவுள்ளதாகவும் மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது.

# பணவீக்கம் 4.7வீதமாக அதிகரிப்பு




இலங்கை முழுவதும் காணப்பட்ட பணவீக்கமானது செப்ரெம்பர் மாதம் வரை அதிகாரித்திருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளி விபரத் திணைக்களம் இதனை தெரிவித்துள்ளது.

இதற்கமைய கடந்த ஒகஸ்ட் மாத்தில் காணப்பட்ட 4.5 வீத பணவீக்கம் செப்ரெம்பர் மாதத்தில் 4.7 வீதமாக அதிகாரித்ததாகவும் அந்த திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இந் தநிலையில் செப்ரெம்பர் மாதத்தில் பணவீக்கமானது 3.6 வீதத்தில் இருந்து 3.8 வீதம் வரையான நகர்வில் அமைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6,482.54 | 6,447.53 ⇩ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,615.12 | 3,594.59 ⇩ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 2,680.672 |

**உயர்வடைந்த பங்குகள்(ரூ.):** குட் ஹோப்(1,476.10), மல்வத்தை(X) (3.10), பிறவுன்ஸ் ஹைட்ரோ(7.40), சி.ரி.லாண்ட்(59.50), மகாவலி ரீச்(23.00).

**சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):** புளூ டைமன்ட்ஸ்(0.50), பிறவுண்ஸ் இன்வெஸ்ட்மன்ட்(1.30), சிஐஎப்எல்(1.40), சுவர்ணமஹால் பினான்ஸ்(1.60), பரஹுான்(52.20).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்


(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 145.20 | 148.95 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 177.18 | 183.35 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 157.58 | 163.69 |
| சுவிஸ் பிராங் | 145.18 | 151.08 |
| கனேடிய டொலர் | 109.15 | 113.56 |
| அவுஸ்திரேலிய டொலர் | 109.96 | 114.96 |
| சிங்கப்பூர் டொலர் | 103.83 | 107.71 |
| ஜப்பான் யென் | 1.38 | 1.44 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.19 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 39.99 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

# கந்தக அமில தொட்டிகள் மீது ஐ.எஸ். நூதனத் தாக்குதல்!

## 1000க்கும் அதிகமானோர் பாதிப்பு





(மொசூல்)

ஈராக்கின் மொசூலில் பாரிய நெருக்கடியினை எதிர்நோக்கியுள்ள ஐ.எஸ். தீவிரவாதிகள், அங்குள்ள கந்தக அமிலம் சேமித்து வைக்கப்பட்டிருந்த தொட்டிகளை தீயிட்டு எரித்ததால், இருவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், இதன்மூலம் வெளியாகிய புகையினால் 1000க்கும் அதிகமான கிராம மக்கள் மூச்சுத்திணறலால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அவர்கள் கய்யாரா நகரில் உள்ள அரசு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் ஈராக் நாட்டின் இராணுவ ஜெனரல் குசேஹமித் காதெம் தெரிவித்துள்ளார்.

மேலும், நேற்றுக் காலை தீவிரவாதிகள் இப்பகுதியில் உள்ள எண்ணெய் கிணறுகள் மீதும் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தியதால் பல கிலோமீற்றர் தூரத்துக்கு நச்சு புகை மண்டலம் சூழ்ந்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்க கூட்டுப்படையின் துணையுடன் மொசூல் நகரில் முன்னேறிவரும் அரசபடையினர், மிக விரைவில் இந்நகரினை தம் கட்டுப்பாட்டில் கொண்டு வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. (இ-7)

# அமைச்சர் கயந்தவுக்கு ஜே.வி.பி.நற்சான்றிதழ்



மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி, அமைச்சர் கயந்த கருணாதிலக்கவுக்கு நற்சான்றிதழ் வழங்கியுள்ளார்.

காலி எல்பிட்டிய பிரதேசத்தில நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றிய ஹந்துன் நெத்தி, அமைச்சர் கயந்தவை புகழ்ந்து பேசியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் சரியாக, தெளிவாக கருத்துக்களை வெளியிட்டு மனச்சாட்சிக்கு அமைய வாழும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரில் அமைச்சர் கயந்த கருணாதிலக்க முக்கியமானவர்.

முக்கியமாக காலி மாவட்ட மக்களுக்கு இது பெருமை. தாம் வாக்களிக்கும் பிரதிநிதிகளில் மதிக்க கூடியவர்கள் இருப்பார்களேயானால், அவர்கள் ஒரு சிலரே.

எனது நாடாளுமன்ற வரலாற்றில் அப்படியான சிலரையே நான் பார்த்திருக்கின்றேன். அவர்களில் அமைச்சர் கயந்தவும் இருக்கின்றார். இது அவருக்கு வாக்களித்தவர்களுக்கு மிகப் பெரிய கௌரவம் எனவும் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார். (இ-7)

# மக்கள் சுபீட்சமாக வாழவேண்டும்

நாட்டு மக்கள் மட்டுமன்றி உலகத்தின் பார்வையையும் ஈர்க்கும் சம்பவமாக இடம்பெற்ற மீரியபெத்தை மண்சரிவு இயற்கை அனர்த்தத்தின் ஊடாக பாதிக்கப்பட்ட உறவுகளுக்கு வீடு, கல்வி, தொழில் ஆகிய பிரச்சினைகளுக்கு முடிவு கட்டப்பட்டுள்ளது.

காலங்கள் கடந்திருந்த போதும் தம் உறவுகளை இழந்த மக்கள் அந்த உறவுகள் எம்மோடு தான் இருக்கின்றார்கள் என்பதை மனதில் நிறுத்தி அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ள இந்த தனி வீட்டில் சுபீட்சமான வாழ்க்கையை வாழ வேண்டும் என ஊவா மாகாண அமைச்சர் செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

மீரியபெத்தை மண்சரிவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வீடமைப்பு நேற்று முன்தினம் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டது.

இதன்போது கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையில், அவர் இவ்வாறு தெரிவித்தார். (இ-7)

# தமிழ் சினிமா வரலாறு

## திரை உலகில் ஒரு படிக்காத மேதை சின்னப்ப தேவர்

**282**

### உடற்பயிற்சி

சின்னப்ப தேவரும் அவர் நண்பர்களும் சேர்ந்து வீரமாருதி தேகப் பயிற்சிச்சாலை என்ற உடற்பயிற்சி நிலையத்தை தொடங்கினார்கள்.

அங்கு உடற்பயிற்சிகள் செய்து கட்டுடல் பெற்றார் தேவர் . மல்யுத்தம், கத்திச் சண்டை, கம்புச்சண்டை முதலியவற்றையும் கற்றார்.

இந்தச் சமயத்தில் கோவையில் ஜுபிடர் பிக்சர்ஸ் சினிமாப் படங்களைத் தயாரித்து வந்தது. அங்கு எம்.ஜி.ஆர்., எம்.என்.நம்பியார், எஸ்.வி. சுப்பையா ஆகியோர் ஒப்பந்த நடிகர்களாக மாத சம்பளத்தில் வேலை பார்த்து வந்தனர்.

சினிமாப் படங்களில் சண்டைக் காட்சிகளில் நடிக்கவும் புராண கதாபாத்திரங்களில் நடிக்கவும் வாட்டசாட்டமான நடிகர்கள் தேவைப்படுவார்கள். அப்போது சின்னப்ப தேவருக்கு அந்த வேடங்களில் நடிக்கும் வாய்ப்புக் கிடைத்தது.

இதன் காரணமாக எம்.ஜி.ஆருடனும் மற்ற நடிகர்களுடனும் தேவருக்கு நட்பு ஏற்பட்டது. எம்.ஜி.ஆரும் தேவரின் வீர மாருதி தேகப் பயிற்சிச்சாலைக்கு வந்து உடற்பயிற்சி செய்வது உண்டு.

எம்.ஜி.ஆருக்கு ஏற்கனவே கத்திச்சண்டை நன்றாகத் தெரியும். கம்புச்சண்டையில் தேர்ந்தவரான சின்னப்ப தேவர் அது பற்றிய நுட்பங்களை எம்.ஜி.ஆருக்கு கற்றுத் தந்தார்.

அக்காலத்தில் புராணப் படங்கள் தயாரிப்பதில் புகழ் பெற்ற சி.வி.ராமன் என்ற டைரக்டர் கோவையில் இருந்தார். அவரிடம் தயாரிப்பு நிர்வாகியாக தேவர் பணியாற்றினார். சினிமா தயாரிப்பு நுட்பங்களைக் கற்றுக்கொண்டார்.

இதற்கிடையில் தேவரின் தம்பி திருமுகம் எடிட்டிங் துறையில் பயிற்சி பெற்று திறமைசாலி என்ற பட்டம் பெற்றார். ஜுபிடர் தயாரித்த வேலைக்காரி, மனோகரா முதலிய படங்களுக்கு எடிட்டராகப் பணியாற்றினார்.

### சென்னை வந்தார்

சொந்தத்தில் சினிமாப் படம் எடுக்க வேண்டும் என்று தேவருக்கு ஆசை ஏற்பட்டது. நண்பர்களிடம் ஆயிரம் ரூபாய், 2ஆயிரம் ரூபாய் என்று பணம் சேகரித்தார். மொத்தம் 10 ஆயிரம் ரூபாய் சேர்ந்தது.

இந்தப் பணத்துடனும் ஒரு காருடனும் சென்னைக்கு வந்தார். தேவர் பிலிம்ஸ் படக் கம்பனியைத் தொடங்கினார்.

### எம்.ஜி.ஆர்-பானுமதி



வெளிப்புற படப்பிடிப்பின்போது, பரிசலில் சின்னப்ப தேவர்.

முதல் படத்தையே பெரிய நட்சத்திரங்களை வைத்து தயாரிக்க வேண்டும் என்று தேவர் விரும்பினார். கோவையில் நண்பராகப் பழகியிருந்த எம்.ஜி.ஆரை அணுகி தன் படத்தில் நடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். எம்.ஜி.ஆர்.சம்மதித்து கால்ஷீட் கொடுத்தார்.

கோவையில் பல படங்களில் நடித்த பானுமதியுடனும் தேவருக்கு அறிமுகம் உண்டு. அவரிடம் சென்று தன் படத்தில் நடிக்கும்படி கேட்டுக் கொண்டார். பானுமதி சம்மதித்தார். மற்றும் பாலையா, கண்ணம்பா, ஈ.ஆர்.சகாதேவன் ஆகியோரும் ஒப்பந்தம் செய்யப்பட்டனர்.

படத்தயாரிப்புக்கான வேலைகளில் தேவர் மும்முரமாக ஈடுபட்டார். எடிட்டிங் துறையில் நல்ல அனுபவம் பெற்றிருந்த தன் தம்பி எம்.ஏ.திருமுகத்தையே டைரக்டராக்க முடிவு செய்தார். படத்துக்கு தாய்க்குப்பின் தாரம் என்ற பெயர் சூட்டப்பட்டது.

இந்தப் படத்துக்கு முதலில் ஏ.பி.நாகராஜன் வசனம் எழுத ஏற்பாடாகியிருந்தது. பின்னர் கண்ணதாசன் எழுதுவார் என்று கூறப்பட்டது. இறுதியில் கண்ணதாசனின் உதவியாளராக இருந்த அய்யாப்பிள்ளை எழுதினார்.

பாடல்களை கோவை லட்சுமணதாஸ், மருதகாசி ஆகியோர் எழுத கே.வி.மகாதேவன் இசை அமைத்தார்.

(தொடரும்)

கெட்ட உள்நோக்கத்தோடு கூறப்படும் ஓர் உண்மை ஆயிரம் பொய்களை விட மோசமான தாகும்.

*- ஓர் அறிஞர்*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## நடந்த பிழையைத் திருத்துங்கள் பிழைக்காக பிழை செய்யாதீர்கள்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இரண்டு மாணவர்களின் மரணமே இன்று பேசுபடு பொருளாகியுள்ளது.

பொலிஸார் மேற்கொண்ட அநியாயமான செயலால் அருமந்த இரண்டு உயிர்கள் காவு கொள்ளப்பட்டுவிட்டன.

இது மிகப்பெரிய பிழை. இத்தகைய பிழைகள் இனிமேல் நடக்காமல் இருப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

இதைவிடுத்து நடந்த ஒரு பிழையை மறைப்பதற்காக அல்லது அதனால் ஏற்படக்கூடிய பிற்தாக்கத்தைத் தடுப்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் இன்னொரு பிழையை ஏற்படுத்திவிடக்கூடாது என்பதில் சம்பந்தப்பட்ட அனைவரும் விழிப்பாக இருக்க வேண்டும்.

பொலிஸார் சுட்டதில் இரண்டு மாணவர்கள் பலியான சம்பவம் சாதாரணமானதன்று. இந்தச் சம்பவம் நடந்த நிலையில், பல்கலைக்கழக மாணவர்கள் உள்ளிட்ட மக்கள் சமூகம் எதிர்ப்பை காட்டவே செய்யும்.

இவ்வாறான எதிர்ப்பைத் தடுப்பது என்பது நடந்த சம்பவம் தொடர்பில் எடுக்கப்படும் நடவடிக்கைகளும் அதன் மீதான நம்பிக்கைகளுமாகவே இருக்கும்.

ஆகையால் நடந்த சம்பவம் தொடர்பில் பக்கச் சார்பற்றதும் நம்பகத்தன்மைமிக்கதுமான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இதைவிடுத்து மாணவர்களின் மரணத்தின் எதிரொலிப்பை தணிக்கை செய்வதாக நினைத்து பயங்கரமான காரியங்களைச் செய்ய எத்தனிப்பது திரும்பத் திரும்ப பிழைகள் நடப்பதற்கு வழிவகுக்கும்.

ஆகையால் ஒரு பிழையை - குற்றத்தை ஏற்றுக் கொண்டு அதற்குப் பரிகாரம் தேடப் பழகிக்கொள்வதே நல்லதும் நன்மை தரக்கூடியதுமாகும்.

இதைவிடுத்து திசை திருப்புதல் என்ற பேரில் மீண்டும் மீண்டும் பிழைகளை, குற்றங்களைச் செய்வது பாரதூரமான விளைவையே ஏற்படுத்தும்.

இது ஒருபுறம் இருக்க, நேற்றைய தினம் சுன்னாகப் பகுதியில் சிவில் உடையில் நின்ற இரண்டு பொலிஸாரை இனந்தெரியாதவர்கள் வாளால் வெட்டியதான சம்பவம் ஒன்று நடந்துள்ளது. இந்தச் சம்பவம் கண்டனத்துக்குரியது.

அதேவேளை இந்தச் சம்பவம் குறித்த உண்மை நிலையை உடனடியாக வெளிப்படுத்த வேண்டும். ஏனெனில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்ட நிலையில்,

அதில் ஒரு மாணவன் சுன்னாகம் கந்தரோடையைச் சொந்த இடமாகக் கொண்டவர். அவரின் இறுதிக்கிரியை இன்று நடைபெற இருக்கின்ற வேளையில்,

நேற்றைய தினம் சுன்னாகத்தில் வைத்து இரண்டு பொலிஸார் வாளால் வெட்டப்பட்டனர் என்பது ஒரு பெரும் சதி நோக்கம் கொண்டது என்பது தெளிவாகிறது.

பொதுவில் மக்கள் சமூகம் குழப்பமடையக்கூடிய சம்பவங்கள் இடம்பெற்றால், அதனைத் திசைதிருப்பும் நோக்கில் சில திட்டங்கள் தீட்டப்படுவது வழமை.

அதற்காக தீட்டப்படும் திட்டம் ஒரு இனத்துக்குப் பெரும்தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாக அமைக்கப்படுமாக இருந்தால் அது பயங்கரமானது.

ஆக, சுன்னாகத்தில் இரண்டு பொலிஸார் மீது வாளால் வெட்டப்பட்ட சம்பவம் தொடர்பில் உடனடியாக நிலைமையை விளக்கி குழப்பங்களைத் தடுப்பது பொலிஸ் தலைமையின் கடமையாகும்.

பொலிஸார் மீது வாள்வெட்டு நடத்தும் அளவில் யாழ்ப்பாணத்தில் ஏதோவொரு சக்தி இருப்பது போல மேற்கொள்ளும் காட்டாப்புக்கள் இந்த மண்ணில் மீண்டும் இராணுவ ரோந்துகள், சோதனைகள், கைதுகள், விசாரணைகள் என்ற துன்பியலை தொடங்குவதற்கான பூர்வாங்கமாகவே கருத முடியும். ஆகையால் உண்மை நிலையை உடன் வெளிப்படுத்தி பிழைகள் ஏற்படாமல் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

# கரைச்சி பிரதேச சபை வளாகத்தினுள் விழிப்பூட்டலும் கழிவு சேகரித்தலும்

## நாளை காலை 9 மணிக்கு ஆரம்பம்

மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் பொலித்தீன் பிளாஸ்ரிக் இலத்திரனியல் மின் சாதனைக் கழிவுகள் அகற்றும் முகாமைத்துவ வாரம் தேசிய ரீதியில் ஒகடோபர் 23 ஆம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப்படுகின்றது.

மத்தியசுற்றாடல் அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தினால் பொது மக்கள் மற்றும் மாணவர்களுக்கு இடையில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நாளை செவ்வாய்க்கிழமை நடைபவனி மற்றும் விழிப்பூட்டல் நிகழ்வுகள் என்பன நடைபெறவுள்ளன:

நாளை காலை 8 மணிக்கு இக்கழிவுகளுக்கு எதிராக விழிப்பூட்டலை ஏற்படுத்துவதற்காக பாடசாலை சுற்றாடல் முன்னோடிகளினால சுலோகங்கள் தாங்கிய நடைபவனியொன்று கிளிநொச்சியில் நடைபெற்று அதனைத் தொடர்ந்து 9 மணிக்கு கரைச்சி பிரதேச சபை வளாகத்தினுள் விழிப்பூட்டல் நிகழ்வும் கழிவுகளைச் சேகரிக்கும் நிகழ்வும் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ். சத்தியசீலன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். இந்நிகழ்வில் அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சுற்றாடல முன்னோடிகள் போன்றோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இது தொடர்பாக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தினால் வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஜனாதிபதியும் மகாவலி மற்றும் சுற்றாடல் அமைச்சருமாகிய மைத்திரிபால சிறிசேன வழிகாட்டலின் கீழ் நீலப்பசுமை யுகத்தினை கட்டியெழுப்பும் நோககத்துடன் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் தேசிய பொலித்தீன் பிளாஸ்ரிக் மற்றும் இலத்திரனியல் கழிவுகள் தவிர்ப்பு வாரம் 2016 ஆம் ஆணடு அறிவிக்கப்பட்டுள்ளது.

பொலித்தீன், பிளாஸ்ரிக் போன்றவை உடல் நலத்திற்கு தீங்கு விளைவிக்கும் பல இரசாயன பல்பகுதியங்களால் உருவாக்கப்பட்டவை. இவை சூழலிற்கு கழிவுகளாக விடப்படும் போது இவற்றை கவனமான முறையில் அப்புறப்படுத்தப்படல்வேண்டும். ஆனால எமது மக்கள் இக்கழிவுகளை எரித்தும் புதைத்தும் அப்புறப்படுத்துகின்றனர்.

எரிப்பதனால் இவற்றிலுள்ள இரசாயனப் பொருட்கள் எமது சுவாசச் செயற்பாட்டின் மூலம் உடலை சென்றடைந்து பாதிப்புக்களை ஏற்படுத்துவதுடன் புற்றுநோய் போன்ற மாற்ற முடியாத நோய்களையும் ஏற்படுத்துகின்றன.

குறிப்பாக கிளிநொச்சி மாவட்டத்தில் கழிவுகளை அகற்றுவதற்கானவழி முறைகள் உரிய முறைகளில் இல்லாததால் அவற்றை எரித்து புதைக்கின்றனர்.

எனவே இனிவருங் காலங்களில் இக்கழிவுகளை பாதுகாப்பான முறையில் சேகரித்து உரிய முறையில் அகற்றப்பட வேண்டியது அவசியமாகும்.

இவ்வார தொடக்க நிகழ்வில் விழிப்புணர்வு கருத்தரங்கினை அடுத்து பிளாஸ்ரிக், பொலித்தீன் மற்றும் இலத்திரனியல் கழிவுகள சேகரித்தலும் மேலதிக அரசாங்க அதிபரினால் ஆரம்பித்து வைக்கப்படும.

முக்கியமாக கழிவுகளாக காய்ந்த பொலித்தீன் பைகள், காய்ந்த ரிசு பைகள் இலத்திரனியல் கழிவுகளாக தொலைக்காட்சிப்பெட்டி கள், வானொலிப்பெட்டி, கைத் தொலைபேசிகள், அதன் பற்றறிகள், ஊனுக்கள், இலத்திரனியல் பொருட்கள், இலத்திரனியல் விளையாட்டுப் பொருட்கள் போன்ற அனைத்தும் உள்ளடக்கப்படும்.

எனவே கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள அனைத்து அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள், பாடசாலைகள், வைத்தியசாலைகள், அச்சகங்கள், கடைகள் போன்ற அனைத்து இடங்களிலுமுள்ளவர்கள் தங்களிடமுள்ள மேற்குறிப்பிட்ட கழிவுகளை பாதுகாப்பான முறையில் பொதி செய்து வழங்கப்பட வேண்டும். கழிவுகளை சேகரிப்பதற்காக மத்திய சுற்றாடல் அதிகார சபை கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைய எதிர்வரும் 25 ஆம் திகதி கரைச்சி பிரதேச சபை வளாகத்திலும் மறுநாள் புதன்கிழமை பூநகரிப் பிரதேசத்தில் சேகரிப்பதற்காக பூநகரிப் பிரதேச சபையும் எதிர்வரும் 27 ஆம் திகதி வியாழக்கிழமை கரைச்சி பிரதேச சபையின் உப அலுவலகத்திலும் முரசுமோட்டையிலும் மறு நாள் வெள்ளிக்கிழமை பச்சிலைப் பள்ளி பிரதேச சபையிலும் இதற்காக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள தற்காலிக சேகரிப்பு நிலையங்களில் வழங்கலாம் அல் லது எமது ஒலிபரப்பு வாகனத்திலும் இக் கழிவுகளை உரிய முறையில் பொதிசெய்து சமர்ப்பிக் கலாம என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (2-15-254)

## இலவச சீருடை வழங்கல்

கொழும்பு லயன்ஸ் கழகத்தினால் நீர்வேலி சி.சி.த.க. பாடசாலையில் கல்வி கற்கும் வறிய மாணவர்களுக்கான இலவச சீருடை வழங்கும் நிகழ்வு இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம்பெறும்.

பாடசாலையில் அதிபர் இ.த.இரவீந்திரநாதன் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.மாணிக்கராஜா, சிறப்பு விருந்தினர்களாக லயன் இ.ஹெர்னேரியஸ், எம்.சில்வெஸ்ரர், கௌரவ விருந்தினர்களாக உரும்பிராய் றோ.க.த.க பாடசாலை அதிபர் ஜெ. கெனத், நீர்வேலி வடக்கு கிராம அலுவலர் திருமதி பிறேசிலா சிவகுலதிலகசிங்கம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.(இ-3-136)

## புடைவை வர்த்தகர்கள் வரவும்

தென்னிந்தியாவின் பெங்களூர் நகரில் எதிர்வரும் நவம்பர் மாதம் 17,18 ஆம் திகதிகளில் நடைபெறும் மாபெரும் புடைவைக் கண்காட்சியில் பங்குபற்ற விரும்பும் புடைவை வர்த்தகர்கள் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4 மணியளவில் 165, மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள யாழ். வணிகர்கழகத்திற்கு வருகை தரும் படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதராலயத்தினர் கேட்டுக்கொண்டவாறு இக் கண்காட்சியில் பங்குபற்ற விரும்புபவர்களுக்கான விளக்கங்கள் வணிகர் கழகத்தினால் இச் சந்திப்பின் போது வழங்கப்படும்.

இவ் வாய்ப்பை புடைவை வர்த்தகர்கள் பயன்படுத்திக் கொள்ளுமாறு யாழ். வணிகர் கழகம் அறிவித்துள்ளது. (இ)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து 6.30 மணி வரை யாழ்.பிரதேசத்தில மாலுசந்தி, வதிரிச்சந்தி, இரும்பு மதவடி, சக்களாவத்தை, இலகடி ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில தெற்கிலுப்பைக்குளம், வெளிக்குளம், வவுனியா நகரம், மடுக்கந்த பிரதேசம், உளுக்குளத்திலிருந்து நேரியகுளம் வரை ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் நொச்சிக்குளம் பிரதேசம், முசலிப் பிரதேசம், அறுகுக்குன்று, சிலாவத்துறை கடற்படை முகாம், CECB, முள்ளிக்குளம் கடற படை முகாம் ஆகிய பிரதேசங்களிலும் மின்தடைப்படும. (இ-9)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### இயற்கை உணர்வு (Natural Instinct)



இயற்கை உணர்வானது எல்லா ஜீவ ராசிகளிடமும் இயல்பாக அமைந்துள்ளது. பிறந்த குழந்தை தன் தாய் மார்பில் கிடத்திக் கொண்டால் பாலை உறிஞ்சிக் குடிக்கக்கூடிய சக்தி பிறப்பிலேயே இயல்பாக இருக்கிறது. பிறந்த மீன் குஞ்சு அடுத்த கணமே நீந்தத் தொடங்கி விடுகிறது. இதெல்லாம் இயல்பாக வருகிறது. அதற்கு "Instinct" என்று ஆங்கிலத்தில் சொல்லுகிறோம். இந்த "Instinct" என்பதற்கு மேலே "Intelligence" அறிவுக் கூர்மை உண்டாகிறது.

ஒரு பொருளைத் தொட்டால் சுடுகிறது அல்லது ஓரிடத்திலிருந்து கீழே விழுந்து விட்டால் என்ன செய்வது என்று பாதுகாப்பாக ஜாக்கிரதையோடு நடந்து கொள்ளும் உணர்வு ஏற்படுகிறது. இதுதான் "Intelligence" என்பது. ஒவ்வொரு அனுபவத்தைக் கொண்டு நாம் தேர்ந்து எடுத்துக் கொள்ளும் முயற்சியே அது.

இந்த "Intelligence" வந்த பிறகு தான் "அறிவு", "Knowledge" வந்தது. தன்னுடைய அனுபவத்தை மாத்திரம் வைத்துக் கொண்டு வாழத் தொடங்குவது "Intelligence". அதற்கு மேலாகப் பலருடைய அனுபவத்தைத் தன்னுடைய வாழ்வில் கூட்டிக் கொண்டு விரிந்த ஒரு நிலையோடு அறிவை இணைத்துக் கொள்கின்றபோது அதை "அறிவு" "Knowledge" என்று சொல்லலாம்.

இந்த "Collective Knowledge" வந்த பிறகு தான் ஒவ்வொரு பொருளோடும் ஊடுருவி. ஊடுருவி நோக்கவும் தன்னையும் உற்று நோக்கிப் பார்க்கிறபோது தான் "Intuition" உண்டாகிறது. அதில் இருந்து தான் எல்லாம் வல்ல இறையருள் சிறுகச் சிறுக உயர்ந்து இவனுக்கு வேண்டியது எல்லாம் உள்ளுணர்வில் கிடைக்கின்றன. இது உங்களுக்கு இல்லையா? நிச்சயமாக இருக்கிறது.

# நெடியகாடு இளைஞர் வி.கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுத்தொடர்




## ஞானமுருகன் வெற்றி

நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் Northern Challengers உதைபந்தாட்ட போட்டியில் 21.10 .2016 நடைபெற்ற போட்டியில் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து விளையாடிய ஞானமுருகன் விளையாட்டுக்கழகம் 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாம் சுற்றுக்கு முன்னேறியது. ஞானமுருகன் அணி சார்பாக தவரூபன் 2 கோலினையும் சுபாஸ், துரகன், வின்சன் தலா 01 கோலினையும் போட்டனர். (கு)




# இளவாலை யங்ஹென்றீஸ் மூன்றாம் சுற்றுக்கு முன்னேற்றம்




நெடியகாடு இளைஞர் விளையாட்டு கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் Northern Challenger உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் 20.10.2016 நடைபெற்ற போட்டியில் பொம்மேர்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து விளையாடிய இளவாலை யங்ஹென் றீஸ் விளையாட்டுக்கழகம் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாம் சுற்றுக்கு முன்னேறியது. (கு)

# வல்வை நகரசபையின் மென்பந்தாட்டம் நெற்கொழு ஸ்ரீஞான வைரவர் வெற்றி

2016 உள்ளூராட்சி மாதத்தினை முன்னிட்டு வல்வை நகராட்சி மன்றத்தினால் சனசமூக நிலையங்களுக்கிடையேயான அணிக்கு 6 நபர் 5 ஓவர்கள் கொண்ட மென்பந்தாட்ட சுற்றுப்போட்டி 22.10. 2016 சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு தீருவில் இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. முதலில் முதல் சுற்றுக்கள் நடைபெற்றதுடன் முதல் சுற்றில் வெற்றி பெற்ற அணிகள் அரையிறுதிக்கு தெரிவு செய்யப்பட்டன.

முதலாவது அரையிறுதிபோட்டியில் வல்வை சனசமூக சேவா நிலையத்தை எதிர்த்து நெடியகாடு கணபதி சனசமூக நிலையம் மோதியது. இதில் நெடியகாடு கணபதி சனசமூக நிலையம் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது. இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் வல்வை விக்னேஸ்வரா சனசமூகநிலையத்தை எதிர்த்து நெற்கொழு ஸ்ரீ ஞான வைரவர் சனசமூக நிலையம் மோதியது. இதில் நெற்கொழு ஸ்ரீ ஞானவைரவர் சன சமூக நிலயம் வெற்றி பெற்று இறுதிபோட்டிக்கு தகுதிபெற்றது.

இறுதிப்போட்டியில் நெற்கொழு ஸ்ரீஞான வைரவர் சனசமூக நிலையத்தை எதிர்த்து நெடியகாடு கணபதி சனசமூக நிலையம் மோதியது. இதில் நெற்கொழு ஸ்ரீ ஞான வைரவர் சனசமூக நிலையம் வெற்றி பெற்று வெற்றிக் கிண்ணத்தைக் கைப்பற்றியது. குறித்த இந்தப் போட்டியில் வல்வை நகரசபைக்குட்பட்ட வல்வை சனசமூக சேவா நிலையம், நெற்கொழு ஸ்ரீஞான வைரவர் சனசமூக நிலையம், கலைவாணி சனசமூக நிலையம், விக்னேஸ்வரா சனசமூக நிலையம், நெடியகாடு கணபதி சனசமூக நிலையம் ஆகிய 5 சனசமூக நிலையங்கள் பங்கு கொண்டமை குறிப்பிடத்தக்கது. (கு)

# காலிறுதிப்போட்டிக்கு முன்னேறியது வடமராட்சி லீக் தெரிவு அணி



உதை பந்தாட்ட காலிறுதி ஆட்டத்தில் வேலணை லீக் தெரிவு அணியை வீழ்த்தியது வடமராட்சி லீக் தெரிவு அணி. 22.10.2016 இடம்பெற்ற புணர்வாழ்வு பெற்றவர்களை உள்ளடக்கிய யாழ். மாவட்டத்தின் பிரதேச தெரிவு அணிகள் பங்கு பெறும் உதைபந்தாட்ட சுற்றுத் தொடர் வேலணை லீக் தெரிவு அணி எதிர்ந்து வடமராட்சி லீக் தெரிவு அணி மோதியது.

முதல் பாதியாட்டத்தில் 01:01 என்ற அடிப்படையில் ஆட்டம் சம நிலையில் நிறைவுற்றது.

இரண்டாவது பாதியாட்டத்தில் தொடர்ச்சியாக இரண்டு கோல்களை போட்டு வேலணை தெரிவு அணியை 03:01 என்ற அடிப்படையில் வீழ்த்திக் காலிறுதிக்கு முன்னேறியது வடமராட்சி லீக் தெரிவு அணி.

காலிறுதியாட்டத்தில் நல்லூர் லீக் தெரிவு அணியுடன் மோதவுள்ளது. வடமராட்சி லீக் தெரிவு அணி சார்பாக துசி- 02, சாரங்கன்-01 கோல் போட்டனர். (கு)

# மாலுசந்தி மைக்கல் வி.கழக கிரிக்கெட் போட்டி முடிபுகள்

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகம் நடத்திவரும் மின்னொளியிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற அணிக்கு 5 ஓவர் 6 பேர் கொண்ட போட்டியில் முதலாவது போட்டியில் கரவெட்டி மகேசன் அணியை வீழ்த்தி அச்சுவேலி கோல்ட் ஸ்ரார் அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுப்போட்டிக்கு தகுதி பெற்றது.

இரண்டாவது போட்டியில் இணுவில் கலை ஒளி அணியை எதிர்த்து மோதிய யாழ்ப்பாணம் கொட்டடி இளங்கதிர் அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுப்போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

நடைபெற்ற மூன்றாவது போட்டியில் அளவெட்டி மத்தி அணியை எதிர்த்து கொக்குவில் காமாட்சி அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் காமாட்சி அணி 5 ஓவர்களில் 62 ஓட்டங்களை பெற்றது. பதிலுக்கு ஆடிய அளவெட்டி மத்தி அணி 48 ஓட்டங்களை பெற்றது.

இறுதியில் 14 ஓட்டங்களினால் கொக்குவில் காமாட்சி அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுப்போட்டிக்கு தகுதி பெற்றது. தொடர்ந்து நடைபெற்ற 4 ஆவது போட்டியில் அளவெட்டி மத்தி அணியை எதிர்த்து கொக்குவில் காமாட்சி அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய சங்கானை காமாட்சி அணி 5 ஓவர்களில் 52 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு ஆடிய வல்வெட்டித்துறை நெடிய காடு அணி 42 ஓட்டங்களை பெற்றது. இறுதியில் 10 ஓட்டங்களினால் சங்கானை கிங்ஸ் அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுப் போட்டிக்கு தகுதி பெற்றது. (கு)

# 2016 ஆம் ஆண்டுக்கான கராத்தே; கிளிநொச்சி மாவட்டம் முதலிடம்





2016 ஆம் ஆண்டுக்கான ரக்கு வாண்டு கராத்தே போட்டி அண்மையில் கிளிநொச்சி மாவட்ட செயலக மண்டபத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மன்னார் மாவட்ட வீர வீராங்கனைகள் பங்கு கொண்டனர். இதில் கிளிநொச்சி மாவட்டத்தினைச் சேர்ந்த வீர வீராங்கனைகள் முதலிடத்தினைப் பெற்று வெற்றிக்கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டனர். வெற்றி பெற்ற விளையாட்டு வீரர்களுடன் மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் மோகன், மாகாண விளையாட்டு உத்தியோகத்தர், பயிற்சி ஆசிரியர் சென். சே.விஜயராஜ் ஆகியோரையும் படங்களில் காணலாம். (கு)

# இரு பொலிஸார் மீது வாள்வெட்டு...



யாழ்.சுன்னாகம் நகரப்பகுதியில் கொட்டும் மழைக்கு மத்தியில் இரண்டு மோட்டார் சைக்கிளில் வாள் மற்றும் இரும்பு கம்பிகளுடன் வந்த கும்பலொன்று விற்பனை நிலையமொன்றுக்குள் புகுந்து நாசம் செய்ததுடன் அங்கிருந்தவர்களை மிரட்டி ஒரு தொகைப் பணத்தையும் கொள்ளையிட்டதுடன் அங்கு நின்ற பொலிஸாரையும் வாளால் வெட்டி விட்டு தப்பி சென்றுள்ளது.

இந்த சம்பவத்தினால் நேற்றைய தினம் சுன்னாகம் பகுதியில் பதற்றம் நிலவியதுடன் பொலிஸார் சோதனை நடவடிக்கைகளை துருவி துருவி மேற்கொண்டிருந்ததையும் அவதானிக்க முடிந்தது.

மேலும் சம்பவ இடத்திற்கு இராணுவம், மற்றும் விசேட அதிரடிப்படை என்பனவும் வருகை தந்து பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டன. சம்பவத்தின்போது படுகாயமடைந்த இரு பொலிஸார் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

நேற்றைய தினம் பிற்பகல் சுமார் 1.30 மணியளவில் சுன்னாகம் நகரப்பகுதியில் உள்ள புடைவை வியாபார நிலையத்துக்கு இரண்டு மோட்டார் சைக்கிளில் ஆறுபேர் அடங்கிய ஆயுத கும்பலொன்று வந்துள்ளது.

இவ்வாறு வருகை தந்தவர்கள் வாள் மற்றும் இரும்பு கம்பிகளுடன் வந்துள்ளதுடன் மோட்டார் சைக்கிளின் இலக்கத்தகடுகளை கறுப்புத்துணியால் மறைத்திருந்ததுடன் தமது முகங்களையும் கறுப்புத்துணியால் மூடியிருந்துள்ளனர்.

குறித்த சமயம் அடை மழை பெய்துகொண்டிருந்தது. இதனை தமக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்ட குறித்த கும்பலானது வியாபார நிலையத்துக்குள் புகுந்து வாள் மற்றும் இரும்புக்கம்பிகளால் வியாபார நிலையத்தை அடித்து உடைத்து நாசப்படுத்தியுள்ளது.

அத்துடன் வியாபார நிலையத்தில் இருந்தவரது கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டி சுமார் 35ஆயிரம் ரூபாய் பணத்தையும் கொள்ளையிட்டு விட்டு வெளியேறியுள்ளனர்.

இந்நிலையில் வெளியே வரும் போது வியாபார நிலையத்துக்கு அண்மையில் சிவில் உடையில் காணப்பட்ட இரு பொலிஸ் அதிகாரிகள் மீது சரமாரியாக வாள்வெட்டுத் தாக்குதலையும் நடத்தியிருந்தனர். இதன் போது தலை மற்றும் கைகளில் பொலிஸார் படுகாயமடைந்திருந்தனர்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த சுன்னாகம் பொலிஸார் படுகாயமடைந்த விமல பண்டார மற்றும் நவரத்தின ஆகிய இரு பொலிஸாரையும் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்திருந்தனர்.

அத்துடன் சம்பவ இடத்திற்கு யாழ்.மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் மற்றும் புலனாய்வுத்துறை உயர் அதிகாரி ஆகியோரும் வருகை தந்து விசாரனைகளை ஆரம்பித்திருந்தனர்.

குறித்த வியாபார நிலைய உரிமையாளரிடம் கடந்த மாதம் புதிதாக ஒரு தொலைபேசி இலக்கத்தில் இருந்து தொடர்புகொண்ட சிலர் சுமார் இரண்டு இலட்சம் வரையில் கப்பம் கேட்டு மிரட்டியுள்ளதாகவும் கடை உரிமையாளரால் பொலிஸாரிடம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் நேற்று இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் தொடர்பாக யாழ்.மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் சஞ்ஜீவ தர்மரட்னவிடம் வினவியபோது, இச்சம்பவம் தொடர்பாக விசாரணைகள் துரிதமாக இடம்பெறுவதாகவும் குற்றவாளிகள் கைது செய்யப்படும் போது ஊடகங்களுக்கு தெரிவிக்கப்படும் எனவும் தெரிவித்திருந்தார்.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் பல்கலைகழக மாணவர்கள் இருவர் மீது பொலிஸார் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டு படுகொலை செய்த சம்பவத்தையடுத்து யாழ்.குடாநாடு முழுவதும் மக்கள் மத்தியில் அச்சமும் பதற்றமான சுழலும் காணப்பட்டிருந்தது.

இந்நிலையில் மீண்டும் 3நாட்களின் பின்னர் மீண்டுமொரு குற்றச் சம்பவமாக பொலிஸார் மீதும் வாள்வெட்டு தாக்குதல் நடத்தப்பட்டமையானது மக்கள் மத்தியில் மீண்டும் அச்சத்தையும் குடாநாடு முழுவதும பதற்றமான சூழலையும் ஏற்படுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.(செ-4-9-30)

# வடக்கில் நாளை பூரண ஹர்த்...




கடந்த 20-ம் திகதி வியாழக்கிழமை யாழ்.கொக்குவில் இடம்பெற்ற பொலிஸாரின் துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் சுன்னாகம் கந்தரோடைப் பகுதியினைச் சேர்ந்த விஜயகுமார் சுலக்சன் (வயது 24), கிளிநொச்சி - இரணைமடுப் பகுதியினைச் சேர்ந்த நடராஜா கஜன் (வயது 23) எனும் யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் பரிதாபகரமாக உயிரிழந்திருந்தனர். இதில் ஒரு மாணவனின் விலா என்பு பகுதியூடாக துப்பாக்கி சன்னம் துளைத்து கொண்டு சென்றிருந்தது.

இந்த படுகொலையை அடுத்து நாடு முழுவதும் பெரும் அதிர்வலைகள் ஏற்பட்டுள்ள நிலையில், நேற்றைய தினம் யாழில் உள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் தமிழ் அரசியல் கட்சிகள் அவசர அவசரமாக ஒன்று கூடியிருந்தன. இதன்போது மாணவனின் கொலையை கண்டித்து வடக்கு மாகாணம் முழுவதும் பூரண ஹர்த்தால் மற்றும் கடையடைப்பு ஒன்றை மேற்கொள்ள அழைப்பு விடுவது என தீர்மானிக்கப்பட்டது. இதன் பின்னர் குறித்த முடிவை அறிவிக்கும் பத்திரிகையாளர் சந்திப்பு ஒன்று யாழ்.ஊடக அமையத்தில் நேற்றைய தினம் மாலை 4.30 மணியளவில் நடைபெற்றது.

இதில் தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தனர். இதன் போது சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா கருத்து தெரிவிக்கையில்,

கடந்த இருபதாம் திகதி இரவு வேளை பொலிஸாரால் இரு பல்கலைக்கழக மாணவர்கள் சுட்டுக்கொலை செய்யப்பட்டிருந்தனர்.

இந்த கொலைகள் தமிழ் மக்கள் மீது கடந்த காலம் தொட்டு தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் கொலைகளின் தொடர்ச்சியாகவே பார்க்கின்றோம். இலங்கையில் மாறி மாறி வரும் ஆட்சியாளர்களின் கீழ் தமிழ் மக்கள் படுகொலைகளை எதிர்நோக்கிய வண்ணமே வருகின்றனர். அரச பயங்கரவாதம் தமிழர்களை அடக்கி ஆள்வதற்கு இவ்வாறான படுகொலைகள் மூலம் தொடர்ந்து முயற்சித்த வண்ணமே உள்ளன. ஆயினும் இனிமேலும் தமிழர்கள் மீதான படுகொலைகளை அனுமதிக்க முடியாது என்பதில் எமது மக்கள் உறுதியாக உள்ளனர். மக்களுடைய ஒட்டுமொத்த வெளிப்பாடாக நாளைய தினம் இடம்பெறவுள்ள ஹர்த்தால் இருக்கும் என நாம் நம்புகின்றோம்.

இதற்கு பயணிகள் போக்குவரத்து பேரூந்து சங்கங்கள், மற்றும் வணிகர் கழகங்கள், பொது அமைப்புக்கள், சங்கங்கள் என அனைத்தும் ஆதரவு தெரிவித்துள்ளன. இந்நிலையில் வர்த்தகர்கள் அனைவரும் தமது கடைகளை நாளைய தினம் பூட்டி, ஹர்த்தாலுக்கு பூரண ஆதரவை தரவேண்டும்.

இதே போன்று அரச பணியாளர்கள், வங்கி நிறுவனங்கள் என சகல திணைக்களங்களும் மாணவர் கொலையை கண்டித்தும் அவர்களுக்கு நீதி கோரியும் இடம்பெறும ஹர்த்தாலுக்கு பூரண ஆதரவு வழங்க வேண்டும். தமிழர்கள் மீது ஒவ்வொரு ஆட்சியாளர்களின் காலங்களில் அரச பயங்கரவாத நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவை ஒவ்வொன்றும் தமிழ் மக்களின் உயிர்களை பறித்த வண்ணமே உள்ளன. ஆயுதம் தாங்கிய பொலிஸார் வீதிகளில் நின்று பல்கலைக்கழக மாணவர்களை துப்பாக்கியால் சுடுவது என்பது சாதாரணமாக கருத முடியாது.

எனவே மாணவர்கள் சுடப்பட்டதை கண்டித்தும் அவர்களுடைய கொலைக்கு நீதி கோரியும் நாளை இடம்பெறவுள்ள ஹர்த்தாலுக்கு அனைத்து தரப்பும் பூரண ஆதரவு வழங்க வேண்டும் என அழைப்பு விடுக்கின்றோம் என அவர் தெரிவித்தார்.

இந்த கூட்டத்தில், இலங்கை தமிழரசு கட்சியின் நிர்வாக செயலாளர் எஸ்.குலநாயகம்,நாடாளுமன்ற உறுப்பினர்கள் எஸ்.சிறிதரன், ஈ.சரவணபவன், வலி.வடக்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் எஸ்.சுகிர்தன், ரெலோவின் செயலாளர் நாயகம் சிரேஷ்ட சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா, உபதலைவர் ஹென்றி மஹேந்திரன், நிதி செயலாளர் கே.என்.விந்தன் கனகரத்தினம், தேசிய அமைப்பாளர் எம்.கே.சிவாஜிலிங்கம், யாழ். மாவட்ட அமைப்பாளர் சில்வேஸ்ரரர், புளொட் அமைப்பின் செயலாளர் நாயகம் சதானந்தன், ஈ.பி.ஆர்.எல்.எப் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், பத்மநாப ஈழமக்கள் புரட்சிகர முன்னணி சார்பாக சுகு சிறிதரன், உறுப்பினர் எஸ்.மோகன், தமிழர் விடுதலைக்கூட்டணி நிர்வாகச் செயலாளர் எஸ்.சங்கையா ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். மேலும் இந்த ஹர்த்தாலுக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் இணைந்து அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்படுள்ளதாவது,

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் கே.கே.எஸ் வீதி, குளப்பிட்டிப் பகுதியில் பயணித்துக் கொண்டிருந்தபோது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கி பிரயோகத்தில் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இக்கொடூர சம்பவத்தினை நாங்கள் வன்மையாக கண்டிக்கின்றோம்.

சமாதான காலத்தில் நடைபெற்ற பல்வேறு சம்பவங்களில் பொலிஸாருக்கு உயிர் ஆபத்து ஏற்பட்டதாக எந்த ஒரு சம்பவங்களும் பதிவு செய்யப்படவில்லை. அதற்கான சான்றுகளும இல்லை. இந்த நிலையில் பொலிஸார் தமக்கு உயிர் ஆபத்து இல்லாத நிலையில் மோட்டார் சைக்கிளில் சென்ற குறித்த மாணவர்களை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காது, கொலை செய்தமை ஏற்றுக் கொள்ளப்பட முடியாத ஒன்றாகும். மாணவர்களை கொலை செய்யும் நோக்குடன் பொலிஸார் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டனர் என்பது இதிலிருந்து உறுதியாகின்றது.

மாணவர்கள் மீதான படுகொலையை கண்டித்தும், மாணவர்களின் படுகொலைக்கு நீதி கோரியும், எதிர்காலத்திலும் இவ்வாறான படுகொலைகளும், வன்முறைகளும் மாணவர்கள் மீது மீண்டும் நிகழாமல் இருப்பதனை உறுதிப்படுத்தவும் நாளை நடைபெறவுள்ள முழுமையான ஹர்த்தால் அமைதியான முறையில் இடம்பெற அனைவரையும் ஒத்துழைக்குமாறு கோருகின்றோம்.

ஹர்த்தால் தினத்தன்று அவசர மருத்துவ தேவைகளுக்காக வைத்தியசாலைகளுக்கு செல்பவர்களுக்கு இடையூறு ஏற்படுத்த வேண்டாம் என்றும், எவரும் எவ்விதமான வன்முறைகளிலும் ஈடுபடாது அமைதியான முறையில் ஒத்துழைக்குமாறும் கோருகின்றோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(செ-4-9)

# முதலமைச்சரா...

கூட ஏற்றுக் கொள்வதற்கு தயார் என்றும் வலியுறுத்தி கூறினார்.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில், மாகாண கல்வி மற்றும் பண்பாட்டலுவல்கள் அமைச்சர் சி.தண்டாயுதபாணி, விவசாய அமைச்சர் கி.துரைராஜசிங்கம், வட மாகாண கல்வி அமைச்சர் கே. குருகுலராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.சிறிநேசன் ஆகியோரும் விருந்தினராக கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய எதிர்க்கட்சி தலைவர் இரா.சம்பந்தன், தமிழ பேசும் மக்களாகிய தமிழ்- முஸ்லிம் மக்கள் தங்கள் மொழி, மதம், பண்பாடு, கலாச்சாரம போன்றவற்றை எக்காலத்திலும் பாதுகாப்பதற்கு, வடக்கு கிழக்கு நிரந்தரமாக இணைந்த தமிழ் பேசும் பிராந்தியம் அத்தியாவசியமானது என்றார்.

வடக்கு - கிழக்கு இணைந்த பிராந்தியத்தில் எந்தவொரு இனத்திற்கும் அநீதி இழக்கப்படக் கூடாது என்பதில் தாங்கள் உறுதியுடன் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இணைந்த வடக்கு - கிழக்கு பிராந்தியத்தில் தமிழர்களும், முஸ்லிம்களும் சிங்களவர்களும் திருப்தியுடன் வாழ வேண்டும். அவர்களின் அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டும். அதற்காக செய்ய வேண்டிய அனைத்தையும் செய்து கொடுப்பதற்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தயாராகவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (செ-11)

# படுகொலைக்கு...

ஏற்பாட்டில் லண்டனில் அமைந்துள்ள இலங்கைத் தூதரகத்திற்கு முன்பாக இந்த போராட்டம் இடம்பெறவுள்ளது.

நாளை முற்பகல் 11 மணி தொடக்கம் மாலை 4மணி வரை இடம்பெறவுள்ள இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில், லண்டன் வாழ் தமிழர்கள் அனைவரும் ஒன்றிணைந்து தாயகத்தில் இடம்பெறும் அநீதிக்கு எதிராக பேராட அனைவரையும் ஒன்றிணையுமாறு ஏற்பாட்டுக் குழு அழைப்பு விடுத்துள்ளது.(செ-11)

# முல்லைத்தீவில்...

பதாகைகளைத் தாங்கியவாறும் கோசங்களை எழுப்பியவாறும் தங்கள் பாடசாலைகளிற்கு முன்பாகவுள்ள பிரதான வீதிகளின் ஓரம் ஒன்று கூடி காலை 9 மணி முதல் முற்பகல் 10 மணிவரையான ஒரு மணி நேரத்திற்கு கவனயீர்ப்பை நடத்துமாறு முல்லைத்தீவு மாவட்ட பட்டதாரிகள் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.

இப் போராட்டத்திற்கு பாடசாலைகளின் அதிபர் ஆசிரியர்களையும் ஒத்துழைப்பு நல்குமாறும் அவர்கள் தங்கள் அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளனர். (செ-250-281-302)

# நிலக்கண்ணி வெடியில்...

யில், கிளாலி அல்லிப்பளையைச் சேர்ந்த இரண்டு குடும்பஸ்தர்கள் தமது கால்நடைகளை தேடிச் சென்ற வேளை, கிளாலி - அல்லிப்பளை வீதி யில் இருந்து 50 மீற்றர் தொலை விலுள்ள, கடந்த 2009 ஆண்டுக்கு முன்னர் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையி லான யுத்தத்தின் போது யுத்த சூனிய பிரதேசமாக காணப்பட்ட , நிலக்கண்ணி வெடிகள் அகற்றப் படாத பிரதேசத்தினுள் சென்ற போதே பரிதாப நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

இதன் போது அறத்தி நகர், அல்லிப் பளையைச சேர்ந்த கருப்பையா ராசா (வயது 38) என்ற எட்டு பிள்ளை களின் தந்தை தலை சிதறி சம் பவ இடத்திலேயே உயிரிழந் துள்ளார்.

கச்சாறுவெளி, பளை யைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் பகீர்தரன் (வயது 34) என்ற ஒரு பிள்ளையின் தந்தை படுகாயமடைந்த நிலையில் , வெடிப்புச் சம்பவம் நிகழ்ந்த பிரதேசத்திற்கு அண் மையில் இருந்த இராணுவத்தினர் மற்றும் பொதுமக் களால்மீட்கப்பட்டுபளை பிரதேச வைத்திய சாலையில் சேர்க்கப் பட்ட நிலையில் மேல திக சிகிச்சைக்காக யாழ்போதனா வைத் திய சாலையில்அனும திக்கப்பட்டுள்ளார்.

இந் நிலையில் இச்சம்பவம் தொடர் பான மேலதிக விசா ரணைகளை பளை பொலிஸார் மேற் கொண்டு வருகின்ற னர்.

யுத்தம் முடிவ டைந்து ஆண்டுகள் சில கழிந்த நிலை யிலும் இவ்வாறான வெடிப்புச் சம்பவங் கள் இடம் பெறுகின் றமை அப்பகுதி மக் கள் மத்தியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தி யுள்ளமையையும் அவ தானிக்க கூடியதாக வுள்ளது. (செ-15.312)

# யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள்...

கந்தரோடைப் பகுதியினைச் சேர்ந்த விஜயகுமார் சுலக்சன் (வயது 24), கிளிநொச்சி - இரணைமடுப் பகுதி யினைச்சேர்ந்த நடராஜா கஜன் (வயது 23) ஆகிய இரு பல்கலைக்கழக மாணவர் கள உயிரிழந்திருந்தனர்.

உயிரிழந்த மாணவர் ஒருவரின் இடப்பக்க விலாப் பகுதியின் ஊடாக துப்பாக்கி சன்னம் பாய்ந்து அவருடைய நெஞ்சை பிளந்து சென்றுள்ளது என பிரேத பரசோதனை அறிக்கை தெரிவிக்கின்றது.

இதனை அடுத்து பல போராட்டங் களுக்கு பல்வேறு அமைப்புக்கள் அழைப்பு விடுத்தது வரும் நிலையில் இன்றையதினம் மாணவர்களால் அமைதி வழியிலான போராட்டம் ஒன்று இடம்பெறவுள்ளது. இந்த பேரணியின் முடிவில் கந்தரோடை யில்நடைபெறவுள்ள மற்றைய மாண வனின் இறுதி சடங்கிற்கு செல்வது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நேற்றைய தினம் கிளிநொச்சியில் இடம்பெற்ற மாண வனின் இறுதி நிகழ்வின் போது ஏ9 வீதியை வழிமறித்து மாண வர்கள பேரணியாக போராட்டத்தில் ஈடுபட்டி ருந்தனர். இதனால் போக்குவரத்து மூன்று மணித்தியாலங்கள் வரை தடைப்பட்டிருந்தது. (செ-4)

# கிளிநொச்சியில்...

றியம் மற்றும் பொது அமைப்புக்கள் இணைந்து இன்றைய பேரணிக்கு அழைப்பு விடுத்துள்ள னர்.


கிளிநொச்சி கந்தசாமி கோவில் முன்றலில் இருந்து ஆரம்பித்து கிளி நொச்சி மாவட்ட செயலகத்தைச் சென்றடைவுள்ள இந்த பேரணியில், பாடசாலை மாணவர்கள், பழைய மாண வர்கள், சிவில் பொது அமைப்புக்கள், வர்த்தகர்கள், கல்விச்சமூகத்தினர், பல்கலைக்கழக மாணவர்கள், அரசியல் வாதிகள் ஆகியோரை இதில் கலந்து கொள்ளுமாறு கிளி நொச்சி மாவட்டபழைய மாணவர் சங்கங்களின் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.

இதே வேளை பேரணி இடம்பெற வுள்ள முற்பகல் 10 மணி தொடக்கம் 11 மணி வரையான ஒரு மணித் தியாலயம் வர்த்தக நிறு வனங்கள், திணைக் களங்கள் மற்றும் கல் விச்சமூகத்தினர் கத வடைத்து ஆதரவு தரு மாறும் ஏற்பாட்டுக் குழு வினர் கோரிக்கை விடுத துள்ளனர்.

(செ-250,281,302)

# கண்ணீர் அஞ்சலி

## நாராயண சர்மா பத்மநாதக்குருக்கள்



கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தில் உதவி அர்ச்சகராக கடமையாற்றும் **வைத்தீஸ்வர சர்மா** அவர்களின் அன்புத் தந்தையார் **நாராயண சர்மா பத்மநாதக்குருக்கள்** 23.10.2016 இறைபதம் அடைந்து விட்டார். அன்னாரின் ஆத்மா சாந்தி பெற எல்லாம் வல்ல மஞ்சவனப்பதி முருகனை பிரார்த்திக்கின்றோம்.

(6431)

தர்மகர்த்தா சபை
கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயம்

# மரண அறிவித்தல்

## பொன்னுத்துரை கதிர்காமநாதன் (அப்புச்சி)



ஊரெழுவைப் பிறப்பிடமாகவும் கைத டியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை கதிர்காமநாதன் அவர் கள் நேற்று 23.10.2016 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - சரஸ்வதி ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர் களான சரவணமுத்து - தெய்வானை ஆகியோரின் அன்பு மருமகனும் கனகம் மாவின் பாசமிகு கணவரும், மதீபன், மருபன், மகிந்தா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவசோதி, ஜெகசோதி, தவ சோதி, வரதநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று 24.10.2016 திங்கட்கிழமை பிற் பகல் 2.00 மணியளவில் அன்னாரது ஊரெழு இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிகைக்காக ஊரெழு பொக்கணை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிவசோதி - ஊரெழு மேற்கு, சுன்னாகம்.

(6432)

தகவல் :- குடும்பத்தினர் 021 205 4724


வீடு வாடகைக்கு உண்டு

கோவில் வீதியில் அமைந்துள்ள சகல வசதிகளைக்கொண்ட மேல் மாடி வீடு வாடகைக்கு உண்டு. அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு கொடுப்பதற்கு விரும்பத்தக்கது.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி 158/2, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே.இல. :– 0773127498

நீங்கள் தொழில் தேடுபவரா?
முன்னணி நட்சத்திர ஹோட்டேல்களில் Front Office, Restaurant, Room Service, Kitchen போன்ற பகுதிகளில் வேலைவாய்ப்புடன்
O/L உடன் Diploma in Hotel Management
CERTIFICATE - DIPLOMA - DEGREE
With FREE English Course
Up to 30% Discount
பயிற்சிக் காலத்திலேயே உழைக்கும் வாய்ப்பு
கற்கைநெறி நிறைவில் நிரந்தர வேலைவாய்ப்பு
வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு விசா ஏற்பாடு
புதிய பிரிவுகள் ஆரம்பம் Week & Weekend Batch
அனுமதிகளுக்கு 077 3616 798
www.sikaram.lk
Sikaram Academy
021 222 0011
SIKARAM ACADEMY SCHOOL of HOSPITALITY
(C-6190) இல.175, 1ஆம் குறுக்குத்தெரு (வேம்படி வீதி), யாழ்ப்பாணம்.

அமெரிக்க லொத்தர் விசா
2018ல் நீங்களும் அமெரிக்காவில்...
ஒரு உறுதியான முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!
அரிய வாய்ப்பு - சில தினங்களுக்கு மட்டுமே 0768226230
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற ஓர் அரிய சந்தர்ப்பம்
சென்ற வருடம் (2015) எம்மூடாக விண்ணப்பித்தவர்களுள் 19 பேர் அமெரிக்க விசாவிற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
எம்மூடாக விண்ணப்பித்தவர்கள் விசா பெற்று அமெரிக்கா சென்றுவிட்டார்கள்.
(C-6176)
யாழ்ப்பாணம் 0768226241 | கிளிநொச்சி 0768226240 | நெல்லியடி 0776699392 | பருத்தித்துறை 0768226237 | வல்வெட்டித்துறை 0776397930
மேலும் தகவல்களுக்கு--> www.facebook.com/v2tandt

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603 021 567 1532

அவதானமாக இருங்கள்
மிக குறைந்த கட்டணத்திலான வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை
பொதிகள் சேவை தொடர்பான சர்வதேச சட்டம் மற்றும் ஒழுங்கை மீறும் வகையில் குறைந்த கட்டணத்தில் அனுப்பப்படும் பொதிகள் பாதுகாப்பாக உரிய நேரத்தில் சென்றடைவது சாத்தியமற்றதே.
நியாயமான கட்டணத்தில் நிறைவான பொதிகள் சேவையை 20 வருட காலமாக வழங்கி வரும் நாம்
மிகச் சரியான தெரிவு அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் Tel : 021 222 3536
இல.10, கஸ்தூரியார் வீதி, புதிய மாநகரசபை கட்டடத்தொகுதி, யாழ்ப்பாணம்.
(C-6259)
அருள் குளோபல் எக்ஸ்பிரஸ்
இல.1 பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம். Tel : 021 222 6113

விற்பனைக்கு
யாழ் நகரின் மையப்பகுதியில் 160 பேச்சஸ் காணித்துண்டும் 120 பேச்சஸ் காணித்துண்டும் 200 பேச்சஸ் காணி துண்டும் மற்றும் திருநெல்வேலி பரமேஸ்வரா சந்தியில் பலாலி வீதி முகப்புடன் 8 பரப்பில் அமைந்த வீட்டுடன் காணித்துண்டும் திருநெல்வேலி சந்தியில் பலாலி வீதி முகப்புடன் 10 பரப்பு காணித்துண்டும் மற்றும் 6 பரப்புடன் வீட்டுடன் காணித்துண்டும் மற்றும் சுண்டுக்குழி A9 வீதியில் பஸ்ரியான் ஹோட்டலுக்கு அண்மையில் 6 பரப்பு காணித்துண்டும் 3 பரப்புடன் வீட்டுடன் காணித்துண்டும் மற்றும் யாழ். வைத்தியசாலை வீதியில் நகரின் மத்தியில் 50 அடி அகலம் 200 அடி அகல காணித்துண்டும் உடன் விற்பனைக்கு உண்டு. அத்துடன் பண்ணை டாஸ் தரிப்பிடத்திற்கு அருகில் காணித்துண்டும் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு :– கனகசபை தர்மகுலசிங்கம்
இல.189, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். T.P. :- 0777232535
(C-6257)

வாடகைக்கு
யாழ்.நகரின் வர்த்தக மையப் பகுதியில் பஸ்தரிப்பிடத்திற்கு முன்பாக 3 மாடி கட்டடம் வாடகைக்கு உண்டு. மற்றும் யாழ் நகரில் 3 மாடி கட்டத் தொகுதி 4500 சதுர அடி, வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு :--
T.P. :- 0777 232535


இப்பத்திரிகை வலம்புரி அச்சகம் ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.10.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.